MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

சிவமயம்.

குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்த

காசிக்கலம்பகம்.

இஃது

சென்னைக் கவர்னமெண்டு

நார்மல் பாடசாலைத்

தமிழ்ப்புலவராயிருந்த

தி - க - சுப்பராயசெட்டியாரால்,

பலபிரதிகளைக்கொண்டுபரிசோதித்துத்

தாமியற்றியவுரையோடு

திராவிடரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

செ ன னை ரு ளோ

இதன்விலை அணா ௧. தபாற்செலவு பை ௬.
விரோதிகிருது ஆடிமீ

பரமபதிதுணை

காசிக்கலம்பகம்.

காசியிலெழுந்தருளிய இறைவன் மேலந்தாதித் தொடையாய்ப் புயவகுப்புமுதலியவுறுப்புகளைத் தன்னகத்துக் கலத்தலமைந்தநூலென இரண்டு சொல் ஒருசந்தியாய்விரவித்தொக்க அன்மொழித் தொகைநிலைத்தொடராய்ப் பிரபந்தத்திற்குக் காரணக்குறியாய் நின்றது. காசி ஒருதிருப்பதி; அது இடவாகுபெயரா யிறைவன்மேல்நின்றது; அந்தாதித்தொடை ஒருசெய்யுளினிறுதி மற்றொருசெய்யுளின் முதலில்வரத்தொடுப்பது; கலம்பகம்—புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல்என்னும் பதினெட்டுறுப்பும் தன்னகத்துக் கலத்தலமைந்தது; கலப்பு அகம்என்னுமிரண்டு சொல்லும் ஒருசொல்லாய்மெலித்தல் விகாரம்பெற்றுப் பிரபந்தத்தின்மேல் நின்றன; இது ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகைநிலைத்தொடர். கலம்பகம் ஏழாம்வேற்றுமையின் பயனிலையாகிய கலப்பு என்னும் வருமொழி நிலைமொழியா யீறுகெட்டுப் புணர்ந்தமையால் இலக்கணப்போலியா யல்வழியாயிற்று, வேற்றுமையல்லாதனவெல்லாம் அல்வழியாதலால்.

காப்பு.

நேரிசைவெண்பா

பாசத்தளையறுத்துப் பாவக்கடல்கலக்கி
நேசத்தளைப்பட்டுநிற்குமே—மாசற்ற
காரார்வரையீன்ற கன்னிப்பிடியளித்த
ஓராளைவந்தென் னுளத்து.

இ - ள். மாசு அற்ற கார் ஆர்வரை ஈன்ற கன்னிப்பிடி—குற்றமொழிந்த மேகந்தவழு மிமயமலைபெற்ற கன்னித்தன்மையை யுடைய பெண்யானை, அளித்த ஓர் ஆனை என் உளத்துவந்து—பெற்றருளிய ஒருயானையானது எனதுமனமாகியகூடத்தில் கருணைகூர்ந்துவந்து, பாசம்தளை அறுத்து—காமியமாகிய பாசவிலங்கினையறுத்து, பாவம்கடல்கலக்கி—பாவமாகியகடலைக்கலக்கி, நேசம்தளைபட்டுநிற்கும்—அன்பாகியதளையிற்கட்டுண்டுநிற்கும்.

இமயமலையில் திருவவதாரஞ்செய்தமையால் வரையீன்றளனவும், எல்லாவுலகங்களையும் பெற்றருளியும், கன்னியா யிருத்தலால் கன்னியெனவும், எண்சாணுடம்பிற்கும் தலையேபிரதானவுறுப்பாதலால் விநாயகக்கடவுளை யானையெனவுங்கூறினர். யானைக்குத்தளையையறுத்தலும் கடலைக்கலக்குதலும், தளையிற் கட்டுண்டுநிற்றலும் அதன் தொழில்களாதலால் தொழிற்றன்மை

யணியோடு பாசத்தளை, பாவக்கடல், நேசத்தளையென வுருவக வணியுமமைந்துநிற்றலால் கலவையணி. ஒருநூல்செய்வோன் அந்நூல் இடையூறின்றி முடிதற்கு முதலில் விநாயகனைக் காவலாகக் கொள்ளவேண்டுதலா லிச்செய்யுள் காப்பாயிற்று. யானையாயின் பாசத்தளை யென்றது கயிறாகிய தளையை யெனவும், வரையீன்றகன்னிப்பிடி மலையிற்றோன்றிய இளம்பிடியெனவுங் கொள்க

நூல்

மயங்கிசைக் கொச்சககலிப்பா

[இவை இரண்டும ஆறடித்தரவு]

நீர்கொண்டகடலாடை நிலமகளுக்கணியான—கார்கொண்டபொழிற்காஞ்சிக்கடிநகரங்களிதாங்க, இடமருங்கிற்சிறுமருங்குற் பெருந்தடங்கணின்னமிர்தம்—சடைமருங்கினொடுந்திரைக்கைப்பெண்ணமிர்தந்தலைசிறப்பக், கண்கதுவுங்கடவுண்மணிதெரிந்தமரர்கமமியன்செய்—விண்கதுவுபொலங்குடுமிவிமானத்தின்மிசைப்பொலிந்தோய், நிற்பனவுந்தவழ்வனவு நடப்பனவுமாய்நிலத்துக்—கற்பமளவிலகண்டுழறுகளைகண்காணுமே, பழங்கணுறுமுயிர்கடுயர்க்கடனீந்திப்பழங்கருணை—வழங்குபரமாநந்தமாக் கடலிற்றிளைத்தாட, உரையாதபழமறையின் முதலெழுத்தினொண்பொருளை—வரையாதுகொடுத்திடுநின்வள்ளன்மைவாழ்த்துதுமே

[இவையாறும்ஈரடித்தாழிசைகள்.]

நீரெழுத்துக்கொத்தவுடனீத்தாக்குநீ நவில்வ - தோரொழுத்தேமுழுதும வொவ்வண்ணமுணர்வதுவே, என்பணிவ துடுப்பதுதோ லெமபிரான்றமர்களவர்—முன்பணியும்பேறுடையார் திசைமுகனுமுகுந்தனுமே; செடிகொண்முடைப்புழுக்கூடேசிற்றடியோமிடுதிறைமற்—றடிகளடியார்க்களிப்பதாநந்தப் பெருவாழ்வே, பற்பகலோற்றருந்தவரும்பெறற்கரியபரந்தாமம்-எற்புடல்விட்டடியேமுங்கொளப்பெறுவ திறும்பூதே, நிணம்புணர்வெண்டலைக்கலன்கொணேரிழைமுத்தித்திருவை—மணம்புணாவாக்கையனருண்மணவாளகமே, முடைத்தலையிற்பலிகொள்வான் மூவுலகுமவரவர்தங்—கடைத்தலைய் திரிவதுகொல்யாம்பெறுநின்காணியே,

[இவைநான்கும் ஈரடி அராகங்கள்.]

உளதெனவிலதெனவொருவரோரளவையின்—அளவினிலளவிடலரியதொருருவினை. இதுவெனலருமையினெழுதருமொழிகளும்—அதுவலவெனுமெனிலெவருனையறிபவர். அவனவளதுவெனு மவைகளினுளனலன்—எவ்வணவனிவனென வெதிர்தரு தகைமையை. அறிபவரறிவினு ளறிவுகொடறிவுறு—நெறியலதொருவருமறிவருநிலைமையை

[இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம்]

ஆணொடுபெண்ணுரு வமைந்துநின்றனை—பூண்முலை கலந்துமைம் புலனும்வென்றனை, எண்வகையுறுப்பினோருருவெடுத்தனை—தொன்மறைப்பனுவலின்றொடைதொடுத்தனை.

காசிக்கலம்பகம்

[இவையெட்டு முச்சீரோரடியம்போதரங்கம்]

வடவரைகுழையவளைத்தனை—மலைமகள்முலைகடிளைத்தனை
விடமமிர்தமரவிளைத்தனை—விசயனொடமர்செய்திளைத்தனை
வரிசிலைமதனையெரித்தனை—மதகரியுரிவைதரித்தனை
அருமறைதெரிபவிரித்தனை—அலகில்பல்கலைகடெரித்தனை.

[இவைபதினாறும் இருசீரோரடி அம்போதரங்கம்.]

அழல்விழித்தனை—பவமொழித்தனை
ஆறணிந்தனை—மாறணிந்தனை
மழுவலத்தினை—முழுநலத்தினை
மாநடத்தினை—மானிடத்தினை
அலகிறந்தனை—தலைசிறந்தனை
அருள்சுரந்தனை—இருடுரந்தனை
உலகளித்தனை—தமிழ்தெளித்தனை
ஒன்றுமாயினை—பலவுமாயினை.

[இவைநான்கும் ஈரடித்தாழிசைகள்]

அலகில்பலபுவனங்க ளடங்கலுமுண் டொழிப்பாய்க்கு—கொலைவிட முண்டனையென்று கூறுவதோர்வீறாமே, பயின்மூன்றுபுவனமுங்கட்பொறிக் கிரையாப் பாலிப்பாய்க்—கெயின்மூன்றுமெரிமடுத்தா யென்பதுமோரிசையா மே, அடியவரோமுக்குறும்பு மறவெறிந்தாரொனிலடிகள்—விடுகணையிற் காம னைநீவென்றதுமோர் வியப்பாமே, இக்கூற்றின்றிருநாமத் தொருகூற்றுக்கி லக்கென்றால்—அக்கூற்றங்குமைத்தனையென் றிசைப்பதுமோரற்புதமே.

எனவாங்கு

[இது தனிச்சொல்.]

[இதுபத்தடிநேரிசை யாசிரியச்சுரிதகம்]

உலகுசூழ்கொண்டதலைவியுநீயும்
மலைபகவெறிந்தமழவிளங்குழவியை
அமிர்தமூற்றிருக்குங்குமுதவாய்த்தேறல்
வண்டுகினனைப்பமடித்தலத்திருத்திக்
கண்களிற்பருகியக்காமருகுழவி
எழுதாக்கிளவியின்சுவைபழுத்த
மழலைநாறமிர்தம்வாய்மடுத்துண்ணச்
செஞ்சொனிறைத்தநும்மஞ்செவிக்கடிகளென்
புன்மொழிக்கடுக்கொளப்புகட்டினன்
இன்னருள்விளைதருவாயிறும்பூதுடைத்தே.

இ - ள். நீர்கொண்டகடல் ஆடை நிலமகளுக்கு அணி ஆன—நீர்நி றைந்தகடலை ஆடையாகவுடுத்தபூதேவிக்கு ஆபரணமாகிய, கார்கொண்டபொ ழில்காசி கடிநகரம் குளிர் தூங்க—மேகந்தவழுஞ்சோலைசூழ்ந்த காவல்சொண் —காசித்திருநகரங் குளிர்ச்சியோடுநிலைபெற, இடம்மருங்கு இல்சிறுமருங்குல்

பெருந்தடங்கண் இன் அமிர்தம்—இடப்பாகத்திற்சிறிய இடையையும் பெரிய பரந்தகண்களையுமுடையவுமாதேவியாகிய இனிய அமிர்தமும், சடைமருங்கு இல் நெடுந்திரைகைபெண் அமிர்தம் தலைசிறப்ப — சடாமுடியின்பக்கத்தில் நெடிய அலைகளாகிய கைகளையுடையபெண்களுக்கு அமுதுபோன்ற கங்காதேவியும் அவ்விடத்தில் மகிழ்கூர்ந்திருக்க, கண்கதுவு கடவுள் மணிதெரிந்து அமரர் கம்மியன்செய் — சட்புலங்களைப்பற்றுந் தெய்வத்தன்மையையுடைய மாணிக்கங்களை யாராய்ந்தெடுத்துத் தெய்வத்தச்சன்செய்த, விண்கதுவு பொலன்குடுமி விமானத்தின்மிசைப்பொலிந்தோய்—ஆகாயத்தையளாவியபொன்னாற்செய்த சிகரத்தையுடைய விமானத்தின்கண் விளங்கிய விறைவனே, நிலத்துநிற்பன உம் தவழ்வன உம் நடப்பன உம் ஆய்—நிலவுலகில் நிற்றலும் தவழ்தலு நடத்தலுமுடையனவாகி, அளவிலகற்பகண்டும் உறுகளை கண்காணாமே—அளவிறந்த பிரமகற்பம் பலகண்டும் தமக்குற்ற ஒருபற்றுக் கோடுகாணாமல், பழங்கண் உறும் உயிர்கள் துயர்கடல்நீங்கி—பிறவித்துன்பத்திலழுந்திய ஆன்மகோடிகள் அத்துன்பக்கடலைநீங்கி, பரங்கருணைவழங்கு பரமானந்தம் மாகடலில் திளைத்து ஆட—மேலானநினது திருவருள்கொடுக்கும் பேரின்பமாகிய எல்லையில்லாதகடலில் அழுந்தொழுகியழுந்த, உரையாதபழமறையின் முதலெழுத்தின் ஒண்பொருளை—வரையறுத்துச்சொல்லுதற்கரிய தொன்றுதொட்டுள்ள வேதங்களின் முதலெழுத்தாகிய பிரணவத்தினது ஒள்ளிய பொருளினை, வரையாது கொடுத்திடும் நின் வள்ளன்மை வாழ்த்துதும்—விலக்காதுகொடுத்தருளும் உனதுபெருங்கொடையை வாழ்த்தாநின்றேம்.

ஆன என்னு மிறந்தகாலப்பெயரெச்சம் காசியென்னும் வினைமுதற்பொருள்கொண்டது. கார்கொண்ட பொழில் இடைப் பிறவரல். அமுதமுள்ள விடத்துக் குளிர்ச்சிநிலைபெறுதலால் தூங்க என்னும் எதிர்கால வினையெச்சம் சிறப்ப என்னும்வினையெச்சத்தின்முதனிலையையும் அவ்வெச்சம்பொலிந்தோய்என்னும் வினைமுற்றின்முதனிலையையு முறையேகொண்டன. சிறு[illegible]ருங்குல்பெருந்தடங்கண் சொன்முரண். அமுதத்தாற்குளிர்தூங்கஎன்றதனால் [illegible]வின்பமும் பிணியின்மையு முயிர்களுக்குறுதல் புலப்படுதலின் உதாரவ[illegible] நீத்து எனப் பாடங்கொண்டால் நீக்கியெனப்பொருள்கொள்க.

நீர் எழுத்துக்கு ஒத்த உடல் நீத்தார்க்கு — நீரிலெழுதியவெ[illegible] பொழுதே யழிதல்போலத் தோன்றியபோதே யழியும் உடற்சுமை விட்டவர்க்கு, நீநவில்வது ஓர் எழுத்தே—நீயுபதேசிப்பது ஓரெழுத்[illegible] லரிய [illegible]ணவமே, அவர்முழுதும் எ வண்ணம் உணர்வது—அவர்கள் அ[illegible]வனு முற்றுமெவ்வாறறிதல்கூடும், எம்பிரான்தமர்கள்—எமதிறைவனுறவினராகிய அடியவர்கள், அணிவது என்பு உடுப்பதுதோல்—(சாரூப்பியம் பெறுதலால்) அணிவதுஎலும்புஉடுப்பது சருமம் உடையவரானாலும், திசைமுகனும்முகுந்தனும் முன்பணியும்பேறுஉடையார் அவர்—பிரமனுந்திருமாலுந்தம்முன்வணங்கும்பயனையுடையவர் அவ்வடியவரோ, சிற்றடியோம் இடுதிறை செடிகொள் முடைபுழுக்கூடு எ — அடித்தொண்டராகிய யாம்தேவரீருக்கு இடுந் திறைப்பொருள் புதனழிந்த முடைநாற்றத்தையுடைய புழுச்செறிந்தகூடாகிய உடம்

யையே, மற்று அடிகள் அடியார்க்கு அளிப்பது ஆநந்தம் பெருவாழ்வு ஏ—அதற்குப் பிறிதுகைம்மாறாகத் தேவரீர் அடியவர்க்கு அருளுவது பேரின்பமாகிய பெரியவாழ்வினையே, பல்பகல் நோற்று அருந்தவரும் பெறற்கு அரிய பரந்தாமம்—பலநாளுந்தவஞ்செய்து செய்தற்கரியதவம்வாய்ந்தவரும் அடைதற்கரிய முத்தியை, என்பு உடல்விட்டு அளியேமும் கொளப்பெறுவது இறும்பூது ஏ—எலும்பாகிய உடலினை விட்டுத் தேவரீரையன்றித் துணையில்லாத யாமும் அடைவது ஒருபெருவியப்பே, முத்திநாரிமை இருவை மணம்புணர்வார்க்கு ஐயன் அருள்மணவாளக்கோலம்—மோட்சமாகியபெண்ணை மணஞ்செய்யுஞ் சாரூப்பியமடைந்தகணங்களுக்குத் தேவரீரருளுங்கல்யாணக்கோலம், நிணம் புணர் வெண்டலை கலன் ஒரால்—நிணமமைந்த வெள்ளிய தலையோடாகிய பலிக்கலனே, யாம்பெறும்நின்காணி—(சாரூப்பியம் பெற்று)நாமடையும்தேவரீர் காணியானது, முடைதலையில் பலிகொள்வான்—முடைநாற்றமமைந்த தலையிற்பலிகொள்ள, மூவுலகும் அவர் அவர்தம் கடைத்தலையில் திரிவது—மூன்றுலகங்களிலுமுள்ள அவரவர்களுடைய தலைக்கடையில் திரிவதோ (தேவரீர் திருவாய்திறந்தருள்வீர்) வெள்ளைமையென்றது வெற்றையெனக்கொள்க.

எழுத்து எழுதப் படுவதென்னும் பொருள்மேல நிற்றலால் செயப்படுபொருளுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்துகெட்டு நின்றதொழிற்பெயர். இது பலபொருள்பட்டுநிற்கும் அதனைவிரிக்கிற் பெருகும். மற்று பிறிது பொருளில்வந்த இடைச்சொல். நோற்று இறந்தகால வினையெச்சம் நோல் பகுதி. எற்புடம்பு அல்வழியில மென்றொடர் வன்றொடராதல் "மென்றொடர்மொழியில்" என்னுஞ்சூ—இல் "மன்" என்றமிகையால். வாழ்வே என்பதில் ஏகாரம் தேற்றப்பொருட்டு. இறும்பூதே என்பதில் ஏகாரம் வினாப்பொருட்டு. சிவசாரூப்பியம் பெற்றவர்கள் அச்சிவச்செயலிற் சிறுபான்மை செய்வது இயல்பாதலால் வெண்டலைக்கலன்கொல், கடைத்தலையிற்றிரிவது எனவும் காசியில் உயிர்விடுவோர்க்கு இறைவர்சென்று உபதேசித்தலில் நீநவில்வது ஓரெழுத்தேயெனவுங்கூறினார். திருவாய்திறந்தருளுவீர் சொல்லெச்சம்.

உளது என்ன இலது என்ன—உருவமுண்டென்றும் இல்லையென்றும், ஒருவர் ஓர் அளவையின் அளவினில் அளவிடல் அரியது ஓர் உருவினை—ஒருவர் அளவை மூன்றுளோரளவையினளவாலும் அளவிடுதற்கரிய ஓர் திருவுருவத்தையுடையாய், எழுதருமொழிகளும் இது என்னல் அருமையின் அது அல்ல என்னும் என்னில்—வேதங்களும் பரத்தை இதுவென்று சுட்டிக்கூறுதலருமையால் அறிந்த அதுபரமல்லவென்று கூறுமாகில், உன்னை அறிபவர் எவர்—உன்னையுணர்வோர்யார், அவன் அவள் அது என்னும் அவைகளின் உளன் அலன் எவன் ஓ—ஆண்பெண் அலியென்று சுட்டிக்கூறும் அப்பொருள்களிலுள்ளவன் அல்லாதவனெவனோ, அவன் ஏ இவன் என்ன எதிர்தருதகைமையை—அவனேயிவனென்றுகூற அடியவர்க்கு எதிர்ப்படுந் தன்மையையுடையாய், அறிபவர் அறிவின் உள் அறிவுகொடு அறிவுறும்நெறி அல்லது—தன்னையுணரும் அடியவர்கள் தமதுமெய்யுணர்ச்சியில் அவ்வுணர்ச்சியைக்

கொண்டுணரு நெறியேயன்றி, ஒருவரும் அறிவருநிலைமையை—அவரொழிந் தோருளொருவருமறிதற்கரிய நிலைமையையுடையாய்.

மூன்றளவை பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம். எவன் என்பதனிறுதியில் வினுப்பொருளில்வந்த ஓகாரமும், அவன் என்பதனிறுதியிலும் நெறியென்பதனிறுதியிலும் பிரிநிலை ஏகாரமுந்தொகுத்தல்.

ஆண் ஒடு பெண் உரு அமைந்துநின்றனை—(ஆன்மாக்களுக்கு அருளுதற் பொருட்டு ஒருதிருவுருவத்தில்) ஆணுருவும் பெண்ணுருவு மமைந்துநின்ருய், பூண்முலைகலந்தும் ஐம்புலனும்வென்றனை—ஆபரணத்தையணிந்த தனத்தையுடைய உமாதேவியாரை யொருபாதியிறகலந்தும் ஐம்புலங்களையுமவென்ருய், எண்வகைஉறுப்பு இன் ஓர்உருஎடுத்தனை—பிருதுவிமுதலெட்டுவகைப் பட்டவுறுப்புகளாலொருதிருவுருவங்கொண்டாய், தொல்மறைபனுவலின்தொடை தொடுத்தனை—தொன்று தொட்டுள்ள வேதமாகிய நூற்ருெடையை ஆன்மாக்கள்தன்னை யுணர்ந்துய்யத்தொடுத்தாய்.

ஐம்புலன் சத்தபரிச ரூபரசகந்தங்கள். எண்வகை யுறுப்பு பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம, சந்திரன், சூரியன், ஆன்மா. பெருந் துறவையுடையாயென்பார் பூண்முலைகலந்து மைம்பொறியும் வென்றனை யெனவும், எங்கும் நிறைந்துள்ளவன் என்பார் எண்வகை யுறுப்பி ேனுருவெடுத்தனை யெனவுங்கூறினர். ஒடு எண்ணொடு.

வடவரை குழைய வளைத்தனை—மேருமலைவளைய வில்லாக வளைத்தாய், மலைமகள் முலைகள் திளைத்தனை—உமாதேவியார் திருத்தனங்கள் திளைக்கத் திளைத்தாய், விடம் அமிர்து அமரவிளைத்தனை—விஷமமிர்தமாகவிருக்கத் திருமிடற்றில்வைத்தருளினாய், விசயனொடு அமர்செய்து இளைத்தனை—அருச்சுனனோடுபோர்செய்து இளைத்தாய், வரிசிலைமதனை எரித்தனை—கட்டமைந்தவில்லையேந்திய மன்மதனையெரித்தாய், மதகரி உரிவை தரித்தனை—யானையின்ரேலைப் போர்வையாகப்போர்த்தருளினாய், அருமறை தெரிய விரித்தனை—அரிய வேதங்களின்பொருளைசனகன்முதலிய முனிவர்களுணரவிரித்தருளினாய், அலகு இல் பல்கலைகள் தெரித்தனை—அளவில்லாத ஆகம முதலிய நூல்களினுள்ளுறையை யடியவர்களுக்குத் தன்னையுணரவிரித்தருளினாய்.

உமாதேவியார் இடப்பாகம்பெறக் கம்பாநதியில் சிவலிங்க பூசனை செய்தருளத்தாழாது கம்பையாற்றையேவச் சிவலிங்கப்பெருமானுக்கு இடையூறு வருமே என இறுகத் தழுவினர் ஆதலால் மலைமகள் முலைகடிளைத்தனையெனவும், அருச்சுனன் தன்னைநோக்கித் தவஞ்செய்தகாலத்தில் அவனை யழித்தற்குத் துரியோதனனேவிய மூகாசுரன்பன்றியாய்வரச் சிவபெருமான் வேடுருக்கொண்டு அப்பன்றியைக்கொன்று அருச்சுநனோடு போர்செய்தனனாதலால் விசயனோடமர்செய்திளைத்தனையெனவும், சநகர்முதலிய முனிவர்கள் நால்வருக்கும் வீட்டினெறியையுணர்த்தியருளக் கல்லாலின்கீழெழுந்தருளிய காலையில்தேவர்கள் சூரபன்மனாலிடர்ப்பட்டு மன்மதனையேவ அவனைநெற்றிக்கண்ணாலெரித்தருளினமையால் வரிசிலைமதனை யெரித்தனை யெனவும், கயமுகாசுரன்செய்யு மிடர்க்காற்ருது முனிவர்களஞ்சிக் காசியையடைய அஞ்சாது

அங்குமவர்கள்பின்சென்று இறைவர் திருமுன்னடைய அவனைக்கொன்றுரித்துத் தோல்போர்த் தருளினராதலால் மதகரியுரிவை தரித்தனையெனவும், படைப்புக்காலத்தில் வேதத்தின்பொருளையுணராது முனிவர்கள் திருவாலவாயையடைந்து நோற்றுவர இறைவர் அந்தணர் திருவுருக்கொடுவந்தருளினமையால் அருமறைதெரிய விரித்தனையெனவும், ஆகமமுதலிய நூல்களினுட்கிடையையுணராது மகேந்திரமலையில் அடியவர்முதலிய முனிவர்கள்தவஞ்செய்ய இறைவர் எழுந்தருளியருளினமையால் அலகில்பல் கலைகடெரித்தனையெனவுங்கூறினார்.

அழல் விழித்தனை—நெற்றிக்கண்கள் தோன்ற விழித்தருளினாய், பவம் ஒழித்தனை—அடியவர்பிறவியையொழித்தருளினாய், ஆறுஅணிந்தனை—கங்கையணிந்தருளினாய், மால் தணிந்தனை—(பெண்ணையொருபாற்கொண்டும்) மயக்கொழிந்தாய், மழுவலத்தினை — மழுவாயுதத்தினை வலக்கரத்திலேந்தினாய், முழுநலத்தினை — எல்லாநலங்களையு முடையாய், மாநடத்தினை—ஆநந்தத்திருநடமுடையாய, மான் இடத்தினை — மானை யிடக்கரத்திலேந்தினாய், அலகு இறந்தனை — அளவையைக்கடந்தாய், தலைசிறந்தனை — (எல்லாத்தேவர்களுக்கும்) முதலாகச்சிறந்தாய், அருள் சுரந்தனை—(அடியவர்களுக்கு)அருள்சுரந்தருளினாய், இருள் துறந்தனை — அஞ்ஞானத்தையோட்டினாய், உலகு அளித்தனை —உலகங்களைப்படைத்தருளினாய், தமிழ்தெளித்தனை —அகத்திய முனிவர்க்குத் தமிழிலக்கணமருளினாய், ஒன்று உம்ஆயினை—ஏகப்பொருளுமாய், பல உம் ஆயினை—பலபொருளு மாயுமுள்ளாய்.

உமாதேவியார் திருக்கண்புதைத்தகாலத்தில் சந்திரசூரியர்களியக்கமறவுலகிருண்டுவருந்தினமையா லுயிர்கண்மேற் கருணைகூர்ந்து அனற்கண்திறந்தமையால் அழல்விழித்தனையெனவும், அகத்தியமுனிவர் விடைபெற்றுப் பொதியமலைக் கேகும்போது தென்பாலுள்ள கவிஞர்களுக்கு யாதுவிடைகொடுப்போனென்றிரப்பத் தமிழ்க்கிலக்கணமுபதேசித்தருளினமையால் தமிழ்தெளித்தனையெனவும், தேவதாருமுனிவரேவிய மழுவையு மானையுமேந்தினமையால் மழுவலத்தினை மானிடத்தினையெனவுங்கூறினார்.

அலகுஇல் பலபுவனங்கள் அடங்கலும் உண்டு ஒழிப்பாய்க்கு (முன்னர்க்கூறிய தன்மைகளை யுடைவனாய்) அளவில்லாத பலபுவனங்களையு மவற்றிலுள்ள உயிர்களையு முண்டருளி யொழிக்குமுனக்கு, கொலைவிடம் உண்டனை என்று கூறுவது ஓர்வீறு ஆம்ஓ — கொல்லுந்தொழிலையுடைய விடத்தையுண்டருளினா யென்று கூறுதலுமுனக்கொரு பெருமையா, பயில் மூன்று புவனம் உம் கண் பொறிக்கு இரையாய் பாலிப்பாய்க்கு — நிலைபெற்ற சுவர்க்கமத்திய பாதலமென்னுமூன்றுலகங்களையு மனற்கண் தீப்பொறிக்கு இரையாகப் பாலித்தருளு முனக்கு, எயில்மூன்றும் எரிமடுத்தாய் என்பதும் ஓர்இசையாம்ஓ—திரிபுரங்களிலுந் தீமூட்டினாயென்றுகூறுதலுமுனக்கொருபுகழாகுமா, அடியவரே முக்குறும்புஉம் அறஎறிந்தார் என்னில்— தேவரீரடியவர்களே கோபம் காமம் மயக்கமென்னு மூன்று சிற்றரசுகளையும் வேரோடறக்காய்ந்தாரெனில், அடிகள் விடுகணையில் காமனைவென்றதும் ஓர்வியப்பு ஆம்ஓ

—தேவரீராகியநீர் மலர்ப்பாணத்தை விடும்கருப்புவில்லை யேந்திய மன்மதனை வெற்றிகொண்டருளியது மொருவியப்பாகுமா, இக்கு ஊற்றின் திருநாமத்து ஒரு கூற்றுக்கு இலக்குஎன்றால்— கரும்பினிரசத்தினூற்றைப்போல இன்பம் பயக்குமாயிரந்திருநாமங்களி லொரு திருநாமத்துக்குக்குறியானால், அ கூற்றம் குமைத்தனை என்று இசைப்பதும் ஓர் அற்புதம் ஏ— அந்த இயமனை உதைத்து வென்றாயென்று தேவரீரைப்புகழ்ந்து கூறுதலொரு அதிசயமா.

சுதன்மன், சுசீலன், சுபுத்தியென்னுமசுரர்கள்வாழும் பொன், வெள்ளி, இரும்புகளாலாய மதில்களை யின்மூன்றும் எரித்ததும், மார்க்கண்டேயர் பொருட்டுத் திருக்கடையூரி லியமனை யுதைத்தருளினமையால் அக்கூற்றங் குமைத்தனையெனவுங்கூறினார். ஏகாரங்கள் வினாப்பொருளன.

என ஆங்கு— என்றுன்னை வேதங்கள் கூறப்படுதலால்.

உலகு சூல் கொண்டதலைவி உமநீ உம்—எல்லாவுலகங்களையுங் கருப்பம் வாய்ந்த இறைவியுந் தேவரீரும், மலைபக எறிந்தமழ இளங்குழவியை—கிரவுஞ்சகிரி பிளவுபட வேலினை யெறிந்த இளங்குழவியாகிய முருகக்கடவுளை, அமிர்தம் ஊற்றிருக்கும் குமுதம் வாய்தேறல் வண்துகில் நனைப்ப மடித்தலத்து இருத்தி— அமுது ஊற்றெடுக்கும் ஆம்பல்போன்ற திருவாயிலுள்ள தேன் வளவிய ஆடையை நனைக்க மடித்தலத்தி லிருக்கச்செய்து, கண்களில் பருகி—தமது திருக்கண்களா லழகினைப்பருகி, அ காமருகுழவி எழுதாக்கிளவியின் சுவைபழுத்த மழலை நாறு அமிர்தம் செம்செவ்வாய் மடுத்து உண்ணநிறைத்ததும் அம் செவிக்கு— அந்தவழகுப்பாதரு மிளங்குழவியினது வேதப்பொருளினினிய சுவைகனிந்த மழலைச்சொல்லாகிய நறுமணங்கமழு மமிர்தினை மாணிக்கக் குண்டலமணிந்த திருச்செவிகள் தமதுவாயாற் றேக்கியுண்ண அவ்வமிர்தம் பாய்ந்து நிறைத்த நுமது அழகிய அத்திருச்செவிகளுக்கு, அடிகள் என்புன் சொல்கடுகொள புகட்டினன்— அடிகளே யெனது புல் லிசொல் லாகிய விஷமேறப்புகட்டினேன், இன் அருள் விழைகுவாய் (நீயவ்வியற்கையா தருகணையை யுடையாயாதலால்) இனிய அருள்செய்வாய், இறும்பூது உடைத்து— அது பெருவியப்புடையதாகும்.

விடமுண்டருளியதும், திரிபுரதகனஞ் செய்ததும், காமனை வென்றதும், இயமனையுதைத்ததும் தன்னையடைந்த வடியவரிடத்துக்கொண்ட திருவருளாதலால் எனவாங்கு என்றார். தரவுமுதல் சுரிதகங்காறும் பொருள்சம்பந்தமுடைமையுரையிற்காண்க. செஞ்செய்குறிப்பால் மாணிக்கக்குண்டலமணிந்த செவியென வுணரநிற்றலாற் குறிப்புச்சொல் "முன்னத்தினுணருங் கிளவியுமுளவே" என்றதூஉம் ஆல். (க)

(நேரிசைவெண்பா.)

உடையாளகில்லசர்க்கோஙகுழலைக்கோட்டின்
அடையாளமிட்டுவையாளானால்—கடையிலவர்
செவ்வண்ணம்பெற்றார்திரளொடுகிற்கின்றாரை
எவ்வண்ணங்கண்டிறைஞ்சுவோம்

இ - ள். உடையாள்—நம்மையாளாகவுடைய வுமாதேவியார், அகிலே சர்க்குழுங்குழலை கோடுஇன்—விசுவேசாக்குத்தமதுஉயர்ந்த தனமாகிய கொம்பினால், அடையாளம் இட்டுவையாள் ஆனால்— குறிசெய்து வைத்திலராகில்,கடையில்—இறுதியில், அவர்செவ்வணணம் பெற்றார்திரளொடு நிற்கின்றாரை— அவரது சாரூப்பியம்பெற்ற வடியார்கணங்களோடு நிற்கின்ற அவ்விறைவரை, எ வண்ணம்கண்டு இறைஞ்சுவோம்— எப்படி நாங்கள் கண்டுவணங்குவோம்

குறியிட்டது ஆன்மாக்களிடத்துள்ளகருணை என்பதுபோதரலால் உதாரணி. காசியிலெழுந்தருளிய இறைவர்க்கு விசுவேசரென்பது திருநாமமாதால் அகிலேசரென்றார். விசுவேசர் பிரபஞ்சத்திற்குத் தலைவர், அகிலேசர் என்பதற்கும் அதுவே. (உ)

நாரைவிடுதூது.

கட்டளைக்கலித்துறை.

இறைவளைக்காகம்பரிந்தளித்தாரகிலேசர்கொன்றை
நறைவளைகுழ்முடியாரடிக்கங்கைநன்னதியின்
துறைவளைக்குங்குருகீருருகிரொன்றுதூமொழிகைக்
குறைவளைக்கும்முங்கள்பேரிட்டதாற்சென்று கூறிடுமே.

இ - ள். கங்கைநல்நதியின் துறைவளைக்குங்குருகீர்— கங்கையென்னும் நல்லநதியின்துறையில் சூழ்ந்த நாரைகாள், தூமொழி கைக்கு உறைவளைக்கு உம் உங்கள்பேரிட்டது—இனிய சொல்லையுடைய எனதுதலைவியின் கையிலுள்ள வளையல்களுக்கு முங்கள் பெயரையே யிட்டிருக்கின்றது (ஆதலால்) அகிலேசர் கொன்றைநறை வளைகுழ்முடியார்—விசுவேசராகிய கொன்றைமலரின் மணஞ்சூழ்ந்தசடா முடியையுடையவர். இறைவளைக்கு ஆகம்பரிந்து அளித்தார்—திருக்கரத்தில் வளையலையணிந்த உமாதேவியார் செய்ததவத்திற் கிரங்கித்தமது திருமேனியிற் செமபாதியன்புகூர்ந்தருளியிருக்கின்றனர், அடிக்குச் சென்று உருகீர் என்று கூறிடும்—அவர் திருவடிக்கண்ணேசென்று மனமிரங்குவீரென்று கூறுங்கள்.

வளையலுக்குக்குருகு என்பது ஒரு பரியாயநாமமாதலால் கைக்குறைவளைக்குங்கள்பேரிட்டதெனவும், ஒருபெண்ணை ரசிக்கிரங்கினவர் என்பெண்ணுக்குமிரங்குவராதலால் இறைவளைக்காகம்பரிந்தளித்தாரெனவும் பாங்கி கூறினாளாகக் கூறினார். இறைவிரலிலுள்ள இறை, அதனை விடாது கைமேல்நிற்றலால் விடாதவிலக்கணை. அடிக்கு, கைக்கு எழனுருபுநிற்குமிடத்து நான்கனுருபு நிற்றலால் உருபுமயக்கம். உருகீர் முன்னிலை யேவற்பன்மை முற்று.

புயவகுப்பு.

இரட்டையாசிரியச்சந்தவிருத்தம்.

இடமறமிடைதருகடவுளாமடவியாரெறிதருகவரிநிழற்கட்டியின்றன
இனவளைகொடுமதணிடுசெயவிருதெனவிறையவளெழுதுசுவட்டுக்கிசைந்தன
இருவருநிகரெனவரிசிலைவிசயனுடெதிர்பொருசமரினிளைப்புற்றிருந்தன
இணையடிபரவியமலடிமுனுதவியவடியவினுணவொதருட்டைப்பரிந்தன.

பட்வரவுமிழ்தருமணிவெயில்விடவலர்பரிதியொடெழுமுதயத்திற்பொலிந்தன
பருகுமினமிர்தெனவருகிருசவிஞர்கள்பனுவலின்மதுரவிசைக்குக்குழைந்தன
படரொளிவிடுசுடர்வலயமதெனவொருபருவரைநெடுவிலெடுத்துச்சுமந்தன
பர்புரமெரியொடுபுகையெழுமலாமகள் பணைமுலைதழுவுசரத்தைத்துரந்தன
மடலவிழ்தடமலரிதழிபினிழிதருமதுமழையருவிகுளித்துக்கிளர்ந்தன
வழிதரவுதிரமுமிணைமொடுகுடர்களும் வரநரகரியின்மதத்தைத்தடிந்தன
மதகரியுரியதள்குலகிரிமுதுசனின்மழைமுகிறவழ்வதெனப்பொற்பமைந்தன
மலியுமிழ்நிலவொடுமடுதிறலவெயிலெழுமசிகநிர்வலய வரும்வெற்பொத்துநின்
[றன.
குடவளை துறைதொறுமுடுநிரையெனவிரி குளிர்நிலவெழவுமிழ்முத்தத்தடங்க
ரை, குலவியபடர்சிறைமடவனமொடுசிலகுருகுகள்சினையொடணைத்துத்துயி
ன்றன, குரைபுனல்வரநதிசூர்தருமுருகவிழ்கொழுமலர்சிதறவிமுத்தத்துவிண்
டொடு,குலகிரியுதவியவளரிளவனமுலைகொழுநர்தமழகியகொறறப்புயங்களே.

இ - ள குடம்வளை துறைதொறும் உடுநிரை என்ன விரிகுளிர் நிலவுஎ ழஉமிழ்முத்தம்— சூற்கொண்ட குடம்போன்ற சஙகுகள் துறைகள்தோறு ம்நட்சத்திரபந்தியைப்போல விரிந்த குளிர்ந்த கிரணமெழ உமிழ்ந்த முத்துக ளை, தடகரைகுலவிய படர்சிறை மடமை அன்னம் ஒடு சிலகுருகுகள் சினை யொடு அணைத்து துயின்றன— பரந்த கரைகளிற் சஞ்சரியாநின்ற விரிந்தசிற கினையுடைய இளமைவாய்ந்த அன்னங்களோடு சிலநாரைகள் தாம்பெற்ற முட்டையோடு அவற்றையு முட்டைகளென்று கருதியணைத்துத் துயில்கூடு ம், குரைபுனலவரநதி— ஒலிக்கும் நீரமயமாகிய கங்கை சூழ்ந்த, சுரர்தருமு ருகு அவிழ் கொழுமலர்சிதறஅவிழ்முத்தத்து — தேவர்கள் கற்பகத்தின் வாச னையொடுமலர்ந்த கொழுவியமலர்களைசசிந்தும் காசியில், விண்தொடுகுலகிரிஉ தவிய வளர்இளவனம்முலைகொழுநர்தம் அழகியகொறறம் புயஙகள்— ஆகா யத்தையளாவிய இமயமலை பெற்றவளரு மிளமையையும் சந்தனக்கோலத் தையும வாய்நததனஙகளையுடைய வுமாதேவியாரின் கணவராகிய இறைவர்த வெற்றிவாய்ந்த புயங்கள், இடம் அறமிடைசருகடவுளாமடவியா எறிதருகவ ரிநிழல்கணதுயின்றன — இடம்சற்றுமில்லாம னெருங்கியதெய்வப்பெணக ள்வீசுஞ்சாமரையினிழலில சோர்வுநீங்கியிருந்தன, இனம்வளைகொடுமதன் இடுசெயவிருது என்ன இறையவள் எழுது சுவட்டுக்குஇசைந்தன—ஒரேராசி யாகிய திருக்கரத்திலணிந்த வளையலால மன்மதனிட்ட செயவிருதைப்போல உமாதேவியாரெழுதிய சுவட்டுக்கு இசைந்திருந்தன, இருவரும் நிகாஎன்னவ ரிசிலைவிசயனொடு எதிர்பொருசமரின் இளைப்புற்று இருந்தன—இருவரும்தம் முளொப்பென்று கூறககட்டமைந்த வில்லினையேந்திய அருச்சுனனொடு எதி ரத்துப போர்செயத போரிலிளைத்தசைந்தன, இணைஅடிபரவிய மலடிமுன் உதவிய இடியலின் உணவுஒருதட்டை பரிந்தன— தமது திருவடியைவணங் கியவந்தியார் முன்புதந்த பிட்டுக்காக ஒருதட்டைச்சுமந்தன, படம அரவு உமி ழ்தரும்மணிவெயில்விட வளர்பரிதி எழும் உதயத்தில் பொலிந்தன— படத் தையுடைய பாம்புகளுமிழுமாணிக்கஙகள் செவந்த கிரணம் வீசவிருத்தலால்

கிரணமிக்கசூரியனுதயமாகுமுதயகிரியைப் போலவிளங்கின, பருகும் இன் அமிர்தென்ன உருகு இருகவிஞர்கள் பனுவலின் மதுரம் இசைக்கு குழைந் தன— உண்ணுமினிய அமுதுபோல மனமுருகுந்தும்புரு நாரதரென்னு மி ரண்டு இசைப்புலவர்கள் பாடுஞ் சாமவேதத்தின் மதுரமிக்க விசைக்குக்கு ழைவுற்றன, படர் ஒளிவிடுசுடாவலயம் என்ன ஒருபருவரைநெடுவில்எடுத்து சுமந்தன—பரந்தஒளிவீசுங்கிரணம்வாய்ந்தவாகுவலயம்போலப்பருத்தநெடிய ஒருமேருவில்லைச்சுமந்துள்ளன, பராபுரம் எரிஒடு புகை எழுமலர்மகள்பணை முலை தழுவுசரத்தை துரந்தன—பகைவரது திரிபுரநெருப்புப்பற்றுதலோடு புகைந்தெழ இலக்குமியின்பருத்ததனங்களைத்தழுவுந்திருமாலாகியபாணத்தை யெய்தன, மடல் அவிழ் தடம்மலா இதழியின் இழிதருமதுமழை அருவ குளித்து இளர்ந்தன—இதழவிழ்ந்த பெருமை வாய்ந்த கொன்றைமலரினின் றொழுகுந் தேன்துளியாகிய அருவியில மூழ்கிவிளங்கின, உதிரம் வழிதர நிணம் ஒடு குடர்களும்வர நரகரியின்மதத்தைதடிந்தன—உதிரம்வழிய நிண முங்குடல்களும் வெளிப்படத் திருமால்கொண்ட நரசிங்கமாவதாரத்தின அகங்காரத்தினைக் களைந்தன, மதகரி உரி அசல்குலகிரிமுதுகின் இல் மழை முகில்தவழ்வதுஎன்னபொற்புஅமைந்தன—யானையின்தோலால்குலபருவதத் தின்முதுகின்மேல் மேகந் தவழுதல்போல அழகோடமைந்துள்ளன, மலி உமிழ் நிலவு அடுதிறல்வெயில் எழ மதிகதிர் வலம்வரும் வெற்பு ஒத்து இருந் தன—மிகவும வீசும் சந்திரிகையொருபாலும காயும்வன்மையையுடையவெயி லொருபாலும் எழுதலால் சந்திரனுஞ்சூரியனும் வலம்வரும் மேருமலையை யொத்திருந்தன.

தடங்கரை உரிச்சொற் றொடராதலால் பொதுவிதியால் வல்லெழுத்து மிகாமல்வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுதல் "இடையுரிவடசொலின்" என்றசூத்திரத்தால். துயின்றன என்னும் வினைமுற்றுப் பெயரெச்சத்தில் வந் தது. அப்பெயரெச்சம் வரநதியென்னும் எல்லைப்பொருள் கொண்டது முத் துக்களைமுட்டையெனக் கருதுதல் மயக்கவணி இருகவிஞர்கள மதுரவிசை யென்றது பின்னர் வருதல்காணக. கிழக்கட்டுயின்றன குணவணி. பரிதி யொடு ஒடு இசைநிறைப்பொருளில் வந்த விடைச்சொல். நிலவொடும் ஒடு எண்ணொடு. உம்மை அசைநிலை. கம்பாநதிக்கரைச் சிவலிங்கப்பெருமானை யிறு கத்தழுவிய காலத்தில் உமாதேவியார் திருக்கரவளையின் சுவடுதிருமேனியிற் பதிந்ததென்பதும், திருவாதவூரடிகளின்பொருட்டு வைகைப்பெருக்கினையே வ வதனை யடைத்தற்பொருட்டுவந்தியன்னைக்கு அரசனளந்துவிட்டகரையை யடைக்கச் சிவபிரானூர் கூலியாளாய்ப் பிட்டைப்பெற்று மண்சுமந்தனரென் பதும், தும்புருநாரதர் இறைவர் திருச்செவியிலிருந்து சாமகானம் பாடுகின்ற னர்களென்பதும், திரிபுரம் எரித்தகாலையில் திருமால் பாணமாயினரென் பதும், இரணியனைத் திருமால் நரசிம்மாவதாரங்கொண்டுகிழ்ந்து அகங்கரித் தகாலையி லிறைவா சரபப்புள்ளாயெழுந்தருளியவ்வகங்காரத்தை யொழித்த னரென்பதும் புராணவரலாறுகள். புயவகுப்புகலமபகத்திறுறுப்பு. (ச)

[நேரிசைவெண்பா.]

புயலார்பொழிற்காசிப்பூங்கோயின்மேய
கயலார்தடங்கணாள் காந்தன்—செயலாவி
உய்யத்துதியாருதிப்பார்துதிப்பரேல்
வையததுதியாமறுத்து.

இ-ள். புயல் ஆர்பொழில் காசி பூங்கோயில் மேய—மேகந் தவழுஞ் சோலைசூழ்ந்தகாசியிற் பூங்கோயிலிலெழுந்தருளிய, கயல் ஆர் தடகண்ணாள் காந்தன் செயல்—சேல்கெண்டையொத்த கணகளையுடைய வுமாதேவியார் கணவராகிய இறைவரதுதிருவிளையாடலை, ஆவி உய்ய துதியார் உதிப்பார்—தமதுயிரீடேற வாழ்த்தித்துதியாதவர்கள் நிலவுலகிற்பிறப்பார்கள், துதிப்பரேல்—துதிப்பாராணல், மறுத்துவையத்து உதியார்—மீள நிலவுலகிற்பிறவார். மறுத்து செயவெனெச்சத்திரிபு. (ரு)

[கட்டளைக்கலித்துறை]

தோழி கூறல்.

மறைக்கோலங்கொண்டவகிலேசரோயின்றுமாதர்முன்னே
பிறைக்கோலங்கொண்டுபுறப்பட்டவாமுன்பிறைமுடித்த
இறைக்கோலமோலமெனத்தேவரோலமிடவிருண்ட
கறைக்கோலங்கொண்டுணுங்கண்டத்தொளித்தகனல்விடமே.

இ-ள் மறைகோலம கொண்ட அகிலேசரோ—வேதங்களைத் திருக்கோலமாகக்கொண்டருளிய அகிலேசரோ, முன்பிறை முடித்த இறைக்கு ஏ ஓலம் ஓலம் என்ன—முன்பு இளஞ்சந்திரனைமுடித்த இறைவர்க்கே யடைக்கலமடைக்கலமென்று, தேவா ஓலம் இட இருண்டகறை கோலம்கொண்டு உண்ணும்கண்டத்து ஒளித்தகனல்விடம்—தேவர்சளோலமிட இருண்ட கருநிறங்கொண்டு உண்டருளிய சிகண்டத்திற் கரந்திருந்த ஊழித்தீயையொத்த விடமானது, இன்றுமாதர்முன் ஏ பிறை கோலம்கொண்டுபுறப்பட்ட ஆறு—இப்பொழுது என்பெணமுன்னே யிளஞ்சந்திர னுருவைக்கொண்டு புறப்பட்டவகை நன்றாயிருந்தது (அருள்வாய் என்றபடி)

திருமால்முதலிய தேவர்க ளமுதெழுத் திருப்பாற்கடல் கடைந்தகாலையில் விஷமெழ அதற்காறாறு திருககயிலையிற சென்று சரணடைந்தபோது இறைவருண்டருளி மிடற்றில வைத்தனர் என்பது புராணவரலாறு பவனியிற்கண்டு காமமுற்றதலைவியாறாறு சந்திரோதயத்தால் வருந்தத் தோழியிறைவனைநோக்கிக் குறையிரத்தலால் தோழிகூறலென்னுந் துறை. நன்றாயிருந்தது என்னும் பயனிலையும் ஆறு என்பதனிற தியுர்தொக்கன. வேதமே சிலம்பாகவும் கோவணமாகவுந் தரித்தருளினமையால் மறைக்கோலங்கொண்ட என்றார் (சு)

(அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

அரியாமைக்கிரங்கல்

விடுத்தவாளிக்கும்விரகிலாக்கருப்புவில்வீணன்மீளவும்வாளாத்
தொடுத்தவாளிக்குமேபைகைமூண்டவித்தூயநன்மொழிக்கென்னும்

அடுத்தநான்மறைமுனிவரர்நால்வர்க்குமம்மறைப்பொருள்கூற
எடுத்தகோலமாயாநந்தவநத்துமெம்மிதயத்துமிருந்தோனே

இ - ள் நான்மறை அடுத்தமுனிவரர் நால்வர்க்கு உம் அ மறைப்பொருள்கூற—நான்குவேதங்களையுமுணர்ந்த சனகர்முதலிய முனிசிரேஷ்டர்கள் நால்வருக்கு மந்தவேதங்களின் பொருள்களாகிய தர்மார்த்த காமமோட்சங்களை யுபதேசித்தருள, எடுத்தகோலம் ஆய் அநந்தவநத்து உம் எம் இதயத்து உம் இருந்தோன்—எடுத்தருளியஞானாசாரியத்திருக்கோலமாய்க் காசித்திருப்பதியிலும் எமது இருதயத்திலுமிருந்தருளினன், மடுத்தவாளிக்கு உம் விரகு இல்லாதகரும்புவில் வீணன்மீள உம் வாளாதொடுத்தவாளிக்கு உம் ஏ பகை மூண்ட — எமதுதலைவி பிரயோகித்த கட்பார்வையாகிய பாணத்துக்கும் அறிவில்லாத கரும்புவில்லையேந்திய வீணனாகிய மன்மதன்மீளவும் வாளாபிரயோகித்த மலர்ப்பாணத்துக்குமே பகை விளைந்தன, இ தூய நல்மொழிக்கு என் ஆம்—இந்த இனிய நல்லமழலைச்சொல்லையுடையாள் இவளுக்கு என்னபயனுண்டாம்.

முனிவரர் நால்வர் சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், இவர்கள் தர்மார்த்த காமமோட்சங்களி னுண்மையையுணரக் குறையிரந்ததாலவர்கள்பொருட்டு ஞானாசிரியத் திருவுருக்கொண்டு கல்லாலின் கீழ்ச் சின்முத்திரையோடிருந்தருளினர் அத்திருக்கோலமாய்க் காசித்திருப்பதியிலு மெழுந்தருளியிருப்பதை எமது தலைவியறியாது கட்பார்வை செலுத்தினாள், மன்மதனுமுணராது பாணப்பிரயோகஞ்செய்தானிவ்விரண்டு மப்பெருமானைச் செய்யக்கிடந்ததொன்றுமின்மையா லிவ்விரண்டுக்குமே பகைவிளைந்தன இதனாலிவள்கருதியது என்னபயன்படுமென்று ஏங்கி சருநுதலால் அவ்வறியாமைக்கு இரங்கற்றுறையாயிற்று பகையாவது பெண்களகண்கள் அம்போடுமாறுபட்டுநிற்றல் முன்னர்ப்பாணப்பிரயோகஞ்செய்து தன்னுடலை இழந்ததைமன்மதனுணராது மீளாந்தொடுத்தமையால் விரகிலா எனவும், வீணனெனவு மன்மதனைக்கூறினார் வாளாத்தொடுத்த இடைச்சொற்றொடராதலால்வருமொழிவல்லெழுத்துமிகுதல் "இயல்பினும்" என்றசூ—ஆல் (எ)

கட்டளைக்கலித்துறை

அருப்பாரவிமுத்தத்தெநகேகவா மூடுவொன்றும்வெள்ளிப்
பொருப்பாளரோடித்திரிவதல் லாலிப்புவனங்களை
உருப்பாதியிற்படைத்தோர்பாதியிற்றுடைத்தூழிதொறும்
விருப்பாருயிர்களின்மேல்வைத்துத்தாருஞ்செயும்வேலைகண்டே.

இ - ள் அவிமுத்தத்து இருப்பார் காசித்திருப்பதியி லிருப்பவரும், என்று உம் வெள்ளிப் பொருப்பாளர்—எக்காலமும் வெள்ளிமலையைக் காணியாகவுடையவருமாகிய இறைவர், இ புவனங்களை உருபாதியில்படைத்து—இவ்வுலகங்களைத் திருவுருவின் செம்பாதியிலுள்ள உமாதேவியாராற் படைத்து, ஓர்பாதியில் ஊழிதோறும் துடைத்து—தமது திருவுருவினொருபாதியிலுள்ள தமதுகூற்றால் ஊழிதோறு மான்மாக்களையொழித்து, ஆர் உயிர்க

MAHAMAHOPADHYAYA
...MINATHA IYER LIBRARY

னின்மேல் விருப்புவைத்து தாம்செயும் வேலை கண்டு—அரியவுயிர்களின் பரிபக்குவத்தின்மேல் விருப்பங்கூர்ந்து அதன்மேல் தாம்செயு மநுக்கிரகமாகிய வேலையிலும் தமதுகாணியாகிய வெள்ளிமலையிலுந் திருநோக்கம்வைத்து, ஓடிதிரிவது அல்லால் எங்கேகண்முடுவர்—ஓடித்திரிதலேயன்றி யெங்கே கண்டுயின்றருளுவார்.

ஓடித்திரிவதெல்லாம் என்னும்பாடம் பொருந்தாமையறிக. பொருப்பாளர் ஆளர் பலாபால்விகுதி. வேலை மிகுதியினாலும் தமது இருப்பு வெள்ளியாதலா லதனையெவர் கவருவாரகளோ வென்பதனாலும் எங்கே கண்மூடுவா ரெனப் பழிப்பதுபோலப் புகழ்த்திறம் புனைதலா லிலேசவணி (அ)

[அறுசீரகழிநெடிலாசிரியவிருத்தம்.]

பாங்கிகவன்றுரைத்தல்.

கண்ணொன்றுதிருநுதலிற்கனலுருவமாகப்படைத்தகாசிநாதா
தண்ணொன்றுநறையிதழித்தாரொன்றுனெட்டுயிர்த்தாடரைமேல்வீழ்ந்தாள்
எண்ணொன்றுமுணராமேகிடக்கின்றாளிதுகண்டாலெழுத்தொன்றோதத்
துண்ணெனன்றுவருவனொனததுணிந்தனளோவறியேனித்தோகைதானே

இ-ள். திருநுதல் இல் கண் ஒன்று கனலுருவம் ஆகப்படைத்த காசிநாதா—திருநெற்றியி லொருகண் நெருப்புருவாகப்பெற்ற காசியிலெழுந்தருளிய இறைவனே, இத்தோகைதான்—இந்தமயில்போன்றபெண், தண் ஒன்று நறை இதழிதார் என்றாள்—(அவ்விறைவ ரணிவது) குளிர்ச்சிபொருந்தியதேன்சிந்துங் கொன்றைமாலையென்று எங்கள்முன்கூறினாள், நெட்டுயிர்த்தாள்—பெருமூச்செறிந்தாள், தரைமேல் வீழ்ந்தாள்—தரையின்மேல் விழுந்தனள், எண் ஒன்றும் உணராமேகிடக்கின்றாள்—ஒரு எண்ணமுமில்லாம லவசமாய்க்கிடக்கின்றனள், இதுகண்டால் எழுத்து ஒன்று ஓத துண்ணென்றுவருவர் என்ன துணிந்தனள் ஓ அறியேன்—இந்நிலைமையைப் பார்த்தால் பிரணவமுபதேசித்தருள விரைந்துவருவாரென்று துணிந்தனளோ நானறியேன் (அருளாய் என்றபடி)

மன்மதனை யெரித்தமையால் உன்னையடையில் மன்மதவாதையொழியுமெனத் திருநுதலிற் கனலுருவமாப்படைத்த காசிநாதாவென அபிப்பிராயத்தோடுகூடிய விசேஷணத்தைத்தந்துகூறுதலால் கருத்துடையடையணி. இதனைவடநூலார் பரிகராலங்காரம் என்பார். (கூ)

[நேரிசை வெண்பா]

செயல் விலக்கல்.

தோகையுயிர்முடிப்பான்றும்பைமுடித்தான்மதவேள
வாகைமுடித்திடவும் வல்லனே—ஆகெடுவீர்
காமாந்தகாகாசிக்கண்ணுதலார்க்கோதீர்மற்
றேமாந்திராமலெடுத்து

இ-ள். தோகை உயிர்முடிப்பான் மதவேள் தும்பைமுடித்தான்—மயில்போன்ற தலைவியினுயிர்வாங்க மன்மதன்போர்தொடங்கத் தும்பைமாலையைமுடித்தனன், வாகைமுடித்திடவும் வல்லன்—(வெற்றி கொள்ளுதலால்)

இனிவாகைமாலையைச்சூடவும் வல்லவன் ஆவான், ஆ கெடுவீர்—ஆ கெடு வீர், மற்று ஏமாந்திராமல் எடுத்து காமாந்தகர் காசிகண்ணுதலார்க்கு ஓதீர்—இச்செயலையொழித்து ஏமாந்திருக்காம லிதனையெடுத்துக் காமனையெரித்தவ ராகிய காசியிலெழுந்தருளிய இறைவர்க்குக் கூறுவீர்கள் (இத்துன்பமொழி யும் என்றபடி.)

காமாந்தகர் காமனுக்கு யமனாயிருந்தவர், காமத்தால் மூடுபட்டவர். அவர்க்குக்கூறி லிவ்வாதையொழியுமென்னு மபிப்பிராயத்தோடுகூடிய விசே ஷணந்தந்துகூறுதலா லிதுவும் அவ்வணி. தலைவி இறைவர்மேற்காதல்கொண் டுவருந்துதலை யறியாத தோழியர்கள் வநதேவதைகளால்வந்த குற்றமோவெ னக்கருதிச்செய்யும் செயல்களைப் பாங்கி விலக்குதலால் மற்று வினைமாற்றுப் பொருளில்வந்த இடைச்சொல். ஆ, கெடுவீர் இரக்கப்பொருளில்வந்தவிடைச் சொற்கள். போர்தொடங்குதற்குத்தும்பைமாலையும் வெற்றியடைந்தபின் வா கைமாலை சூடுதலுமுடைமையால் தும்பைமுடித்தான், வாகைமுடித்திடவும் வல்லான் என்றார் "வெட்சிநிரை கவர்தன் மீட்டல் கரந்தையாம்—வட்கார் மேற்செல்லுதல் வஞ்சியாம்—உட்கா—தெதிரூன்றல் காஞ்சியெயில் வளைத்த லுழிஞை— அதுவளைத்தலாகு முழிஞை— அதிரப், பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்—செருவென்றதுவாகையாம்" எனவரும் புறப்பொ ருட் செய்யுளாலுணர்க. (கo)

[கட்டளைக் கலித்துறை.]

தலைவி கூறல்.

ஏடுக்கச்செவந்தசிலம்படியாரகிலேசர்நறைக்
கடுக்கைச்சடைமுடியாரடியார்க்குக்கலைகள்கொய்து
கொடுக்கக்கொடுக்கவளர்கின்றவாவெறுங்கூட்டிலெரி
மடுக்கக்குறையுயிர்மாதரைத்தேடுமதிக்கொழுந்தே.

இ-ள். வெறுங்கூட்டில் எரிமடுக்க உயிர்குறை மாதரை தேடும் மதிக் கொழுந்து—பசையற்ற தமதுசரீரத்தில் தனதுநிலவென்னுந் தீயைவீச வுயிர் குறையும்பெண்களைத்தேடு மிளஞ்சந்திரன், எடுக்கசெவந்த சிலம்பு அடியார் அகிலேசர்—நடனஞ்செய்யவூன்றிய திருவடியை மேலேதூக்கியருளச் செ வப்பேறிய வேதச்சிலம்பணிந்த அத்திருவடியையுடையவராகிய இறைவரும், நறைகடுக்கை சடைமுடியார் அடியார்க்கு — தேன்சிந்துங் கொன்றை மலர் மாலையையணிந்தசடாமுடியை யுடைய இறைவரடியவராகியதேவர்களுக்கு, கலைகள்கொய்துகொடுக்க கொடுக்க வளர்கின்ற ஆறு—தனதுகலைகளைக்கொய் துகொடுத்துவருந்தோறுங் கொடுத்துவருந்தோறும் அழியாது வளரும்விதம் (பெண்கள்செய்த தீவினைப்பயனும்)

ஈறுதொக்குநின்றஆறு என்னும் எழுவாய்கருத்தீவினைப்பயனுமென்னும் பயனிலைதொக்குநின்றது. பூரணசந்திரனிடத்துள்ள கலையமுதை நாள்தோ றும் தேவர்கள் பருகிவருதலா லச்சந்திரன் குறைந்துவருகிறானென்பது நூல் வழக்கு. பிரிவாற்றாது சாமங்கொண்ட தலைவி சந்திரோதயத்திற்கு வருந்திக் கூறியது. (கக)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.]

மகளிர்விடுதூது.

கொழுதிவரிவண்டுழுதுழக்குங்குழலீர்நறுங்கட்கோதையிவள்
அழுதவிழிநீர்முந்நீரையுவர்நீராக்குமதுகூறீர்
எழுதவரியதிருமார்பிலிளஞ்சேய்சிறுசேவடிச்சுவடும்
முழுதுமுடையாண்முடிச்சுவடுமுடையார்காசிமுதல்வர்க்கே

இ - ள். வரிவண்டு கொழுதி உழுது உழக்கும் குழலீர்— வரியமைந்த வண்டுகள் மூக்காற்கிளறி யுழுதுகலக்குங்கூந்தலையுடைய பெண்காள், நறுங்கள் கோதைஇவள் அழுதவிழிநீர் முந்நீரை உவர்நீர் ஆக்கும் அது—நறுமணங்கமழுங்கள்ளொழுகுங்கூந்தலையுடைய இத்தலைவிபிரிவாற்றாதழுத கண்ணீரானது கடலையுவர்நீராக்கிய அதனை, எழுதஅரியதிருமார்பில்இளஞ்சேய்சிறுசேவடிசுவடும்— எழுதற்கரிய பொலிவுவாய்ந்த மார்பின்கண் முருகக்கடவுளது சிறியசெவந்த திருவடிச்சுவட்டையும், முழுதும்உடையாள் முலைச்சுவடும் உடையார் காசிமுதல்வர்க்குகூறீர்— எல்லாவுயிர்களையு மடிமையாகவுடைய உமாதேவியாரது தனச்சுவட்டையுமுடையவராகிய காசியிலெழுந்தருளிய இறைவர்க்குகூறீர (விருப்புடையவராதலால் அருள்வாரென்றபடி.)

இளஞ்சேய் சிறுவடிச்சுவடு — முருகக்கடவுள் திருமார்பிலேறிவிளையாடுதலால்திருவடிச்சுவடு தோய்ந்திருத்தலை. விழிநீர்முந்நீருவர் நீராக்கும் என ஆச்சரியப்படத்தக்கதாகக்கூறுதலால் மிகுதிநவிற்சியணி. இதனை வடநூலார் அதியுக்தியலங்காரமென்பர். கொழுதி இறந்தகாலவினையெச்சம் கொழுதுபகுதி. (கஉ)

நேரிசைவெண்பா

வரைவளைக்கும்பொற்றடந்தோண்மன்னர்க்கிவரார்
நிரைவளைக்கையார்நகைக்குநேராக—கரையில்
குவிமுத்தம்வெண்ணிலவுகொப்புளிக்குங்கங்கை
அவிமுத்தஞ்சென்றிறைஞ்சாதார்

இ - ள். நிரைவளைகையார்நகைக்குநேராக — வரிசையாகவளையலையணிந்தகையையுடையபெண்கள் பற்களுக்கு ஒப்பாக, கரையில் குவிமுத்தம் வெள்நிலவு கொப்புளிக்கும் கங்கை அவிமுத்தம் சென்று இறைஞ்சாதார் இவர்— கரையிற்குவிந்த முத்துகள் வெள்ளிய நிலவையுமிழுங்கங்கைசூழ்ந்த காசியைச்சென்றுவணங்காதவர்களாகிய இவர்கள், வரைவளைக்கும் பொன்தடதோள் மன்னர்க்கு ஆர்—மேருமலையை வில்லாகவளைத்த பொன்மயமாகிய பெரியதோளையுடைய இறைவருக்கு யாராவார் (அயலார் என்றபடி)

ஆகஎன்னும் வினையெச்சத்தினிறுதி "சாவவென்மொழி யீற்று" என்னுஞ்சூத்திரத்தினுபலக்கணத்தால் தொக்கது. (கங)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

பாங்கியிரத்தல்.

ஆர்க்கும்படைவேளரசிருப்பென்றஞ்சாதழகளருட்காசி
ஊர்க்கும்புதுததோரணம்வைத்தாலுமக்கிங்கிவள்பேச்சுரைப்பாரார

வார்க்குங்குமப்பூண்முலைச்சுவட்டைவளையென்றோடிவளைந்துசுற்றிப்
பார்க்குந்தொளைமுள்ளெயிற்றுரகப்பணியீர்மோகந்தணியீரே.

இ - ள். ஆர்க்கும்படை— கோஷிக்கு மன்மதனது சேனையாகியபெண்கள், வேள் அரசு இருப்பு என்று அஞ்சாது— தமக்குத்தலைவனாகிய மன்மதனது அரசிருக்கையிவ்வூரென்று சிறிதுமஞ்சாமல், அடிகள்— அடிகளே, அருள்காசி ஊர்க்கு உம் புதுத்தோரணம் வைத்தால்— உமதருணிறைந்தகாசித்திருப்பதிக்கு மகரதோரணம் நிறைத்துவைத்தால், உமக்கு இங்கு இவள் பேச்சுஉரைப்பார்ஆர்—தேவரீருக்கு இவ்விடத்திலிப்பெண்ணின் செய்தியையெடுத்துச்சொல்லுகிற பெண்களாரிருக்கின்றார்கள், வார்குங்குமம் பூண்முலைச்சுவட்டைவளை என்று ஓடிவளைந்துசுற்றி பார்க்கும் தொளைமுள்எயிறு உரகம் பணியீர்— கச்சணிந்த குங்குமந் திமிர்ந்த ஆபரணம்பூண்ட இறைவிபொறித்த தனபாரச்சுவட்டை வளையென்றுகருதியோடி இருத்தற்கு வளைந்து சுற்றிப்பார்க்குந் தொளையமைந்த முட்போலுங்கூரிய பற்களையுடைய சர்ப்பாபரணத்தையுடையவரே, மோகம் தணியீர் — என்தலைவி தேவரீர் மேற்கொண்ட மோகத்தைக்கடைக்கணித்துத்தணித்தருளுவீர்.

வேளரசிருப்புஎன்ற குறிப்பால் புதுத்தோரணம் என்றதற்கு மகரதோரணம் என்றாம். மகரம் மன்மதனுக்குக்கொடியாதலாலரசிருப்பிற்கு எதிரே நாட்டுதல் படைக்குரிய தொழிலாதலால் புதுத்தோரணம் வைத்தால் எனவும், இந்த ஆரவாரத்திலவர்களிவள் துன்பத்தைநோக்காதிருந்தால் இங்கிவள்பேச்சையுரைப்பாரார்எனவுங்கூறினாள். பெண்கள்மன்மதன்சேனை "மாரனுக் கெப்போதுமங்கை— நீங்காப்படையாயினை" என்பதனாலறிக. (கச)

[பிச்சியார். கட்டளைக்கலிப்பா]

தண்ணுலாம்பொழிற்காசித்தெருவினீர்—தரித்திடுந்தவக்கோலமுஞ்சூலமும், பெண்ணொடாடுமப்பிச்சனுக்கொத்தலால்— பிச்சியாரெனும்பேர்தரித்தாடுவீர், வெண்ணிலாமுகிழ்க்குங்குறுமூரலால்— வீணிலேயெம்புரத்தெரியிட்டீர், கண்ணினாலுமிக்காமனைக்காய்ந்திடிற் — கடவுணீரென்றிறைஞ்சுதுங்காணுமே.

இ - ள். தண்உலாம்பொழில் காசிதெருவில்—குளிர்ச்சிமிக்கசோலைசூழ்ந்த காசிப்பதியின் தெருவில், நீர்தரித்திடும் தவக்கோலமும் சூலமும்— நீர்தரித்துவந்த தவக்கோலத்தாலும் ஏந்திய சூலத்தாலும், பெண்ஒடு ஆடும் அப்பிச்சனுக்கு ஒத்தலால்— இடப்பாலுள்ள இறைவியோடு ஆடும் அந்தப்பிச்சனாகிய இறைவனுக்கு ஒத்திருத்தலால், பிச்சியார் என்னும் பேர்தரித்துஆடுவீர்— பிச்சியாரென்னும் பேர்பூண்டாடுகின்றீர், வெள்நிலாமுகிழ்க்கும் குறுமூரலால்— வெள்ளியநிலவரும்புமந்தகாசத்தால், வீணில் எம்புரத்து எரிஇட்டீர்— ஒருபயனுமின்றியெமது புரத்தில் தீயூட்டிய நீர், கண்ணினால்உம இ காமனைகாய்ந்திடில்— உமது கண்ணாலுமிங்கு நின்றெய்யுமன்மதனைச்சுட்டெரிப்பீரானால், நீர்கடவுள் என்று இறைஞ்சுதும் காணும— நீரே யவ்விறைவனென்று வணங்குவோங்காண்பீர்

புரம்சரீரம். திரிபுரத்தில் இறைவர் புன்னகையா லெரியூட்டியது தே வர்களுய்தற்பொருட்டு, நீர் புன்னகையாலெமது புரத்தி லெரியூட்டியது வீ ணென்பார் வீணிலே யெனவும், கண்ணாலவர்மன்மதனைக் காய்ந்ததுபோல் நீர்காயின் பெரும்பயனுடைத்தென்பார் கண்ணினாலுமிக்காமனைக் காய்ந்திடி லெனவுங்கூறினார். பிச்சியார் சிவச்சின்னம் பூண்டு பலிக்குவருவோர். இறைஞ்சுதும்தன்மைப்பன்மை யெதிர்காலவினைமுற்று. இதுமதங்கம் என் னும் உறுப்பிலடங்கும். (கரு)

(இதுவுமது)

காணுங்காணுநதிகளெல்லாம்புனற்-- கங்கையேயங்குளதெய்வம்யாவையும
தாணுவெங்களகிலேசரேமற்றைத்—தலங்கள்யாவுந்தடமதிற்காசியே
பூணுமாசைமற்றொன்றையுடல்விடும்—போதுநன்மணிகர்ணிகைப்பூந்துறை
பேணுமாறுபெறவேண்டுமெப்புறம்—பேயொடாடினுமாடிப்பெறுதுமே.

இ-ள். காணும்காணும் நதிகள் எல்லாம் புனல்கங்கையே — கண் களுக்கெதிரே புலப்படும்நதிகளெல்லாம் நீர்மயமாகிய கங்காநதியே, அங் குஉள்ள தெய்வம் யாவைஉம்தாணுஎங்கள் அகிலேசரே — அந்நதிக்கரை யிலுள்ள தெய்வங்களெல்லாம் சிவலிங்கப் பெருமானாராகிய எங்களகிலே சரே, மற்றை தலங்கள்யாஉம் தடமதில்காசியே — இது வொழிந்த மற் றைத்தலங்களெல்லாம் பெரிய மதில்சூழ்ந்த காசிப்பதியே, பூணும்ஆசைஒன் றே — நாம் கொள்ளுமன்பும் ஒன்றே, உடல் விடும்போது நல்மணிகர்ணி கைபூதுறைபேணும்ஆறு பெறவேண்டும்— சரீரத்தை விடுங்காலையில் நல்ல பொலிவமைந்த மணிகர்ணிகைத்துறையை விரும்பும்வகைபெற வேண்டும், அபுறம்பேயோடுஆடினும் ஆடிபெறுதும்—அதன்மேல் சாரூப்பியம்பெற்றுப் பேயொடுஆடினு மாடிப்பெறுவோம்.

எந்தத்தலங்களையும் காசித்திருத்தலமாக அன்புகூர்தலால் உடல்விடுங் கால்மணிகர்ணிகையைக் கருதவேண்டுமென்றதனால் காசியிலுயிர்விடவேண் டுமெனக்கூறும் ஆத்தவாக்கியத்தின்படியன்றி யெந்தத்தலத்திலாவது உயிர் விடினும் மணிகர்ணிகைத்துறையைச் சிந்தித்தால் சிவசாரூப்பியமடையலா மெனவும், காசியிலன்றி மற்றைத் திருப்பதிகளிலுயிர்விடில் சிவசாரூப்பியம் பெறுதலரிதெனவும் (உடல் விடும்போது நன்மணிகர்ணிகைப்பூந்துறைபே ணுமாறுபெற வேண்டும்) என்பதனாற்போதரலால் உதாரவணி. மற்றுபிறி தென்னும் பொருளில்வந்த இடைச்சொல். (கசு)

[இதுவுமது.]

பெற்றமூர்வதும்வெண்டலையோட்டினில்— பிச்சையேற்றுத்திரிவதும் பேய்களே, சுற்றமாகச்சுடலையில்வாழ்வதும்— தோலுடுப்பதுந்தொண்டர்க்க ரிதன்றால், கற்றைவார்சடைக்காசிப்பதியுளீர்— கற்பந்தோறுங்கடைநாளுல கெலாஞ், செற்றுமீளப்படைக்கவும்வேண்டுமே— தேவரீர்பதஞ்சித்திப்பதில் லையே.

இ-ள். கற்றைவார்சடைகாசிப்பதியுள்ளீர்தொண்டர்க்கு — நெருங்கி

யநீண்ட சடாமுடியையுடைய காசியென்னுந் திருப்பதியிலுள்ளீருமதடியவர்க்கு, பெற்றம் ஊர்வதும்— இடபவூர்தியைநடத்துவதும், வெண்டலையோட்டினில் பிச்சைஏற்றுதிரிவதும்— வெள்ளிய கபாலத்தில் பலியேற்றுத்திரிதலும் பேய்கள் ஏசுற்றம் ஆகசுடலையில்வாழ்வதும்—பேய்களேசுற்றமாகமயானத்தில் வாழ்தலும், தோல்உடுப்பதும் அரிதுஅன்று — தோலையாடையாகவுடுத்தலு மரியகாரியமல்ல, கற்பம்தோறும்கடைநாள்உலகுஎல்லாம் செற்றுமீளப் படைக்கவும் வேண்டும்ஏ— கற்பங்கள்தோறு மிறுதியிலெல்லாவுலகங்களையு மழித்து மீளச்சிருட்டிக்கவு மவர்களுக்குவேண்டுமே (அவையரிய வாதலால்) தேவரீர் பதம்சித்திப்பது இல்லை—தேவரீர் தன்மை யவர்களுக்குக் கைகூடுதலில்லை.

சிவசாரூப்பியம் பெற்றவர்கள் பஞ்சகிருத்தியமுடைமையுமுமாதேவியாரை யிடபாகத்திலுடைமை யுமின்மையை எதிர்மறை ஏகாரத்தாலும், சித்திப்பதில்லையென்பதாலும் வற்புறுத்தினார். செற்று இறந்தகாலவினையெச்சம் செறுபகுதி, முதனிலை யெழுத்தாகத் தோன்றியறகரமெய் இடைநிலை, உகரக்கேடுசந்தி, உஎச்சவிகுதி சுடலை என்றது சர்வசம் மாரகாலத்தில் எல்லா மயானமாயிருத்தலை. (கள)

[நேரிசைவெண்பா]

இல்லாளேழுப்பத்திரண்டறமுஞ்செய்திருப்ப
செல்லார்பொழிற்காசிச்செல்வனார்—மெல்லப்
பரக்கின்றபுண்ணீர்படுதலைகொண்டையம்
இரக்கின்றவாறென்சொல்கேன்.

இ - ள். செல்ஆர் பொழில்காசி செல்வனார்— மேகந்தவழுஞ் சோலைசூழ்ந்த காசித்திருப்பதியிலெழுந்தருளிய இறைவர், இல்லாள் ஏழுப்பத்திரண்டு அறமும் செய்திருப்ப— தமது மனைவியே முப்பத்திரண்டு தருமங்களையெந்நாளுமோம்பியிருக்க, மெல்லபரக்கின்ற புண்ணீர்படுதலைகொண்டு—மெல்லப்பரவிய வுதிரமமைந்த பிரமகபாலத்தை யேந்தி, ஐயம் இரக்கின்ற ஆறு என்சொல்கேன்— பலியேற்கின்ற வகையை யென்ன சொல்வேன்.

தமதுமனைவியார் முப்பத்திரண்டு தருமங்களையும் நாடோறும் வளர்த்து வருதலால் தாமோபெருஞ்செல்வர் அவ்வாறிருக்க, அவர்பலியேற்பது தமக்கு இன்னவகையாலெனப்புலப்படாமையால் என்சொல்கேன் என்றார். ஏகாரம்பிரிநிலைப்பொருட்டு. முப்பத்திரண்டுதருமங்களாவன ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல். அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுதல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம். (கஅ)

[கொச்சகக்கலிப்பா.]

பாங்கியிரங்கல்.

சொல்லாவதுமறையேசொல்லுவதுநல்லறமே
இல்லாவதுமுத்திக்கேதுவாயித்தலமே
அல்லார்குழலளவுமாகொன்மனம்வயிரக்
கல்லாயிருந்தவாகாசிப்பிரானார்க்கே.

இ - ள். காசிபிரானார்க்கு— காசியிலெழுந்தருளிய இறைவர்க்கு, சொல்ஆவதுமறைஏ—உரையானதுவேதமே,சொல்லுவதுநல்அறம்ஏ—உயிர்களுக்கு எடுத்துக்கூறுவது நல்லதருமநெறியே, இல்ஆவது முத்திக்கு ஏதுஆம் இதலம்ஏ—தாமெழுந்தருளியிருக்கு முறையுளாவது மோட்சத்திற் கேதுவாகிய இந்தக் காசித்திருப்பதியே, அல்ஆர்குழல் அளவும்—அந்தகாரத்தையொத்த கூந்தலையுடைய என்தலைவிமட்டுக்கும், மனம்வயிரக்கல்லாய் இருந்த ஆறுஆ — இரங்காமல் அவரது திருவுளம் வயிரக்கல்லாயிருந்தவகை மிகவுமாச்சரியம்.

உயிர்கள்மேல்வைத்த கருணையின்பொருட்டுச்சொல்மறையும், சொல்லுவது அறமும் இல்முத்தித்தலமுமாயுள்ளவர், அவ்வுயிர்களு ளிவளும்ஒருத்தியாதலால்இவளிடத்துக்கருணைவையாதகாரணம் ஆச்சரியமென்பாள் மனம் வயிரக்கல்லாயிருந்தவாஆஎன்றாள். கொல் அசைநிலை. ஆவது எழுவாய்ச்சொல்லுருபு (கக)

[கட்டளைக்கலித்துறை.]

பிரானென்றவர்க்கொருபெணொடுமோடிப்பெருங்கருணை
தராநின்றகாசித்தடம்பதியார்வந்தென்றன்னகத்தே
இராநின்றனரைம்புலக்கள்வர்கொள்ளையிட்டேகுதற்கே
வராநின்றபோதுள்ளமாதனங்காத்துவழங்குதற்கே.

இ - ள். பிரான் என்றவர்க்கு ஒருபெண் ஒடும் ஓடிபெருங்கருணைதராநின்றகாசிதடபதியார் — தமக்கு இறைவனென்று கருதி மனமுருகும் அடியவர்களுக்கு ஒப்பில்லாத இறைவியோடு விரைந்துசென்று மிக்கதிருவருள் செய்யுங் காசியென்னும் பெருமையமைந்ததிருப்பதியிலெழுந்தருளிய இறைவர், ஐம்புலக்கள்வர் கொள்ளையிட்டு ஏகுதற்குவராநின்றபோது — பஞ்சேந்திரியங்களாகிய கள்வர்கள் கொள்ளையாடிப் போக வாராநின்றகாலத்தில், உள்ளம் மாதனம் காத்துவழங்குதற்கு— அறிவாகிய பெரிய பொருள்களையவர்கள் கவராமற் காத்தோம்ப, வந்து என்தன் அகத்து இராநின்றனர்— எழுந்தருளியென்மனத்தி லென்றுமிருக்கின்றனர்

உள்ளம் ஆன்மா. இங்குஅறிவின்மேல்நின்றது. காத்து வழங்குதற்கு ஒருசொல். ஏகுதற்கு, காத்துவழங்குதற்கு எதிர்காலத்தில் வந்த வினையெச்சங்கள். து, அன்எனப்பிரித்து அவ்விரண்டையுஞ் சாரியையாகவும், கு வினையெச்சவிகுதியாகவுங் கொள்க. என்றன் படர்க்கை யிடத்திற்குரியசாரியை தன்மையிடத்து வந்ததால் இடவழுவமைதி. (உ0)

[கொற்றியார். அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.]

வழுத்துமவர்க்காநந்தவாழ்க்கையருள்வார்காசிவளமையெல்லாம்
கொழுத்ததமிழாற்பாடித்துளசிமணிதரித்தாடுங்கொற்றியாரே
பழுத்ததவக்கோலமுங்கைச்சங்கமுமாழியுங்கண்டுபணிந்தேமாசில்
முழுத்ததவத்தால்யாமுமாலாயினேங்கூடிமுயங்குவீரே.

இ - ள். வழுத்துமவர்க்கு ஆநந்தவாழ்வை அருள்வார் காசிவளமைஎல்லாம்— துதிப்போருக்குப் பேரின்பவாழ்வினை யருளுமிறைவரது காசிப்பதியிலுள்ள வளப்பத்தையெல்லாம், கொழுத்ததமிழால்பாடி துளசிமணிதரித்து ஆடும் கொற்றியாரே— பசையுறுததமிழினாற் பாடித் துளசிமணியைத்தரித்தாடாநின்ற கொற்றியாரே, பழுத்ததவம் கோலம் உம்கை சங்கம் உம் ஆழிஉம் கண்டுபணிந்தேம்—கனிந்ததவக்கோலத்தையும்கையிலேந்தியசங்கினையுஞ் சக்கரத்தையுங்கண்டுபணிந்தேம், மாசுஇல் முழுத்ததவத்து ஆல் யாமும் மாலாயினேம்—அப்பணிதலால்வந்த குற்றமில்லாத தவத்தினால் மாலானோம் கூடிமுயங்குவீர்—ஆதலா லெம்மைக் கூடிக்கலப்பீர்.

மாலாயினோம் திருமாலானோம், காமங்கொண்டோம். திருமால்சின்னம் பூண்டு பலிக்குவரும்பெண் கொற்றியார். பணிந்தேம் என்னும்வினைமுற்றினின்று பிரிந்ததொழிற்பெயர் மூன்றனுருபேற்றது. (உக)

[கட்டளைக்கலித்துறை]

முயலாமலேதவமுந்நித்திருவைமுயங்கநல்கும்
கயலார்பெருந்தடங்கண்ணிபங்காரருட்காசியிலே
செயலாவதொன்றிலைவாளாநெடுந்துயில்செய்யுமுங்கள்
பயலாகவேபணிசெய்வார்புவனம்படைப்பவரே.

இ - ள். தவம்முயலாமல் முத்திதிருவை முயங்கநல்கும் கயல்ஆர்பெருந்தடகண்ணிபங்கார் அருள் காசியில் — மோட்சத்தைவேண்டி யொருவர் தவஞ்செய்யாதிருக்கவும் மோட்சமாகியபெண்ணைக்கூட அவர்களுக்குக்கொடுத்தருளும் கயலையொத்த பெரிய பரந்த கண்களையுடைய இறைவியையோர்பாலுடைய இறைவரது அருள்நிறைந்த காசித்திருப்பதியில், செயல் ஆவது ஒன்றுஇல்லை — உலகீர் செய்யவேண்டுந்தவமொன்றுமில்லை, வாளாநெடுந்துயில்செய்யும் — வறிதேயிருந்து பெரியநித்திரை செய்யுங்கள், புவனம் படைப்பவர் உங்கள் பையலாக பணிசெய்வார்—உலகினைப்படைக்கும் பிரமர்களுங்களாளா கவிருந்து நீங்களேவிய வேவல்களைச்செய்வார்கள்.

இறந்தாற் சிவசாரூப்பியம் பெறுவது திண்ணமாதலாலிவ்வாறு கூறினார் பையல் பயல் முதனிலைப்போலி. (உஉ)

[கட்டளைக்கலிப்பா.]

படுத்தபாயுடனேபிணிமூழ்கினும்—பல்விழுந்துநரைத்தறமூப்பினும்
அடுத்ததிங்கிவர்க்கேபெருவாழ்வெனும்—அப்பெரும்பதியெப்பதியென்பிரேல்
விடுத்துவிட்டிந்திரதிருவும்புவி—வெண்குடைக்கவிகைமொசாட்சியும்
கடுத்ததும்புகளத்தரைத்தேவோர்—காதலித்துவருந்திருக்காசியே.

இ - ள். படுத்தபாய் உடனே பிணிமூழ்கினும்—படுத்த படுக்கையோ

டு நோயிலழுந்தினுலும், பல்விழுந்து நரைத்து அறமூப்பினும்— பற்கள்விழுந்து நரைத்து மிகவு மூப்படைந்தாலும், இங்கு இவர்க்கு ஏபெரு வாழ்வு அடுத்ததுஎன்னும் அ பெரும்பதி எபதி என்பிரேல் — இந்நிலவுலகி லிவர்களுக்கே முத்திவாழ்க்கையடுத்ததென்னு மந்தப்பெரிய திருப்பதி எந்தத்திருப்பதியென்று வினவுவீராகில், இந்திரதிருவும் வெண்குடைக்குள் புவிஇடும் அரசு ஆட்சிஉம் விடுத்துவிட்டு—இந்திர செல்வத்தையும் தவளவட்டக் குடைநிழலின்கீழ் நிலவுலகை வைத்தாளுமரசியலையுங் கைவிட்டு, கடுததும்புகளத்தரை தேடுவோர் காதலித்துவரும் திருகாசி — விஷந்ததும்பிய சீகண்டத்தையுடைய இறைவரை நாடுவோர்கள் விரும்பிவந்தடையுந் திருக்காசியாம்.

பெருஞ்செல்வத்தையு மதைநுகர்தற்குரிய இளமைப்பருவத்தையுங்கைவிட்டு இறைவரையே நாடும் துறவிகள் வந்தடையுங்காசிஎன்றதனுல் அற்பச்செல்வத்தையு மிளமையும் விரும்பிவாழ்வோர் என்பது போதரலால் உதாரவணி. (உரு)

சட்டளைக்கலித்துறை.

பாங்கியறியாள்போன்றுகூறல்.

திருக்கோலங்கொண்டநற்றேன்மொழியாளெண்டிசையினுநின்
உருக்கோலமேகண்டுங்கண்டிலள்போலுமொழுகுநறை
மருக்கோலநீலக்குழல்சேரவிமுத்தவாணதொல்லை
இருக்கோலமிட்டுணராயெங்குமாகியிருப்பதுவே

இ - ள். திருகோலம்கொண்ட நல்தேன்மொழியாள் எண்திசையினும் நின்உருக்கோலம் ஏகண்டும்— இலட்சுமிதேவியின் பொலிவைக்கொண்டஇனிய தேன்போன்ற சொல்லையுடைய வென்றலைவி யெட்டுத்திக்கிலுமுன்னை யுருவெளித்தோற்றங்கண்டும், நறை ஒழுகுமருகோலம் நீலம் குழல்சேர் அவிமுத்தவாண—தேனொழுகும் வாசமிக்க அழகிய கரிய கூந்தலையுடைய இறைவியை யிடப்பாகத்திற் கொண்டு காசியில் வாழுகின்றவனே, தொல்லைஇருக்கு ஓலம் இட்டு உணராய் — தொன்றுதொட்டுள்ள இருக்குவேதமுறையிட்டு மறிதற்கரியவனே, எங்கும ஆகி இருப்பது கண்டிலள்போலும்—நீயெங்குமாகியிருத்தலையறியாள் போலும்.

குறியிடங்கூறிய பாங்கிதலைவன்வர அறியாள்போன்ற அவன்வரவை விலக்கியது. (உ௪)

இதுவுமது.

குறியிடத்தெதிர்ப்பட்ட தலைவற்குப் பாங்கிகூறல்.

இருகுங்குமக்குன்றும்பீர்பூப்பக்காமவெரியினின்
றுருகும்பசும்பொன்னுக்கோர்மாற்றுண்டேலுரையாய்தொடுத்துச்
செருகுநறுங்கொன்றைதேன்பிழிந்தூற்றச்சிறைச்சுரும்பர்
பருகும்பொலஞ்சடையாய்காசிவாழ்முக்கட்பண்ணவனே.

இ - ள். தொடுத்து செருகும் நறுங்கொன்றை தேன்பிழிந்து ஊற்ற— தொடுத்துச்செருகிய நறுமணங்கமழுங் கொன்றைமாலை தேனைப்பிழிந்தூற்ற, சிறைசுரும்பர்பருகும்பொலம் சடையாய் காசிவாழ்முக்கண்பண்ணவனே—

சிறகினையுடைய வண்டுகள்தேன்பருகும்பொன்னிறமமைந்த சடாமுடியையு டையாய் காசியில்வாழுந் திரிநேத்திரங்களையுடையதேவதேவனே, இருகுங் குமம் குன்றும் பீர்பூப்ப காமஎரியில் நின்று உருகும் பசும்பொன்னுக்கு ஓர் மாற்று உனைடேல் உரையாய் — இரண்டுகுங்குமங்களையணிந்த தனமாகிய மலைகள் பசலைபூக்கக் காமாக்கினியினின்று உருகாநின்ற பசியபொன்னுக் கு ஒருமாற்றுயினுமிருககுமாகிற் கூறுய்

மாற்று பொன்னின்மாறு, சொல, சொல்லுக்குக்கொள்ளும்போதுமா றயஎன்றது கடைக்குறையாய் நின்றதெனக்கொள்க. தாங்கூறிய குறியிட த்துவந்த தலைவனுக்குத் தலைவிவந்து வறிதேநின்று வருந்திச்சென்றனளென் பாள் கவா பொருள்பட ஓர மாற்றுண்டே லுரையாய் என்றாள். பொன்னி றம்வாய்ந்த சடாமுடியைக்கணடு மயங்கினமையால் தனமும் பொன்னிறம் வாய்நததெனபாள். பீர பூப்ப என்றாள். காமவெரியில்நின்று உருகும்பசும் பொன்னுக்கு உன்னையடையாத காமநோய்ந் மனமுருகு ம்பசியபொன் போல்வாளுக்கு, பசியபொன்னுக்குஎன... சுநம்ப இறுதிநிலைப் போலி (உ௫)

(கலிநிலைத்துறை)

தலைவன்வருகை நகுபபாங்கிட ... கூறல்

பணேறோர்வேதம்பாடியகாசிபட ...
பெண்ணேரொருவனெயக்ணையைந் ... பெய்தானும்
உணணோநின்றுயின்னருளாலெனனுயிரனறோள்
கண்ணோநிறறகொலகியொழிநத ...

இ-ள். பண் ஓர வேதம பாடியகாசிபதியாய் —பணணமைநத பொப் பில்லாத சாமவேதந்தைப் பாடிய காசிப்... யுடையாய், இ பெண் நேர் ஒருவன் எய்கணைஐந்தும்பெய்தான் — ... றகுநேரோநின்று மன் மதனொருவனெய்தற்குரிய ஐந்துபாணங்களையு மொருசேர வெய்தான், கழு நீர—(அவறறுள்) குவளையென்னும பாணம, என உயிர அன்றோள் கணநேர் நிற்றற்கு ஒல்கி ஒழிநத—எனது உயிாபோனறதலைவியின் கணகளுக்கு நேரோ நிற்றற்குத் தளாந்தொழிநதன, (அதனு லுயிரோடிருக்கின்றுள) நின் அரு ளால் உள்நோ நின்றுய்— இனியகருணையோடு அப்பெண்ணினுள்ளத்தில் நே ரோநின்றருளினுய் (புரநதுநிறபில அமமன்மதனெய்வாறு அஞ்சியெய்யான்)

இன்னருளால் என் உயிர அன்றுள கணநோநிறறகு ஒல்கி ஒழிந்த உண்ணோநின்றுய் என்பதற்கு இனிய கருணையால எனதுயிரன்னுள்கண்க ளுக்கு நேரோநின்றல நேவரணிநத குவளைமலாமாலை யொல்கியொழியுமென் று அவளுள்ளததில நேரோநின்றருளினுயெனட பொருள்கொள்ளுதலுமொன் று இறைவனேரவசரத்தி குவளைமலாமாலை புனைதலால் கழுநீர மாலையென் று ஒல்கியொழிநத கழுநீர எனறதுல உயிரோடிருக்கின்றுள் என்பதும், உண்ணோநின்றுய் எனறதனுலபுறத்துநின்றுலெயவானுமென்டதும் புலப்படு தலால் உதாரவணி மன்மதன்பாணங்கள் தாமரை, மாம்பூ, அசோகு, முல் லை, நீலோறபலம இவறறுள தாமரை நினைப்புணடாககும், மாம்பூ பசலையுண்

டாக்கும், அசோகு அறிவினைநீக்கும், முல்லை படுக்கையோடிருக்கச்செய்யும், நீலோற்பலம் கொல்லும். கழுநீர் பால்பகாவஃறிணை யியற்பெயராதலால் ஒழிந்தவெனப் பன்மைமுடிபு தந்தார் "பால்பகா வஃறிணைப்பெயர்கள்பாற் பொதுமைய, என்றதனால்.

கட்டளைக்கலித்துறை.

தலைவன்சிறைப்புறமாகத் தலைவிகூறல்.

கழியுந்தலைக்கலன்பூண்டாடுங்காசிக்கடவுணுதல்
விழியுமிடக்கணும்வெண்ணெருப்பேயவ்விழியிரண்டில்
பொழியுங்கனல்விழிக்காமனைக்காய்ந்ததப்போரிலுடைந்
தொழியும்படைகளென்றுவெமைக்காயுமற்றோர்விழியே.

இ - ள். கழியும் தலைகலன் பூண்டு ஆடும் காசிகடவுள் நுதல்விழியும் இடக்கண் உம் வெண் நெருப்பே—ஊன்கழிந்த பிரமகபாலத்தைத் திருக்கரத்திலேந்தியாடியருளும் காசித்திருப்பதியி லெழுந்தருளிய இறைவரது நெற்றிக் கண்ணுமிடக்கண்ணும் வெள்ளியநெருப்பே, அ விழி இரண்டில் கனல்பொழியும்விழி காமனை காய்ந்தது— அக்கண்ணிரண்டில் நெருப்பைச்சிந்துங்கண் மன்மதனையெரித்தது, அ போரில் உடைந்து ஒழியும படைகள் என்று மற்று ஓர்விழி எம்மைகாயும்—அந்தப்போரிற் புறங்கொடுத்தொழிந்த சேனைகளென்றுசந்திரனாகிய வேறோர்கண எம்மைக்காயாநின்றது.

மற்று பிறிதென்னும்பொருளில்வந்த இடைச்சொல். செந்நிறத்தையொழித்து வெண்ணெருப்பு என்றுகூறுதல் தருக்கநூலார் வழக்கு. (உஎ)

[மடக்கு, அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்]

விழைகுவதன்பரகஞ்சுகமே—வெங்கரியின்னுரிகஞ்சுகமே
தொழிலடிகட்குளமாலயமே—தூமுனிவோருளமாலயமே
அழகமரும்பணியென்பணியே—ஆட்கொளமேற்கொள்வதென்பணியே
மழகளிறீன்றவளம்பதியே—வாழ்வதுகாசிவளம்பதியே.

இ - ள். அன்பர் அகம் சுகமேவிழைகுவது—அடியவரிதயம் பேரின்ப சுகத்தையே விரும்புவது, வெம்கரியின் உரிகஞ்சுகம்ஏ—கொடிய யானையின் றோல்மேற்போர்வையே, அடிகட்குஉள்ளதொழில்மாலயம்ஏ—தேவரீருக்குரியதொழில் பெரிய சங்காரத்தொழிலே, தூமுனிவோர் உள்ளம் ஆலயம் ஏ—புனிதம்வாய்ந்த முனிவர்களது இரதயம் தேவரீருக்குத் திருக்கோயிலே, அழகுஅமரும்பணி என்புஅணி ஏ—அழகமைந்த ஆபரண மெலும்பாபரணமே ஆள்கொள்ள மேற்கொள்வது என்பணி ஏ—என்னையமடிமைகொள்ளத் தேவரீரங்கீகரிப்பது என்சிற்றடிமைதொழிலையே, மழகளிறு ஈன்றவள் அம்பதி—யானைமுகக்கடவுளை யீன்றருளிய இறைவிக்கு அழகியதலைவராகிய இறைவர், வாழ்வது காசிவளம்பதி ஏ—வாழ்ந்தருளுவது காசியென்னும் வளமைவாய்ந்ததிருப்பதியே.

ஈன்றவளம்பதியே என்பதனிறுதியிலுள்ள ஏகாரம் அசைநிலை, மற்றை ஏகாரங்கள் பிரிநிலைப் பொருளன. வளம்பதி ஒரிசொற்றொடராதலால்

பொதுவிதிபெறாது, வரும் வல்லினத்திற்கு இனவெழுத்து மிகுந்தது "இடையுரிவடசொலின்" என்றசூத்திரத்தால் இது இறுதிச்சீர் மடக்கு. (உ௮)

[மடக்கு, கட்டளைக்கலிப்பா]

வண்ணமேனியரும்புவனங்களே—வாசம்வாசமரும்புவனங்களே
நண்ணுமாலயமாதவரங்கமே—ஞாலமேழ்தருமாதவரங்கமே
தண்ணெனன்மாலைதருமருக்கொன்றையே—தருவதையாதருமருக்கொன்றையே
கண்ணினிற்பர்மனத்திருக்கோயிலே—காசியேயவர்க்கோர்திருக்கோயிலே.

இ-ள். வண்ணம் மேனி அரும்புவனங்கள் ஏ—செந்நிறம் வாய்ந்த திருமேனி அரிய இருநூற்றிருபத்து நான்குபுவனங்களே, வாசம்வாசம் அரும் புவனங்கள் ஏ—வாசஞ்செய்யுமிடம வாசம் வீசும் ஆநந்தவனமே, நண்ணும் ஆலயம்மாதவர்அங்கம்ஏ— அவர் எழுந்தருளிய ஆலயம பெரிய தபோதனரது இரதயமே, ஞாலம் ஏழ்தரும் மாது அவர் அங்கம் ஏ—ஏழுலகங்களையு மீன்றருளு மிறைவியிருந்தருளு மிடமவரது திருமேனியே, தண்ணெனன்மாலை தருமருகொன்றைஏ—குளிர்ந்தமாலை கொன்றை மரத்திலுள்ள வாசங்கமலர் களே, ஐயர் தருமருக்குதருவது ஒன்றை ஏ—இறைவர் அறத்தின்வழிநிற்ப வர்க்கு அருளுவது முத்தியையே, மனமதிருக்கு ஒயில கண்ணில நிற்பர—மனத்திலுள்ள மாறுபாடுகெட்டால் அவர்மனக்கண்ணி லெழுந்தருளிநிற்பார், அவர்க்குகாசிஏ ஓர் திருக்கோயில்— அவ்விறைவர்க்கு காசியென்னுந் திருப்பதியே ஒப்பில்லாத திருக்கோயிலாம்.

ஆறத்து வாக்களு மிறைவாக்குத திருமேனியாதலால் வண்ணமேனி யரும்புவனங்கள் என்றா ஆறந்துவாக்களிற் புவனங்களொன்று வனங்கள் என்றது உயர்வால்வந்த பால்வழுவமைதி (உ௯)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

திருகுசினக்கூற்றினெயிற்றிடைக்கிடந்துங் கடைநாளிற்றிரையேழொன்றாய்
பெருகுமுழுநீத்தத்திற்றிளைத்தாடப்புணைதேடும்பேதைநெஞ்சே [ப்
உருகிலைநெக்குடைந்திலைமொண்டாநந்தவனத்தேனையோடியோடிப
பருகிலைகண்ணருமபிலைமெய்பொடித்திலைமற்றுனக்கென்னபாவந்தானே.

இ-ள். திருகுசினம் கூற்றின் எயிறு இடை கிடந்தும்—மாறுபட்ட கோபத்தையுடைய இயமன் வக்கிரதந்தத்தி லகப்பட்டிருந்தும், கடைநாள் இல்திரை ஏழ் ஒன்றுஆய் பெருகுமுழுநீத், தில் திளைத்து ஆட புணைதேடும் பேதை நெஞ்சே— இறுதிநாளில் எழுகடலுமொன்றாகிப் பெருகாநின்றபெருவெள்ளத்தி லிடையறாதொழுகி நீராடத் தெப்பந்தேடாநின்ற அறிவில்லாதமனமே, உருகுஇலை—மனமிளகிலை, நெக்குஉடைந்திலை— நெக்குவிட்டுடைந்தாயில்லை, ஆநந்தவனத்தேனை ஓடிஓடி மொண்டுபெருகிலை— ஆநந்தவனத்திற்பெருக்கெடுத்த ஆராவின்பத்தேனைவிரைந்து முகந்துகுடித்திலை, கண்அரும்பு இலை— ஆநந்தபாஷ்பம் சிந்திலை, மெய் பொடித்திலை—மயிர்க்கூச்செறிந்திலை, உனக்கு என்னபாவம் (இவ்வாறு கருதி நீவாளாவிருத்தல்) உனக்கென்னபாவம் (அறியேன் என்றபடி

இயமன்கையி லகப்பட்டு நிலையில்லாதிருக்க நெடுநாளிருப்போமென்று

கருதலால் பேதைநெஞ்சே என்றார் கடைநாளிற் றினைத்தாடப்புணைதேடும் என்றது நெடுநாளை மற்று அசைநிலை (௩௦)

[நேரிசைவெண்பா]

பாவலருநாவலரும்பண்மலரக்கணமலருங்
காவலருமேடவிழ்க்குங்காசியே—தீவளருங்
கஞ்சக்கரத்தான்கலைமறைக்குநாயகமாம்
அஞ்சக்கரத்தானகம்.

இ - ள். பாஅலரும் நாவலரும் பணமலர காவல் அரும் ஏடு அவிழ்க்கும்— செய்யுள் பரந்தமைந்த நாவல்வல்ல புலவர்களும் பண்ணிலமையக் காவலிலமைந்த அரியஏட்டினை யவிழ்த்துப்பாடும் (பணமலரகள் மலரும் காஅலரும் ஏடு அவிழக்கும்— வண்டினிசைமல்கமது வோடுமலர்களும் சோலையில லருமிதழையவிழ்க்கும்) காசி— காசிப்பதியானது, தீவளரும் கஞ்சம் கரத்தான்— தீயினையேந்திய தாமரை மலர்போன்ற திருக்கரத்தை யுடையவனும், கலைமறைக்கு நாயகம் ஆய அஞ்சக்கரத்தான் அகம— ஆறங்கங்களையுடைய வேதங்களுக்குத் தலைமைவாய்ந்த ஸ்ரீ பஞ்சாக்கரத்தையுடையவனுமாகிய இறைவனது வீடாம்

அவிழ்க்கும என்னும பெயரெச்சத்திற்குக் காசி எல்லைப்பொருளாய்நின்றது. காசி அகம் எனமுடிக்க. வேதங்களினுட் கிடைப்பொருளாயுள்ளது ஸ்ரீ பஞ்சாக்கரமாதலால நாயகமாம அஞ்சக்கரத்தானென்றார். ஆறங்கங்களாவன சிட்சை, வியாகரணம் சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம் (௩௧)

[இதுவமது]

அகமேயவிமுத்தமையரிவாககாகஞ்
சகமேழுமீன்றெடுத்ததாயே—மிகமேவும்
எணணம்பரமேயெமக்களித்தன்முச்சுடருங்
கண்ணம்பரமேகலை

இ - ள். ஐயா இவர்க்கு அகம அவிமுத்தம ஏ — இறைவராகிய இவர்க்குத்திருக்கோயில்காசியே, ஆகமசகம்ஏழும் ஈன்று எடுத்ததாயஏ — திருமேனியேழுலகையும் பெற்று வளர்த்த உமாதேவியே, எமக்கு அளித்தல் மிக மேவும் எண் அம்பரம்ஏ— தம்மைச்சரணடைந்த வெமக்கருளுவது மிகவும் விரும்பப்படும் யாவரும் கருதுமழகிய முத்தியே, முச்சுடரும் ஏ கண—சோமசூரியாக்கினிகளேகண்கள, கலை அம்பரமே — உடுக்கும் ஆடை எட்டுத்திசையுமே.

இவர் திருமேனிகொண்டருளியது உலகினைப்படைத்தல் முதலியதொழில்களுக்கும், பரிபக்குவம்வாய்ந்தஆன்மாக்களுக்குமுத்திகொடுத்தருளுதற்கும், தம்மை யிறைவனென்றுணர்ந்து பரிபக்குவமான்மாக்களுக்கு வருதற்குமே யென்பார் இவ்வாறுகூறினர். பிரிநிலைஏகாரம் தொகுத்தல். (௩௨)

[அம்மானை, மடக்குத்தாழிசை]

கலைமதியின்கீற்றணிந்தகாசியகிலேசர்
சிலைமதனைக்கணலாற்செற்றனாகாணம்மானை

சிலைமதனைக் கண்ணழலாற் செற்றானே யாமாகின்
மலைமகட்கு பாகம் வழங்குவதேன் அம்மானை
வழங்காரோ பெண்பாலு மாலானாலம்மானை

இ - ள் கலைமதியின் கீற்று அணிந்த காசி அகிலேசா—கலைநிறைந்தசந்திரனது கீற்றினையணிந்த காசியிலெழுந்தருளிய விசுவேசா, சிலைமதனைக் கண் அழலால் செற்றனாகில் அம்மானை—வில்லினையேந்திய மன்மதனை நெற்றிக்கண்ணாலெரித்தாராகில் அம்மானையே, சிலைமதனைச் செற்றனர் ஆமாகில்—வில்லேந்திய அம் மன்மதனை நெற்றிக்கண்ணா லெரித்தாராயின், மலைமகட்கு பாகம் வழங்குவது ஏன் அம்மானை—உமாதேவியாருக்கு இடப்பாகந்தந்தருளியது யாது அம்மனையே, அப்பாகம் மால் ஆனால் வழங்காரோ அம்மானை—அந்த இடப்பாலு மாலாயினதால் கொடுத்தருளார் அம்மனையே

உமாதேவியார் திருமாலாதலால், மயக்க முடையராதலால், என்னுங் கவர்பொருள்தோன்ற மாலானால் வழங்காரோ என்றார் அம்மனையாடும் பெண்கள் தம்முள் வினாவிடையாக ஒருவர்க்கொருவர் கூறுங் கருத்து அம்மனையை முன்னிலையாக்கிக் கூறுமொரு விளையாட்டு அம்மனை அம்மானை சீட்டல்விகாரம். கலைமதியின்கீற்று ஒற்றுமைக் கிழமைப்பொருளில் வந்த ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் பிளவுசந்திரன்மேல் நின்றது (...)

கட்டளைக்கலித்துறை

அம்மனைதம்மனையாந்திருக்கோயி லவிமுத்தம்
எம்மனையாயத் தந்தையாயிருந்தாரடிக்கீழ்ச்சென்று
நம்மனைமக்களென்றேக்கப்பீருங்க ணாளுலந்தால்
சொம்மனைவைத்தெப்படிநடப்பீர் யமனூர்சென்றே

இ - ள் நம்மனைமக்கள் என்று ஏக்கறுவீர் நமது வீட்டிலுள்ளவர்களென்று தாழ்ந்து நிற்கும் உலகீர், அம்மை கம்மனைக்கு திருக்கோயில் அவிமுத்தம் ஆக—உலகமாதாவாகிய இறைவியைத் தமது மனைவியாகவும் திருக்கோயில் காசியாகவும், எம் அன்னையாய தந்தையாய் இருந்தார் அடிக்கீழ் இறைஞ்சீர்—எமக்குத்தாயாகவுந் தந்தையாகவுமிருந்தவரது திருவடிக்கீழ்ச்சென்று வணங்குவீர், உங்கள் நாள் உலந்தால் சொம்மனைவைத்து யமன்றூர் ஒடு எப்படி நடப்பீர்—(இவ்வாறு நாள்கழித்தகலால்) உங்கள் ஆயுள்நாளழிந்தால் உங்களுக்குரியவீட்டினை நிலவுலகிலவிட்டு யமபட்டினம் எவ்வாறு அவர்கள் பின்தொடர்வீர்

மனை மனைவியென்னுமமையும் சொல் தேசிகச்சொல் ஏக்கறுப்பீர் ஏக்கறுபகுதி, பகரமெய் சந்தி, பகரமெய் யீற்று நிலை ஈர் முன்னிலைப்பன்மை விகுதி. (...)

கட்டளைக்கலிப்பா

தூதுகொண்டுந்தமைத் தோழமைகொண்ட—தொண்டர் தண்டமிழ்ச் சொற்கொண்ட குண்டலக், காதுகொண்டெங் கவிதைகொண்டாட்கொண்ட—காசிநாதர் கருத்தேசரிசெய் போதுகொண்டோர் பசிலை கொண்டு

தான்—பூசைசெய்திலர் புண்டரிகப்பதம், ஏதுகொண்டு கொடுப்பர்கொடுப்பரேல்—இருவருக்குமற் றென்படுநெஞ்சமே.

இ - ள். தம்மை தூதுகொண்டும் தோழமைகொண்ட தொண்டர்—தம்மைத் தூதாகக்கொண்டுந் தோழமையாகக்கொண்ட சுந்தரமூர்த்தி நாயனாருடைய, தண்தமிழ்சொல் கொண்ட குண்டலம் காதுகொண்டு—தண்ணிய தமிழ்ப் பதிகத்தைக்கேட்டருளிய மகரகுண்டலமணிந்த திருச்செவியால், எம்கவிதைகொண்டு ஆட்கொண்ட காசிநாதர் கருத்து ஏது அறிகிலேம்—எமது புன்கவியையுங் கேட்டருளி யடிமைகொண்டருளிய காசியி லெழுந்தருளிய இறைவரது திருவுள்ளத்தை யின்னதென்றறிகிலோம், ஒருபோது கொண்டு பச்சிலைகொண்டு பூசை செய்திலர்—ஒருமலரைக் கொண்டாயினும் பச்சிலையைக் கொண்டாயினும் பூசைசெய் தறிந்திலர், புண்டரிகப்பதம் ஏதுகொண்டு கொடுப்பர்—தாமரை மலர்போன்ற தமது திருவடிகளை யவர்களுக்கு என்ன பயன்கொண்டு கொடுத்தருளுவர், கொடுப்பரேல் இருவருக்கு உம் நெஞ்சம் என்படும்—கொடுத்தருள்வாராயி லந்நாயனார்க்கு மெமக்குமனம் என்ன பாடுபடும்.

சுந்தரமூர்த்தி நாயனாரிடத்துப் பிணக்குற்ற பரவைநாய்ச்சியார் பிணக்கினையொழித்தருள இரவிலிறைவர் தூதுசென்றதும், அந்நாயனாரைத் தமக்குத் தோழமையாகக் கொண்டருளியது மந்நாயனாரோதுந் திருப்பதிகங்களுக்கே, என்னையடிமைகொண்டது தம்மேனுன்பாடும் புன்கவிகளே, இவ்வாறிருக்கஅக்காசியில்யாதொருசெயலுமில்லாதிருப்பவர்களுக்கு முத்திகொடுக்கின்றனர்,இதனைக்கண்டா லெங்கள்மனம் என்ன அழுக்காறடையும் என்பார் என்படுநெஞ்சம் என்றார். மற்று அசைநிலை கொண்டு மூன்றாம்வேற்றுமைச்சொல்லுருபு (௩௫)

[சித்து, நேரிசைவெண்பா]

ஏடவிழ்பொற்கொன்றையகிலேசரன்பர்க்கேயிருப்பை
ஆடகமாக்கிக்கொடுத்தோமவ்வளவோ—நீடுதிறல்
காட்டுமிமையோர்க்கிருப்புக்கற்கனகமாக்கியண்ட
வோட்டினையும்பொன்னாக்கினோம்.

இ - ள். ஏடு அவிழ் பொன்கொன்றை அகிலேசர் அன்பர்க்கு ஏ இருப்பை—இதழவிழ்ந்த பொன்னிறம்வாய்ந்த கொன்றைமாலையையணிந்த விசுவேசரடியவராகிய தேவர்களுக்கு இருப்பினை, ஆடகம் ஆக்கி கொடுத்தோம் அஅளவு ஓ—மாற்றுயர்ந்த பொன்னாக்கிக்கொடுத்தோ மதுமட்டா, நீடுதிறல் காட்டும் இமையோர்க்கு இருப்புக்கல் கனகம் ஆக்கி அண்ட ஓட்டினையும் பொன் ஆக்கினோம்—மிக்க வன்மையைக்காட்டு மத்தேவர்களுக்கு இருப்புக் கல்லினைப்பொன்னாக்கி முட்டையோட்டையும் பொன்னாக்கித்தந்தோம்.

சித்துகலம்பகத்தில்வருமுறுப்புகளுளொன்று. அது சித்தர்செயலைக்கூறுவது. தேவர்களுலகுபொன்னுலகுமேருமலையுமாதலால்இருப்பையாடகம்,கற்கனகமாக்கி யெனவும், அண்டங்கள் முட்டைபோலுமுருட்சிவடிவாதலால்அ

ண்டவோட்டினையும்பொன்னாக்கினேமெனவுங்கூறினர். இருப்புஇரும்புஇருக்கை கல்மேருமலை. இமையோர்என்பதன்முதலில்அகரச்சுட்டுத்தொகுத்தல்.

நேரிசையாசிரியப்பா.

பொன்னுருக்கன்னபூந்துணர்க்கொன்றையும், வெள்ளிமுளையன்னவிரிநிலாக்கொழுந்தும், காந்தண்மலர்ந்தன்னபாந்தளினிரையும், திரைசுழித்தெறியும்பொருபுனற்கங்கையில், வெள்ளிதழ்க்கமலம்வள்ளவாய்விரித்தென, முழுநகைமுகிழ்க்குங்கழிமுடைவெண்டலை, தோலடிச்செங்காற்பால்புரைவரிச்சிறைக், கிஞ்சுகமலர்ந்தசெஞ்சூட்டெகினத், திருவெடுத்தகல்வான்றுருவியுங்காணுத், தொன்மறைக்கிழவசென்னிமற்றியானே, கண்டுகொண்டனனிக்கடவுண்மாமுடியெனப், பெருமகிழ்சிறப்பக்குரவையிட்டார்த்து, வெள்ளெயிறிலங்கவிரைவிற்சிரித்தெனப், பெருவியப்பிறைக்குமெரிபுரைசடையோய், ஆள்வழக்கறுக்கும்வாளமர்த்தடங்கண், மின்னிமைமருங்குற்சின்மொழிமகளிர், ஒழுகொளிமிடற்றினழுகுகவர்ந்துண்டெனக், கயிறுகொண்டார்க்குங்காட்சித்தென்ன, மரகதங்காய்த்துப்பவளம்பழுக்கும், கமஞ்சூற்கமுகின்கழுத்திறயாத்து, வீசொளிப்பசும்பொன்னூசலாட்டயர்தரப், பருமணிக்கமுகின்பசுங்கழுத்தொடிந்து,திரைபடுகுருதித்திரடெறித்தென்ன, முழுக்குலைமுரிந்துபழுக்காய்சிதறும்.மங்குல்கண்படுக்குமதுமலர்ப்பொதும்பர், கங்கைசூழ்கிடந்தகாசிவாண, ஐவளிபித்தெனுமவைதலையெடுப்ப,மெய்விட்டடைவருங்கைவிடுமெல்லையின், மாமுதறடிந்தகாமருகுழவியும், பொழிமதங்கவிழ்க்குமழவிளங்களிறும், மூண்டெழுமானம்பூண்டழுக்கறுப்ப,இடக்கையிணைத்துநின்மடித்தலத்திருத்தி, உலகமோரேழும்பலமுறைபயந்தும், முதிராவிளமுலைமுற்றிழைமடந்தை, ஒண்டொடித்தடக்கையின்வீசுநுண்டுகில், சோலையிற்பிறந்தநாகிளந்தென்றல், மோகமுந்தளர்ச்சியுந்தாகமுந்தணிப்ப, மறைமுதற்பொருளினிறைசுவையமுதினை, அஞ்செவிமடுத்தூணையூட்டிநின், குஞ்சிதவடிக்கீழ்க்குடியிருத்துகவே.

இ - ள். பொன் உருக்கின் அன்னபூந்துணர் கொன்றைஉம் — பொன்னையுருக்கிக் கவிழ்த்தாலொத்த பூங்கொத்துகளாலமைந்த கொன்றைமாலையையும், வெள்ளிமுளை அன்னவிரிநிலாக் கொழுந்துஉம்—வெள்ளிமுளையையொத்த நிலவைவிரிக்கு மிளஞ்சந்திரனையும், காந்தள்மலர்ந்தால் அன்னபாந்தளின்நிரைஉம்— காந்தள்மலர்மலர்ந்தாற்போலப் படத்தைவிரிக்கும் பாம்புகளின் வரிசைகளையும், திரைசுழித்து எறியும்பொரு புனல்கங்கையில் — அலைகள்வாரிச் சுழித்துக்கொழிக்குங் கரையொடுமோது நீர்மயமாகிய கங்கையில், வெள் இதழ்க்கமலம் வள்ளம் வாய் விரித்தால் என்ன — வெள்ளிய இதழையுடைய தாமரைகிண்ணம்போலும் வாய்மலர்ந்தாற்போல, முழுநகைமுகிழ்க்கும்கழிமுடை வெள் தலை—பெரிய ஒளியையரும்புவிக்கமுடை நாற்றத்தையுடைய ஊன்கழிந்த வெள்ளியதலையானது, தொல்மறைகிழவ—தொன்றுதொட்டுள்ள வேதங்களுக்குரிய பிரமனே, தோல் அடி செங்கால் பால் புரைவரிசிறை—தோலடியையுடைய செவந்தகாலையும் பாலையொத்த நிறமமைந்த சிறகினையும், கிஞ்சுகம்மலர்ந்த செஞ்சூட்டு எகினத்து — முண்முருக்குமலர்

போலச் செந்நிறம் வாய்ந்த வுச்சிக்கொண்டையையு முடைய அன்னத்தி
னது, உருஎடுத்து அகல்வான் துருவியும் காணாதசென்னி — வடிவெடுத்
துப்பரந்த வண்டமுகட்டிற்பறந்து தேடியும் கண்டறியாத சிரசை, யானே
கண்டு கொண்டனன் — நானே கண்டுகொண்டேன், இ கடவுள் மாமுடி
என்ன — இந்தக்கடவுளுடைய பெருமையமைந்த அம்முடியையென்று, பெ
ருமகிழ்சிறப்ப — பெருமகிழ்ச்சி சிறந்தோங்க, குரவையிட்டு ஆர்த்தவெள்ளெ
யிறு இலங்கவிளைவில் சிரித்தால்என்ன — கைகொட்டிக் கோஷித்துவெள்
ளியபற்கள்தோன்ற விரைந்துசிரித்தாற்போல, பெருவியப்பு இழைக்கும் எரி
புரைசடையோய் — மிக்கஅதிசயத்தைவிளைக்கும் நெருப்பையொத்த செவந்த
சடாமுடியையுடையவனே, ஆள்வழக்கு அறுக்கும்வாள் அமர்படைகண்மின்
இழைமருங்குல் சில்மொழிமகளிர் — ஆள்கள்சஞ்சரிப்பினையொழிக்கும் வாள்
போன்ற போரிற்குரிய பெரியகண்களையும் மின்னலையு நூலிழையையுமொத்
தஇடையையும் மிருதுவாகிய சொல்லையுமுடையபெண்கள், ஒளி ஒழுகுமிட
ற்றின் அழகுகவர்ந்துஉண்டதுஎன்ன — ஒளிவீசும் கமுகினதுகழுத்தினழகை
க்கொள்ளையிட்டுக்கவர்ந்ததென்று, கயிறு கொண்டு ஆர்க்கும் காட்சித்துஎன்
ன — கயிற்றாற்பிணிக்குங் காட்சியைப்போல, மரகதம்காய்த்து பவளம்பழுக்
கும் கமழ்குல் கமுகின் கழுத்து இறயாத்து — மரகதம்போலும் பசியகாய்க
ளைக் காய்த்துப் பவளம்போலப் பழுக்குமணநிறைந்த சூற்கொண்டகமுகின் மிட
றுமுறியப்பூட்டி, ஒளிவீசு பசும்பொன் ஊசலாட்டு அயாதர — ஒளிவீசும் பசிய
பொன்னாலாகிய ஊசல்விளையாட்டுச்செய்ய, பருமணிகமுகின் பசுங்கழுத்து
ஒடிந்து — பருத்தமாணிக்கம்போலும் பழம்பழுத்த அக்கமுகுகள் கழுத்துமு
ரிந்து, திரைபடுகுருதி திரள்தெறித்தால்என்ன — அலையமைந்த வுதிரவெள்
ளத்திரட்சியைத் தெறித்தாற்போல, முழுகுலைமுரிந்து பழுக்காய்சிதறும் — நி
றைந் தகுலைகள் முரிந்து பழங்களைச்சிந்தும், மங்குல்கண்படுக்கும் மதுமலர்
பொதும்பர் கங்கைசூழ்கிடந்த காசிவாண — மேகங்கள்படிந்துநித்திரைகூருந்
தேன் சிந்துமலர்கள் நெருங்கியசோலையுங் கங்காநதியும் புடைசூழ்ந்த காசி
யின் வாழ்க்கையையுடையோய், ஐவளிபித்துஎன்னும் அவைதலைஎடுப்ப —
வாதபித்த சிலேட்டுமமென்னுமூன்று பிணிகளுந்தத்தநிலைகடந்தோங்க, மெய்
விட்டுஐவரும்கைவிடும் எல்லையில் — சரீரத்தைவிட்டு ஐம்புலன்களாகியஐவ
ருங்கைவிட்டோடுங்காலையில், மாமுதல்தடிந்த காமருகுழவிஉம் — சூரபன்
மனென்னு மாமரத்தைவேரோடுகளைந்த விருப்பஞ்செய்யு முருகக்கடவுளும்;
பொழிமதம்கவிழ்க்கும் மழஇளங்களிறும் — பொழியுமதத்தைக் கவிழ்க்குமி
ளமைவாய்ந்த மூத்தபிள்ளையாரும், மூண்டுஎழுமானம் பூண்டுஅழுக்கறுப்ப —
மூண்டெழுந்த மானம்பூண்டழுக்காறடைய, இடக்கையின் அணைத்து நின்ம
டித்தலத்து இருத்தி — இடத்திருக்கரத்தாலெடுத்தணைத்து உமதுமடித்தலத்
தி லிருக்கச்செய்து, உலகம் ஓரேழும்பலமுறைபயந்தும் — ஏழுலகங்களும்
பலவூழிதோறும் பெற்றெடுத்தும், முதிராதஇளமுலை முற்றிழைமடந்தைஒண்
தொடிதடக்கையின் வீசுநுண்துகில் தோகையில்பிறந்த நாகிளதென்றல் — மு
திராதவிளமைவாய்ந்த தனங்களில் தொழில்முற்றிய ஆபரணங்களையணிந்த

இறைவி, ஒள்ளியவளாய்ப் பணிந்த [illegible] திருக்காதுகளாற் [illegible] நுண்ணிய இடையினையுடைய தோகையாள் [illegible] நாளுங்காறுமுனது, மோகமும் தளர்ச்சியும் காமமும் தணிப்ப—மயக்கத்தையுந் [illegible] தாகத்தையுந் தணிக்க, மறைமுதல் பொருளின் [illegible] சுவை அறிந்து—வேதங்களின் முடிவிலுள்ள பிரணவப்பொருளாகிய சுவை நிறைந்த அமுதத்தை அருளோடு உண்ண ஊட்டி—உட்செவி வாயிலாக [illegible] ஊட்டி, [illegible] குழைச்ச அடிக்கீழ் குடியிருந்து உனது [illegible] குடியிருக்கச் செய்குவள்.

[illegible]

[அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்]

குடியிருக்கும்புனற்குழலை [illegible] மகுடத்தே [illegible] மையுடைய [illegible] நெருங்கும் செம் பொன் அடியிருக்க [illegible] காசிப்பதி [illegible] குடியிருக்கு நிறைக்க [illegible] குழைமுடிச்சி [illegible] குடியிருப்பா மிடையவளோடா [illegible]

இ—ள். [illegible] இடை [illegible] நந்த இடையையுடைய [illegible] அம் [illegible] திருச்சபாலு சோகியார் [illegible] காசியில் [illegible] அருளினியாயுள்ள பெருமானுடைய குடி இருக்கும் புனற்குழலை [illegible] குடியிருக்கும் புலவியுடைய பெண்ணுருக் குடிசையாகிய [illegible] தகில், கொலை கூற்றம் குலைந்த செம்பொன் [illegible] இருக்கும் [illegible] புகிலே புகுந்து கொலைத்தொழிலையுடைய இடம் [illegible] மரிய திருவடியென்னு நிலைத்தமுதமாகிய உரியவீட்டின் [illegible] குடியேறி [illegible] அமுதம் [illegible] பேரின்பமாகிய உறுதியினைப் [illegible] நிலைமைத்தாகிய குவை முயங்கிடயும் [illegible] கொல்லை—வாசனையைப் பொருந்தி, தேனையுடைய [illegible] புடைய அந்தமுதத்திற் [illegible] வேண்டும் (அருளவாய என்றபடி)

புகிலே உரியவீடு 'புகில் [illegible] கொலோ' என்னுந் திருக்குறள் [illegible] உரியவீடு [illegible] அமுது [illegible] கலையா [illegible] உரியு [illegible]

[களி, சந்தத்தாழிசை.]

சோதியொன்றிலொருபாதிசத்தியொருபாதியும்பரமசிவமெனத்
தொகுத்துவைத்தவவிமுத்தநாயகர்துணைப்பதம்பரவுகளியரோம்
ஓதியோதியிளைப்பர்வேதமுணர்ந்துதத்துவமுணர்கிலார்
உணரும்வண்ணமநுபவத்தில்வந்திடுமொருண்மைவாசகமுணர்த்துகேம்
எதினாலறமனைத்தினும்பசுவினைப்படுத்தனல்வளர்த்திடும்
யாகமேயதிகமென்பதன்பர்தமிறைச்சிமிச்சிலதிச்சையார்
ஆதியாரறிவரதுகிடக்கமதுவருந்திலப்பொழுதிலேபெறற்
கரியதோர்பரமசுகம்விளைந்திடுவததுமறுத்தவெவையில்லையே

இ - ள். சோதி ஒன்றில் ஒருபாதிசத்தி ஒருபாதி உம்பரமசிவம் என்ன தொகுத்துவைத்த அவிமுத்த நாயகர் - தமது திருமேனியொளியொன்றிலொருகூறு சத்தியொருகூறுந் தாமென்று ஆன்மாக்கள்பொருட்டுத் தொகுத்துவைத்தருளிய காசியிலெழுந்தருளிய இறைவரது, துணைபதம்பரவு களியரோம்—இரண்டுதிருவடிகளையும்வணங்கும் களியரோம்யாம், வேதம்ஓதி ஓதி இளைப்பர்—வேதங்களை யோதியோதி யிளைப்படைவோர்கள், உணர்ந்து தத்துவம் உணர்கிலார்—அவ்வேதங்களையுணர்ந்து முண்மைப் பொருளை யறியார்கள், உணரும்வண்ணம் அநுபவத்தில்வந்திடும் ஓர்உண்மைவாசகம்உணர்த்துகேம்—அவர்களறியும்வண்ணம் எமக்கனுபவத்தில்வந்த வோருண்மை மொழியைக் கூறுகின்றோம், அறம் அனைத்தினும் பசுவினை படுத்து அனல்வளர்த்திடும்யாகமே அதிகம் என்பது எதினால்—எல்லாத்தருமங்களினு மோருயிரினைக்கொன்று தீயோம்பும்வேள்வியே யதிகமென்றுகூறுவது என்னகாரணத்தால், ஆதியார் ஓ அன்பர்தம் இறைச்சி மிச்சில் இச்சையார—இறைவரோ அடியவரிடமுண்டாகிய எச்சிலி லிச்சையையுடையார், அறிவர் அது கிடக்க—அவரேயறிவாரதுநிற்க, மது அருந்தில் அப்பொழுதிலேபெறற்கு அரியது ஓர்பரமசுகம்விளைந்திடுவது—மதுவைப்பருகில் அப்பொழுதே யடைதற்கரிய பரமசுகம்விளையும், அதுமறுத்த எவை—அம்மதுப் பருகுதலைமறுத்த வுயிர்களியாவை, இல்லை—எல்லாவுயிர்களும் அதைப்பருகுதலே.

மது, தேன், கள், நமதிறைவர் கண்ணப்பநாயனாரெச்சில்செய்தூட்டுமிறைச்சியி லிச்சையையுடையவரேயன்றி வேள்வியிற் கொல்லும் ஓருயிர்த்தசையிலிச்சையை யுடையாரல்லர் அதனால் வேள்வியதிகமென்பது என்ன காரணத்தாலென்பாரெதினாலெனவும், அடியவர்சிவத்திற்கூட்ட அன்பாலோருயிரைக் கொல்லுதலே யறமென்பார் அன்பர்தமிறைச்சி மிச்சிலதிச்சையார் எனவும்,மதுவினை யெவ்வுயிர்களும் பருகுதலால் மறுத்தவெவையில்லை எனவுங்கூறினார். அன்பர்தமிறைச்சி மிச்சில என்றது கண்ணப்பநாயனார் சுவைபார்த்தூட்டிய விறைச்சியை. களி கலம்பகத்திற்கோருறுப்பு. கட்குடியர்க்கு இறைச்சியு மதுவும் வேண்டுதலால் இறைவருண்டாரென்றும் எல்லாவுயிர்களும் பருகும் எனவுங் கூறினாராகக்கூறினார். அத பகுதிப்பொருள் விகுதி இல்லை உடன்பாட்டில்வந்த எதிர்மறை. (௬௮)

[கட்டளைக்கலித்துறை.]

மறத்துமொழிகிளவி.

இல்வாழ்வைவிட்டுக்கதிவேட்டடைபவர்க்கேழைபங்கன்
நல்வாழ்வையேதருங்காசிப்பிரானறம்பூங்கடுக்கை
வல்வார்முலைக்கொம்பனையதந்தைதானைமழுவாலெறிந்து
கொல்வாரொருவருக்கல்லாதெவர்க்குங்கொளார்கரித்த.

இ - ள். வல்வார்முலை கொம்பு அன்னாய்—சூதாடு கருவியை யொத்த கச்சணிந்ததனத்தையுடைய பூங்கொம்பையொத்தவளே. இல்வாழ்வை விட்

கெதிவேட்டு அடைபவர்க்கு நல்வாழ்வை யதருமை ஏழைபங்கன் காசிபிரான்— மனைவாழ்க்கையைவிட்டு முத்தியைவிரும்பி யடைவோர்க்கு மோட்சவாழ்வைத்தரும் இறைவியையிடப்பாகத்திலுடையவரும் காசித்திருப்பதியிலெழுந்தருளியிருப்பவருமாகிய இறைவரது, நறும்பூங்கடுக்கை— நறுமணங்கமழுங் கொன்றைமலர்மாலை, தந்தைதாள் மழுவால்எறிந்துகொல்வார் ஒருவருக்குஅல்லாது எவர்க்குஉம் கொளற்குஅரிது—தமதுபிதாவின் பாதத்தைமழுவாயுதத்தாலெறிந்து தறிப்பவராகிய சண்டேஸ்வரநாயனுரொருவர்க் கன்றியாருக்கும் பெறுதல்கூடாது.

சேய்ஞலூரிற் றிருவவதாரஞ்செய்த விசாரசருமா என்பவர் ஊரப்பசுக்கள்சுரக்கும்பாலைக்கொண்டு மண்ணியாற்றிலுள்ள மணற்குன்றிற் சிவலிங்கதாபனஞ்செய்து அப்பாலால் திருமஞ்சன மாட்டி அருச்சிக்குங்காலையில், ஊரார்முறையிட்டால் அவர்பிதா எச்சதத்தனென்பவன் சினங்கொண்டு திருமஞ்சனமாட்டவைத் திருந்தபாற்குடங் களைக்காலா லிடறிக்கவிழ்க்கத் தந்தையென்றறிந்தும் அவர்காலினைத் தறிக்கச், சிவபிரான் கருணைகூர்ந்து சண்டேஸ்வரபதந்தந்து கொன்றைமாலையைச் சூட்டியருளினுரென்பது புராணவரலாறு. கொன்றைமாலைவாங்கி வரக்கூறிய தலைவிக்குப் பாங்கி மறுத்துக்கூறியதால் மறுத்துமொழிகிளவியாயிற்று. எறிந்துவெட்டு இறந்தகாலவினையெச்சம் வேள்பகுதி. (௯௧)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொள்ளையிடச்சிலர்க்குமுத்திச்சரக்கறையைத்திறந்துகொடுத்தனந்தகோடி
பிள்ளைகள்பெற்றுடையபெருமனைக்கிழத்திக்கோகுடும்பம்பேணுகென்று
உள்ளபடியிருநாழிகொடுத்ததிலெண்ணுன்கறமுமோம்புகென்ருர்
அள்ளல்வளவயற்காசியாண்டகையார்பெருந்தகைமையழகிதாமே.

இ - ள். அள்ளல் வளவயல் காசி ஆண்டகையார் சிலர்க்கு கொள்ளையிட முத்திசரக்கு அறையை திறந்துகொடுத்து — சேறமைந்த சீர்வளம்பொருந்த வயல்சூழ்ந்த காசியிலெழுந்தருளிய ஆண்டன்மையையுடைய விறைவர் சிலர்கவர்ந்துகொள்ள அவர்களுக்குமுத்தியாகிய சரக்கினைநிறைத்த அறையைத்திறந்து உரிமையாகக்கொடுத்து, அனந்தகோடி பிள்ளைகள்பெற்றுஉடையபெருமனைக்கிழத்திக்கு ஓகுடும்பம் பேணுகென்று — அளவில்லாதபிள்ளைகளைப் பெற்றுள்ளதமது பெரியமனைவியாரிடத்தே இந்தப்பெருங்குடும்பத்தைக் காப்பாற்றுகவென்று, இருநாழிகொடுத்து அதில்முப்பத்திரண்டு அறமும்உள்ளபடி ஓம்புகஎன்ருர்—இருநாழிநெல்கொடுத்து அந்நெல்லில்முப்பத்திரண்டு தருமங்களையு முள்ளவண்ணம் காப்பாற்றுகவென்றனர், பெருந்தகைமைஅழகிது—அவர்பெருந்தன்மை யழகாயிருந்தது.

சிலர்க்குமுத்திச்சரக்கைச்சூறையாடஅறையைத்தாம்திறந்துகொடுத்து, அனந்தகோடி பிள்ளைகளைக்காப்பாற்றத் தமதுமனைவியார்கையில் இருநாழி நெல்லைக்கொடுத்து அதில்முப்பத்திரண்டு தருமத்தையுஞ்செய்க வென்றருளியதால் அவர் ஆண்டன்மை வியப்பா யிருந்ததென்பார் அழகிதுஎன்ருர். இதுவும்பழிப்பதுபோலப் புகழ்ததிறங்கூறுதலால் இலேசவணி

[குறம், அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

அழகுதுயில்குங்குமக்கொங்கையணங்கேயெங்களருட்காசிக்
குழகாமகற்குமகட்கொடுத்தகுடியிற்பிறந்தகுறமகள்யான்
ஒழுகுதொடிகைக்குறியுமுகக்குறியுந்தருமொள்வளைக்குறியும்
புழுகுமுழுகுமுலைக்குறியுமுடையாரவர்பொற்புயந்தானே.

இ - ள். அழகுதுயில் குங்குமக் கொங்கைஅணங்கே—அழகுநிலைபெற்ற குங்குமக்குழம்பணிந்த தனத்தையுடைய பெண்ணே, எங்கள்அருள்காசிகுழகர் மகற்குமகள்கொடுத்தகுடியில்பிறந்த குறமகள்யான்—எங்களுடைய அருள்நிறைந்த காசியிலெழுந்தருளிய அழகராகிய இறைவர்புத்திரராகிய முருகக்கடவுளுக்குப் பெண்கொடுத்த குடியிற்பிறந்த குறமகளாம்நான், ஒழுகுதொடி கைக்குறிஉம் முகக்குறிஉம்—அழகொழுகும் வளையலையணிந்த உன்கையிலுள்ள குறியும் முகத்திலுள்ளகுறியும், ஒள்வளைக்குறிஉம் புழுகுமுழுகு முலைக்குறிஉம் உடையார் அவர்பொன்புயம்தரும்—(இறைவியினது) ஒள்ளியவளையற்குறியையும் புழுகில் முழுகிய தனக்குறியையுமுடைய அவ்விறைவரது பொன்னிறம்வாய்ந்த திருப்புயங்களை யிப்பொழுதே கூட்டுவிக்கும்.

இறைவர்மேல் மோகங்கொண்ட ஒருபெண்ணிற்குக் குறிபார்த்ததெனக்கொள்க. குறம் கலம்பகத்திலோருறுப்பு. துயில்என்றது நிறைந்தென பொருள்தருதல் "உண்டற்குரிய வல்லாப்பொருளை" என்னுஞ்சூத்திரத்தில் "கூறலும்" என்றமையால். உடையார் குறிப்புமுற்றுப்பெயரெச்சம்.

கட்டளைக்கலித்துறை.

தலைவன்சிறைப்புறமாகப் பாங்கிகூறல்.

புயல்வண்ணனைக்கண்மறைத்தொளித்தவக்கள்வன்புணர்ப்பையெண்ணாள்
கயல்வண்ணக்கண்ணிதன்கண்ணினுட்புக்கதுகண்டிருந்தும்
செயல்வண்ணங்கண்டிலள்வாளாப்புறத்தெங்குந்தேடுகின்றாள்
வயல்வண்ணப்பண்ணையவிமுத்ததாளைமனத்துள்வைத்தே.

இ - ள். புயல்வண்ணனைக் கண்மறைத்தொளித்த அக்கள்வன் புணர்ப்பை எண்ணாள்—மேகம்போலுங் கருநிறமுடைய திருமாலுக்குப் புலப்படாது ஒளிந்துநின்ற இறைவனது வஞ்சத்தையறியாது, கயல்வண்ணம் கண்ணிதன்கண்ணின் உள்புக்கது கண்டிருந்தும்—கயல்போன்ற கண்களையுடைய என்றலைவி தன்கண்களிற் புகுந்தொளித்ததைப் பார்த்திருந்தும், வயல்வண்ணம் பண்ணை அவிமுத்தத்தானை மனத்து உள்வைத்த—வயல்களில் இசைபாடுமருதநிலப்பெண்கள் விளையாட்டு நிறைந்த காசியிலெழுந்தருளிய அவ்விறைவனைத் தன்மனத்தில்வைத்துக்கொண்டே, செயல்வண்ணம் கண்டிலள் வாளா புறத்து எங்கும் தேடுகின்றாள்—அவனதுசெயலின்திறத்தையுணராது வாளாவவனைப்புறத்திலெங்குந் தேடுகின்றனள் (இதென்ன அறியாமை)

மாயையில் வல்லதிருமாலுக்கு மாயையூட்டுகின்றவனென்பார் புயல்வண்ணனைக் கண்மறைத்தொளித்தவக் கள்வனென்றார். கிருஷ்ணன்கண்ணனெனவந்தது பிராகிருதச்சிதைவு. "கருங்கண்ணனையறியாமை நின்றோன்" என்னு

ங்கோவைத்திருவாசகத்தில் நச்சினார்க்கினியருரையிற் காண்க. மணமக்களிர் விளையாட்டு. எண்ணுள்முற்றெச்சம். (௪௨)

[மறம், அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

வையமுழுதொருங்கீன்றவிடப்பாகராநந்தவனத்தில்வாழும்
வெய்யதறுகண்மறவர்குலக்கொடியைவேட்டரசன்விடுத்ததூதா
கையிலவன்றிருமுகமோகாட்டிருகண்டொட்டுமுட்டைகதையிற்றாக்கி
செய்யகொடிறுடைத்தகல்வாய்கிழித்தரிவோநாசியொடுசெவியுந்தானே.

இ - ள். வையமுழுது ஒருங்கீன்ற இடப்பாகர் ஆநந்தவனத்தில் வாழும் வெய்யதறுகண் மறவர்குலக்கொடியைவேட்டு அரசன்விடுத்ததூதா— உலகமுற்று மொருசேரப்பெற்ற இடப்பாகத்தையுடைய இறைவரதுகாசியென்னும் ஆநந்தவனத்தில்வாழாநின்ற கொடிய அஞ்சாமையையுடையமறவர்குலத்திற்றோன்றிய பூங்கொடிபோன்ற பெண்ணை மணம்புணர விரும்பி அரசனனுப்பியதூதனே, கையில்அவன்திருமுகமோகாட்டு— உன்கையிலவனது திருமுகத்தையோகாட்டு, இருகண்தொட்டு முட்டைகதையில் தாக்கிசெய்ய கொடிறுஉடைத்து அகல்வாய்கிழித்து நாசியொடு செவியும் அரிவோம் (அதிலுள்ள) இரண்டுகண்களையுந் தோண்டி எங்கள்முட்டையேந்திய தண்டத்தால் மோதியழகிய கபோலத்தையுடைத்து அகன்றவாயைக்கிழித்து மூக்கையுங்காதையுமரிவோம் (நீபோ என்றபடி.)

மறம்கலம்பகத்தி னொருறுப்பு. அரசர் தமது குலப்பெண்ணைவிரும்பிய ஒருஅரசன் திருமுகங்கொடுத்த தூதனுக்கு அதனைமங்கலவழக்கெனவுணராத மறவர்முகமாககச்சருதிக் கூறுதல். முட்டைவேடர்களுக்கிடும்பெயர். "மானவேன்முட்டைக்கு மாறாய தெவ்வர் போம்" எனவருஞ்செய்யுளாலறிக. ஒடுஎண்ணொடு. நாசியும்என்பதில எண்ணும்மைதொக்கல்.

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

பருவங்கண்டு பாங்கிவருந்தல்

தாக்குபடைவேள்கணைமழைக்குத்தரியாதிருகணமழையருவி
தேக்குமிவட்காநந்தவனத்திருந்தாருள்ளந்திருந்தார்கொல்
காக்கவரியவிளவாடைக்காற்றுக்குடைந்துகரந்துவச்சை
மாக்களெனவேமுடவலவன்வளைவாயடைக்குமழைநாளே.

இ - ள். காக்க அரிய இளவாடைக்காற்றுக்கு உடைந்து கரந்து— காத்தற்கரிய இளவாடைக்காற்றுக்குத தோற்றொளித்து, வச்சைமாக்கள் என்ன முடஅலவன்வளைவாய் அடைக்கும் மழைநாள— உலோபரைப்போல முடம்வாய்ந்த நண்டுகள் வளையின்வாயையடைக்குங் கார்காலத்தில், தாக்குபடை வேள்கணைமழைக்கு தரியாது — போர்செய்யும் பணைகள் சேனையையுடைய மன்மதன் பாணத்திற்காற்றாது, இருகணமழை அருவிதேக்கும் இவட்கு ஆநந்தவனத்து இருந்தார் உள்ளம் திருந்தார்கொல்— இரண்டுகண்ணிலும் நீர்வெள்ளத்தைத்தேக்கு மித்தலைவிக்குக் காசியிலுள்ள விறைவர்மனமிரங்காரோ (அறியேன் என்றபடி.)

மழைநாளில் அருவிதேக்குதல் என்பது தோன்ற இருகண் மழையருவி

தேக்கும் என்றார். கார்காலத்து வருவேனென்று பொருண்மேற் பிரிந்ததலை வன் வாராதொழியின் அவனை யெவ்வாறுற்றுவேனெனப்பாங்கிவருந்துதல் வாளை வடகாற்று. (௪௪)

(கட்டளைக்கலித்துறை.)

தழையினதருமைகூறல்.

மழைவளைக்கும்பொழிற்காசிப்பிரான்வெற்பில்வண்டறைபூந்
தழைவளைக்கைக்கொடுத்தேன்கண்ணிலொற்றித்தளரிடைதன்
இழைவளைக்குங்கொங்கையூடணைத்தாளித்தழையினுள்ளே
கழைவளைக்குஞ்சிலைவேளனையாயிதைக்கண்டுகொள்ளே.

இ - ள். மழைவளைக்கும்பொழில்காசிபிரான்வெற்புஇல்—மேகம்வளைக்குஞ் சோலைசூழ்ந்த காசியிலெழுந்தருளிய இறைவரது மலையில், வண்டுஅறைபூர் தழைவளைகைகொடுத்தேன்— நீகொடுத்த வண்டுகளொலிக்கும் பூந்தழையை யென்றலைவியின்கையிற் கொடுத்தேன், தளர் இடை தன்கண்ணில் ஒற்றி இழைவளைக்கும் கொங்கை ஊடுஅணைத்தாள்—தளருமிடையையுடைய அவள்தன் கண்களிலொற்றி யாபரணஞ்சூழ்ந்த கொங்கையிலணைத்தனள், இதழையினுள்ளே கழைவளைக்கும் சிலைவேள்அனையாய்—இந்தத்தழையுள்ளே கரந்துவில்லைவளைக்கும் மன்மதனையொத்ததலைவனே, இதைகண்டுகொள்— இதனுலிவள்கருத்துணராய்.

தழைகலம்பகத்திறேருறுப்பு ஒற்றி இறந்தகாலவினையெச்சம் ஒற்றுப குதி இதை ஐயுருபுமயக்கம். (௪௫)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

கண்ணிருக்குந்திருநுதலுங்கனலிருக்குந்திருக்கரமுங்கலந்தோர்பேதைப்
பெண்ணிருக்குமிடப்பாலும்பிறையிருக்குமௌலியுமாய்ப்பிரிக்கலாகா
எண்ணிருக்குங்கணத்தொடுமாநந்தவநத்திருப்பாரையெங்கேகாண்பார்
பண்ணிருக்குமறைகளுமெண்கண்ணனுங்கண்ணனுமமரர்பலருந்தானே.

இ - ள். கண் இருக்கும் திருநுதலும் கனல்இருக்கும் திருக்கரம்உம்— அனற்கண்ணிருக்குமழகிய நெற்றியுந்தீயிருக்குமழகிய கைகளும், ஓர்பேதைப்பெண் கலந்துஇருக்கும் இடப்பாலும் — ஒருபெண் கலந்திருக்கு மிடப்பாகமும், பிறைஇருக்கும் மௌலியும்ஆய்— இளஞ்சந்திரனிருக்குஞ் சடாமுடியுமுடைத்தாகி, பிரிக்கலாத எண்இருக்கும் கணத்து ஒடும் ஆநந்த வநத்திருப்பாரை— தம்மொடுவேறுபிரித்தறிதல்கூடாத வரையறையமைந்திருக்குமுருத்திரகணங்களோடு காசியிலெழுந்தருளியிருக்கு மிறைவனை, பண் இருக்கும் மறைகளும் எண்கண்ணனும் கண்ணனும் அமரர்பலரும் எங்கே காண்பர்— இசையமைந்திருக்கும் வேதங்களும் எட்டுக்கண்களையுடைய பிரமனுங் கண்ணனாகிய திருமாலும் தேவர்கள் பலரும் எவ்வாறு கண்டறிவார்.

பரதந்திரராயிருத்தலாலறியாரென்பார் எங்கே காண்பார் என்றார். அஃறிணையுமுயர்திணையும் விரவி மிகுதியினுல் காண்பார் என்னும் உயர்திணை முடிபோடு முடிதலால் திணைவழுவமைதி. (௪௬)

கட்டளைக்கலித்துறை]

பல்லாண்டுதம்மைப்படைத்தவத்தேவரைப்பாரப்பைம்பொன்
வில்லாண்டதோள்கொட்டியேமாப்பர்கோலவிடம்பழுத்த
அல்லாண்டகண்டத்தெம்மாதிப்பிரானவிமுத்தத்திலே
சில்லாண்டிருந்துசிவமாய்ச்செலுஞ்சிறுசெந்துக்களே.

இ - ள். கோலம்விடம்பழுத்த அல் ஆண்டகண்டத்து எம்ஆதிபிரான் அவிமுத்தத்தில் சில் ஆண்டு இருந்து— கருநிறம்வாய்ந்த விடங்கனிந்த இருள்நிறைந்த சீகண்டத்தையுடைய எமது ஆதியாகிய இறைவரதுகாசித்திருப்பதியில் சிலநாளிருந்து, சிவம் ஆய் செல்லும் சிறுசெந்துக்கள்— பின்புசாரூப்பியம் பெற்றுச் சிவகணமாய்ச்செல்லுஞ் சிற்றுயிர்கள், பல் ஆண்டு தம்மைபடைத்த அதேவரை — பலநாளுந்தம்மைப் படைத்துவந்த அப்பிரமர்களை நோக்கி, பாரம் பைம்பொன்வில் ஆண்டதோள்கொட்டிஏமாப்பர்— பாரமாயுள்ளபசிய மேருவில்லைச்சுமந்த தமது தோள்களைக்கொட்டி (உங்களிலும்நாங்கள் சிறந்தோராமென்று) மிக்ககளிப்படைவார்.

ஏமம்யாத்தல் என இருசொல் ஒருசொல்லாய்நின்றன. ஏமம் இன்பம். எந்தையரென்னும் பாடம் பால்வழுவாதலாலமையாதென்க. செந்துக்கள் சொல்லாலஃறிணையாயினும் பொருளால் உயர்திணையாகக்கொள்க. (௪௭)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்:]

தலைவிகூறல்.

செந்தேனொழுகும்பொழிற்காசிச்சிறுநுண்ணுசுப்பிற்பெருந்தடங்க
பைந்தேனொழுகுமிடப்பாகர்படைவீடென்பதுணராய்கொல்
வந்தேன்வளைத்தாயெனைப்பாவிமதனைவீணேவளைந்தபோர்
உய்ந்தேகுவதிங்கரிதனற்கண்ணுடையார்மழுவாட்படையாரே

இ - ள். செந்தேன் ஒழுகும் பொழில்காசிசிறுநுண்ணுசுப்பின் பெருந்தடங்கண் பைந்தேன் ஒழுகும் இடப்பாகர்— செவந்த தேன்சிந்துஞ்சோலைசூழ்ந்த காசியிற்சிறியநுண்ணியஇடையினையும் பெரியபரந்தகண்களையுமுடைய பசிய தேனொழுகு மிடப்பாகத்தையுடைய இறைவரது, படைவீடு என்பது உணராய்கொல் — படைவீடென்பதை நீயறியாயோ, பாவி மதனா வந்தேன் என்னை வளைத்தாய் — பாவியாகிய மன்மதனே நானிங்குவந்தேனென்னைப் போர்க்குவளைத்தாய், போர்வீணே வளைந்த — போர்த்தொழில் வீணேயுண்டாயின, மழுவாள்படையார் அனல்கண் உடையார்— மழுவேந்திய அவ்விறைவர் நெற்றிக்கண்ணினையுடையார், இங்கு உய்ந்து ஏகுவது அரிது — (நானவரையடைந்தமையால் இங்குநின்று முயிர்பிழைத்து நீபோவது அரிது (அறியாயென்றபடி.)

பைந்தேன் என்றது உவமையாகுபெயராயிறைவிமேல்நின்றது. இறைவியமர்தலை, தேனுக்குஒழுகுதற்றொழிலாதலால் பைந்தேனொழுகுமிடப்பாகர் எனஒப்புடைப்பொருளின் றொழில் தந்துகூறினார். இது குணவணி. (௪௮)

[மதங்கி, அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.]

படலைநறுங்கடுக்கைமுடிப்பரஞ்சுடராரிசைபாடிப்பகர்தேன்பில்கி
மடலவிழ்பூம்பொழிற்காசிமணிமறுகில்விளையாடுமதங்கியாரே

உடலுமெமக்குயிருமொன்றேயோடரிக்கண்வாளிரண்டுமொழியவென்னை
தொடலைவளைத்தடக்கையின்வாளிரண்டெடுத்துவீசிட நீர்தொடங்குமாறே.

இ - ள். நறுங்கடுக்கைபடலைமுடிபரஞ்சுடரார்இசைபாடி — நறுமண
ங்கமழுங்கொன்றைமலர்மாலையையணிந்த இறைவரது புகழைப்பாடி, பசுந்
தேன் பில்கி மடல் அவிழ்பூம் பொழில்காசி மணிமறுகில்விளையாடு மதங்கியா
ரே— பசியதேனைச்சிந்தி யிதழவிழ்ந்தமலர்களையுடைய சோலைசூழ்ந்த காசித்
த்திருப்பதியினழகிய வீதியில் விளையாடுமதங்கியாரே, எமக்குஉடலும் ஒன்
றே உயிரும்ஒன்றே ஓடு அரிகண்வாள் இரண்டும் ஒழிய—எமக்குத்தேகமு
மொன்றே யுயிருமொன்றே இவற்றிற்குச் செவ்வரிபரந்த கண்வாளிரண்டுமே
போதும் அவையொழிய, தொடலைவளைதடகையின் வாள்இரண்டு எடுத்துநீர்
வீசிட தொடங்கும் ஆறு என் — மாலைபோல வளையல்தொடுத்த பருத்தஇர
ண்டு கைகளிலு மிரண்டுவாளை யெடுத்து நீர்வீசத்தொடங்கிய வகையென்ன
(பயனில்காரியம் என்றபடி.)

தொடலைமாலை "தொடலைக்குறுந்தொடி" என்பதனாலுணர்க. எனதுஉட
லுக்கு முயிருக்கும் கண்களாகிய வாளிரண்டுமேயமையும், அதற்குமேல்கை
களிலிரண்டு வாளையெடுத்து வீசுவதுஎன்னபயன். மதங்கி ஆடும்பெண். இது
கலம்பகத்திலொருறுப்பு. (௪௯)

[கலித்தாழிசை.]

தொடங்காமேபனிமலருந்தூவாமேநல்கும்
கடங்கால் களிற்றுரியார்காசிவளம்பாடி
விடங்கான்றகன்றுகுழைமேற்போய்க்குடங்கைக்
கடங்காதவுண்கணீராடுகபொன்னூசல்
அம்பொன்மலர்க்கொம்பன்னீராடுகபொன்னூசல்.

இ - ள். தொடங்காமேபனிமலரும் தூவாமேநல்கும்—சிவபணிதொட
ங்காமலுங்குளிர்ந்தமலர் கொண்டருச்சியாமலும் (உயிர்களிருக்க அவைகளுக்
கு) அருளும், கடம்கால்களிறு உரியார்காசிவளம்பாடி—மதத்தைச்சிந்தும்யா
னையின்தோல்போர்த்த இறைவரது காசிப்பதியின் வளமையைப்பாடி, விட
ம்கான்று அகன்று குழைமேல் போய்குடங்கைக்கு அடங்காத உண் கண்
ணீர் பொன்ஊசல் ஆடுக — விஷத்தைக்கக்கிப்பரந்து குண்டலத்தின் மேற்
போய் உள்ளங்கைக்கு அடங்காத மையுண்டகண்களையுடையீர் பொன்னாற்
செய்த வூசலாடக்கடவீர், அம்பொன்மலர்க்கொம்பு அன்னீர் பொன்ஊசல்
ஆடுக—அழகிய கற்பகப்பூங்கொம்பையொத்தபெண்காள் பொன்னூசலாடக்
கடவீர்.

குடங்கைகண்களுக்கு உவமைப்பொருளாதலால் குடங்கைக்கடங்காத
என்றார். ஊசல் கலம்பகத்தி லொருறுப்பு. தொடங்காமே, தூவாமே எதிர்ம
றைத்தெரிநிலை வினையெச்சங்கள். மே விகுதி. (௫௦)

[நேரிசைவெண்பா.]

தலைவன்சிறைப்புறமாகவரைவுவேண்டிப் பாங்கிகூறல்.

பொன்னந்தாதென்னமலர்பூந்துறையிற்புண்டரிகத்

தன்னந்தாதாடுமெவ்முத்தா—இன்னமிர்,
முன்னங்கடுக்கைமுகந்துண்டாராநல்காரே
இன்னங்கடுக்கையிவட்கு.

இ-ள். பூந்துறை இல் பொன்னம் தாதுஎன்ன மலர்புண்டரிகத்து—பொலிவமைந்த கங்கைத்துறையில் பொன்னைப்போல மலர்ந்ததாமரையில், அன்னம் தாது ஆடும் அவிமுத்தா—அன்னங்கள் மகரந்தத்தில் மூழ்கியாடுங் காசித்திருப்பதியையுடையார், இன் அமிர்து ஆக— இனிய அமிர்தாக, முன்னம் கடுக்கைமுகந்து உண்டார — முன்பு அழகிய விஷத்தைத் திருக்கையிலள்ளி முகந்துண்டனர், இன்னம் கடுக்கை இவட்கு நல்காரே—இன்னமும் அவர் கொன்றைமலர்மாலையை யருளாரோ.

தேவர்கள் முறையீட்டிற்கிரங்கி யருள்சுரந்தவர் நமது முறையீட்டிற்கிரங்கிலர் என்பார் விறைப்பொருள் படநல்காரே என்றார். இன்னம் இனியென்னு மிடைச்சொற்றிபுபு (௫௪)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

காமமிக்ககழிபடர்கிளவி.

குன்றிரண்டுசுமந்தொசியுங்கொடியன்னீரவிமுத்தங்குடிகொண்டாகம்
ஒன்றிரண்டுவடிவானார்திரள்புயத்துமார்பகத்துமுமிழ்தேன்பில்கி
மின்றிரண்டதெனப்புரளும்பொலங்கடுக்கைத்தாமத்தின்விரைத்தாதாடிப்
பொன்றிரண்டதெனவிருக்கும்பொறிவண்டுசெய்தவமென்புகலுவீரே.

இ-ள். இரண்டுகுன்று சுமந்து ஒசியும் கொடி அன்னீர — இரண்டுமலைகளைச்சுமந்து துவளும் பூங்கொடியையொத்த தோழிப்பெண்காள், அவிமுத்தம் குடிகொண்டு ஆகம் ஒன்று இரண்டுவடிவானார் — அவிமுத்தமே பூங்கோயிலாகக்குடிகொண்டுதிருமேனியொன்றில் ஆண்பெண்திருவுருவுள்ளவராது, திரள்புயத்து உம் மார்பு அகத்து உம் உமிழ் தேன்பில்கிமின் திரண்டது என்னபுரளும் பொலங்கடுக்கை தாமத்தின் விரை தாது ஆடி— திரண்டபுயத்திலுமார்பிலும் உமிழுந்தேனைச்சிந்தி மின்னல் திரண்டதைப்போலப் புரளாநின்ற பொன்னிறம்வாய்ந்த கொன்றைமாலையின் மணங்கமழு மகரந்தத்திற்றோய்ந்து, பொன்திரண்டது என்னஇருக்கு ம்பொறிவண்டுசெய்தவம் என்புகலுவீர் — பொன்றிரண்டு ஒருருவுகொண்டதைப்போலவிருக்கும்புள்ளிகளையுடைய வண்டுகள் செய்தவம் யாதோகூறுவீர்.

பில்கி இறந்தகாலவினையெச்சம் பில்கு பகுதி, குன்றிரண்டு சுமந்தொசியுங்கொடியன்னீர் இல்பொருளுவமையணி. நான் தவஞ்செய்து மார்பிலுந் தோளிலும் வண்டைப்போல எப்போது திளைக்கப்பெறுவெனென்பது குறிப்பாக அறியநிற்றலால் நுட்பவணி. இதனை வடனூலார் சூக்ஷமாலங்காரம் என்பார். இது காமமிகுதியால் மிக்கதுன்பங்கூர்ந்து தலைவிகூறுதல். (௫௫)

(கொச்சகக்லிப்பா.)

இதுவுமது.

புதுமைமதிக்கொழுந்தும்புன்மாலைப்போதும்

நகுமேகிளையுநகைத்தாணமக்கென்னும்
உகுமேலுயிர்காசியுத்தமரைக்காணத்
தகுமேயப்போதிதழித்தாரும்பெறலாமே.

இ - ள். மதிக்கொழுந்துஉம் புகும் — இனியிளஞ்சந்திரனு முதயமா வான், புன்மாலைபோதுஉம் நகும் — சிறிது பொழுது நிகழுமாலைக்காலமும் நம்மைநோக்கி நகாநிற்கும், கிளையும் நகைத்தால் நமக்கு என் ஆம் — நமதுறவினராகிய தோழியர்களும் (நமதுகுறைதேடாது நம்மைநோக்கி) நகைத்தால் (நெஞ்சமே அதனால் வருமிழிவு) யாது உயிர்உகுமேல்காசி உத்தமரை காண தகும் — (மன்மதனால்) உயிர்போமாயினால் காசியிலெழுந்தருளியதேவர்களுக்குள்ளுத்தமராயுள்ளவரை நாம் காணக்கூடும், அபோது இதழிதார் உம்பெறலாம் — அக்காலையிலிப்போது நாம்விரும்பிய கொன்றைமாலையையும் பெறலாம்.

தம்மனத்தைக்கேட்போராக முன்னிலையாக்கிக்கூறல். அகப்பாட்டுறுபன்னிரண்டுளொன்று ஏகார மூன்றுந்தேற்றப்பொருளன. (ருரு)

(இதுவமது)

ஆமோவவிமுத்தத்தையரோபெண்பழிவீண்
போமோவயிரவாதஞ்சாதனமும்பொய்யாமோ
தேமோது கொன்றைச்செழுந்தாமநல்காநீர்
தாமோதருவீருமதுபரந்தாமமே

இ - ள். அவிமுத்தத்து ஐயரோ பெண்பழிஆம்ஓ—அவிமுத்தத்திற் பூங்கோயில்கொண்டருளிய இறைவரே யுமக்குப் பெண்பழியாகுமா, வீண்போம்ஓ— அதுவீண்போகுமா, வயிரவாதம் சாதனம்உம் பொய்ஆம்ஓ — வயிரவர்காவலும் பொய்யாகுமா, தேமோது கொன்றைசெழுந்தாமர் நல்காதநீர்தாம்ஓ—தேன்அலையெறிந்து மோதாநின்ற செழித்தகொன்றைமாலையை யுயிருள்ளபோதே தாராதநீரோ, உமதுபரந்தாமம் தருவீர் — உமதுசாரூப்பியத்தை யிறந்தபின்கொடுக்கப்போகின்றீர்.

ஓகாரங்கள் நான்கும் எதிர்மறைப்பொருளன. இதுவுங்காமமிக்க கழிபடர்கிளவி. (ருசு)

[கலிநிலைத்துறை]

இதுவுமது.

பரந்தாமத்தைபபல்லுயிர்கட்குப்பாலிப்பார்
வரந்தாமத்தைத்தருவதைநீர்பின்வழங்காரோ
புரந்தாமத்திற்பொலிதருகாசிப்புரமானார்
திரந்தாமத்தையெனப்புகலீரோந்திழையீரோ.

இ - ள். ஏந்திழையீர்நீர் — தோழிகாள்நீங்கள், பரந்தாமத்தை பல்உயிர்கட்கு பாலிப்பார—சாரூப்பியத்தைப் பலவுயிர்களுக்கும் பாலித்தருளுவோரும், தாம்புரம் அத்தின்பொலி தருகாசிப்புரம்ஆனார்—தாம்திருமேனி செந்நிறத்தால் விளங்குங்காசிநகரத்திலுள்ள வருமாகியஇறைவர், வரம்தாமத்தை தருவதுபின் வழங்கார்ஓ— வரமாகக்கொன்றை மாலையைத்தருவது, இப்போ

இல்லையாயினும் உயிர்விட்டபோதாவது தாமாட்டாரா, அத்தைதிரம் தாம் என்னபுகலீர்—என்தலைவியிப்போது சுகந்தாமென்றுகூறீர்.

திரமதாம்என்ற குறிப்பால் பின்வழுங்காரோ என்றது உயிர்விட்டபோதுஎன்னும பொருள்மேல்நின்றது தருவனைஜசாரியை, அத்தை தலைவி, ஆண்பாலில அத்தன்எனநிற்றலால் (௫௬)

[பாண். நேரிசையாசிரியப்பா.]

இழுமென்மழலையின்னமுதுறைப்பப—பிழிதேனொழுக்கொழுகுமின்னரம்பின், வள்ளுகிர்வடிம்பின்வரன்முறைவருடத்—தெள்விளியெடுக்குஞ்சிறியயாழ்ப்பாண, வாழியக்கண்மதிமாற்றமொன்றியானும்—எழிசைப்பாணன்மற்றிறைமகனலனே, பலருடன்பழிச்சுவதொழிகமாற்றம—சிலபகலயானுநின்னிலைமையனாகி, நலம்பாடறியாவிலம்பாட்டேட்ட—நீர்வாய்ச்சிதலையுநூல்வாய்ச்சிலம்பியும், சிலவிடமேய்ந்தசிறுபுன்குரம்பையி னூடசமுழுமுலங்கும்வாய்ப்படைகருடவனும், பசையில்யாமை நடுநகைத்துணை—வறும்பசிநுணங்கியும்பெருமபிணிபகுடைந்தும், சாமபல்கண்டறியாவாமடல்பூத்த—எலிதுயிலடுப்பிறலைமடுத்தொதுங்கச், சிறுபுறந்தாமொபெருமனைக்குறிகுடங்கையிற்றுங்கியகொடிறுறிஞ்சுகுடக்கை, நடக்காவுண்கட்டலைத்தொழுக—அழுகுரல்கேட்டவிழுமநோயகற்குக, நகைக்கணகாப்பதவமருமெலையின்—கடவுணல்லூழ்பிடாபிடித்துந்த, குணமனறக்கைகளைவழிச்சென்றுங்குத்—தேம்பழுத்தகதிர்சபூம்பொழிற்படப்பைபில, கட்டுடைப்பசுங்கொடிபடர்ந்தேறி—வான்றொடுகமுகின்மடற்றலைவிரிந்து, பான்றனறினைத்தொங்குநிழற்கதலித்—தேங்கனிபழுத்தபூங்குலையொப்ப, அம்மலர்ப்பொய்கயிற்செம்முகமந்தி—முடவுப்பலவின்முட்புறக்கனிசெயப, புன்றலைசுமந்துசென்றிங்காட்சி—குடமிசைக்கொண்டொருகூன்மிடைபெறவன், நெடுநிலைக்கம்பத்தின்வடமிசைநடந்தோன்—இறும்பூதுபயக்குநம்பணைமருதக, கன்னிமதிலுடுத்தகாசிமாநகரம்—பெருவளஞ்சுரக்கவரசுவீற்றிருக்கும், மழுவலனுயர்த்தவழனிறக்கடவுள்— பொன்னடிவணங்கி யின்னிசைபாடலும், அந்நிலைக்கண்ணேயகல்விசும்பொரீஇச்—சுரபியுந்தருவும்பெருவளஞ்சுரப்ப, இருமையும்பெறறனன்யாமெனநீயுமத்—திருநகாவளமைபாடியருகிலை, நிருநிதிக்கிழவனேககறுப்பத்—திருவொடும்பொலிகபெருமகிழ்சிறந்தே.

இ - ள். இழுமென்மழலை இன்அமுது உறைப்பப பிழிதேன் ஒழுக்கு இனை ஒழுகும்இன் நரம்பின்—இனியமழலைச்சொல்லையுமினியவமுதத்தையுமொப்பச்சிந்துந்தேனொழுக்கைப்போலவமைந்தஇனியநரம்புகளில,வள்உகிர் வடிம்புஇன் வரன்முறைவருட தெள்விளிஎடுக்கும் சிறியயாழ்ப்பாண—கூரியநகத்தினுனியால் கிரமப்படி தடவததெள்ளிய இசையெழுஞ்சிறிய யாழையேந்திய பாணனே, வாழிய—நீவாழக்கடவாய், மாற்றம் ஒன்றுகேள்—நான்கூறும்வார்த்தை யொன்றைக்கேள், யானும்எழிசைபாணன்ஏ — உன்னைப்போலநானும் ஏழிசைபாடும்பாணனே, இறைமகன்அல்லன் (அரசகோலங்கொண்டிருத்தலால்) அரசனல்லன், பலர்பழிச்சுவதுஉடன் ஒழிக—பலரையுந்துதித்தலை விரைந்தொழிக, சிலபகல்யானும் நின்நிலைமையன்ஆகி—சிலநா

ள்நாலுமுன்னிலைமையை யுடையவனாகி, நலம்பாடு அறியாதஇலம்பாடு அலைப்ப—நன்மையுண்டாதலைச் சிறிதுமறியாத வறுமையொருபால்வருத்தவும் நீர்வாய்சிதலையும் நூல்வாய்சிலம்பிஉம்—நீர்வாய்ந்தவாயையுடைய செல்லும் நூல்நூற்கும்வாயையுடைய சிலம்பியும், சிலஇடம்மேய்ந்தசிறுபுன்குரம்பையில்—சிலவிடங்களில் மேய்ந்த சிறியகுடிசையில், மசகம்உம் மூலங்குஉம் வாய்படைகுடவன்உம்—கொசுகுமூலங்கும் வாயேயாயுத மாகவுடையமூட்டுப்பூச்சியும், பசைஇல்யாக்கை தசைகறித்துஉண்ண — பசையில்லாத சரீரத்திலுள்ள சதையைக்கடித்து ஒருடாலுண்ணவும், அரும்பசிக்கு உணங்கிஉம் பெரும்பிணிக்குஉடைந்தும்—அடைதற்கரிய பசிக்குவருந்தியும்பெரிய நோய்க்கு மெலிந்தும், சாம்பல்கண்டு அறியாதஆம்பிபூத்த எலிதுயில் அடுப்புஇல்— சாம்பலுங்காணாத காளான்பூத்த எலிகண்படுக்கும் அடுப்பினில், தலைமடுத்து ஒதுங்கி சிறுசிறார்அலற—சேர்ந்தொதுங்கிச் சிறியபிள்ளைகள் பசியாற்கதறவும், பெருமனைகிழத்தி குடங்கையில்தாங்கிய கதுப்பினள் (அவர்களையாற்றவகையறியாமல்) எனது மனையாள்க போலத்திலுள்ளங் கைவைத்து, குடங்கைக்கு அடங்காதஉண்கண் ஆறாஅலைத்துஒழுக—உள்ளங்கைக்கு அடங்காதபாரந்தமையுண்ட கண்களினின்று நீர்ப்பெருக்கெடுத்துவழிய, அழுகைகேட்ட விழுமம்நோய்மிக்கு (அப்பிள்ளைகளைநோக்கி) அழுதலைக்கேட்டலால்யான்துன்பநோய் மீக்கூர்ந்து, களைகண்காணாது அலமரும்எல்லையில் — ஒருபற்றுக்கோடுங் காணாமல்வருந்திச் சுழலுங்காலையில், கடவுள்நல்ஊழ்பிடர்பிடித்துஉந்த குரைபுனல்கங்கை கரைவழிசென்று — இறைவரருளாலாகூழ்பிடரியைப் பிடித்துத்தள்ள ஒலிக்கும்நீர்மயமாகிய கங்கையின்கரைவழியாய்ப்போய், ஆங்குதேம்பழுத்து அழிந்தபூம்பொழில்படப்பைஇல்—அவ்விடத்திற் பழங்களின்றேன்கனிந்தழிந்த மலர்களையுடைய சோலைகள்சூழ்ந்த கொல்லையில், கடவுள்கற்பகக்கொடிபடர்ந்து வான்தொடுக முகில்ஏறி—தெய்வத்தன்மையையுடைய கற்பகத்திறபடர்ந்த காமர்வல்லிக்கொடிபடர்ந்து ஆகாயத்திலளாவியகமுகமரத்தின்மேற்றாவி, திசைதொறும்மடல்தலைவிரித்துநான்றன நறுநிழல் கதலிதேம்கனி பழுத்தபூங்குலைவளைப்ப — திசைகள்தோறு மடற்றலையைவிரித்துத்தொங்கியசைய நறுமணங்கமழு நிழல்வாய்ந்ததேன்வாய்ந்த கனிகள்பழுத்த பொலிவமைந்த குலைகளைவளைக்க, அமலர்கொடியில் செம்முகமந்தி—அந்தக்கற்பகக்கொடிமேல் செவந்தமுகத்தையுடைய பெண்குரங்கு, முடவுபலவின் முள்புறம்கனிஐ புன்தலைசுமந்து சென்றிடும்காட்சி—முடவிணையுடைய பலாமரத்தின்முள்ளைப்புறத்திலுள்ள பலாக்கனியைச்சிறிய தலையிற்சுமந்து செல்லுங்காட்சி, குடம்மிசைகொண்டு நெடுநிலைகம்பத்தின் வடமிசை நடந்தோன் ஒருகூன்மிடைகிழவன் இறும்பூதுபயக்கும் நறும்பணைமருதம் கன்னிமதில்உடுத்த காசிமாநகரம்— குடத்தைத் தலைமேற்கொண்டு உயர்ந்தநிலையையுடைய கம்பத்திற்பூட்டிய கயிற்றின்மேலேறிச்சென்றஒரு கூன்வாய்ந்த கிழவனைப்போல அதிசயத்தைத்தரு நறுமணங்கமழும் வயலும் அழியாதமதிலுஞ் சூழ்ந்த காசியென்னும் பெரியநகரத்தில், பெருவளம்சுரக்க அரசவீற்றிருக்கும் மழவலன் உயர்த்த அழல்நிறம் கடவு

ள—பெரியவளத்தைத்தர அரசுசெய்து வீற்றிருக்கு மழுவாயுதத்தை வலத்திருக்கரத்திலுயர்த்திய தீயையொத்த செந்நிறம்வாய்ந்த இறைவரது, பொன் அடிவணங்கிஇன் இசைபாடலும்—பொன்போலுமரிய திருவடியை வணங்கிபினிய இசையைப்பாட, அந்நிலைக்கண்ணே அகல் விசும்பு ஒருவிசுரபிஉம்தரு உம் பெருவளம்சுரப்ப—அப்பொழுதே பரந்த விண்ணுலகினின்று நீங்கிக் காமதேனுவும் கற்பகவிருட்சமும் வந்து பெருஞ்செல்வத்தைத்தர, யானே இருமைஉம் பெற்றனன்—நானே இகபரபோகங்களையுமடைந்தேன், நீ உம் அதிருநகர் வளமைபாடி—நீயும் சென்றந்தச் செல்வமவாய்ந்த காசிநகரத்தின் வளமையைப்பாடி, இரு நிதிக்கிழவன் இருநிலத்து ஏச்கறுப்ப—சங்கநிதிபதுமநிதியென்னுமிரண்டு நிதிக்குமுரியவனாகிய குபேரன் பெரியநிலவுலகில் வந்து தாழ்ந்து நின்றேவல்கேட்க, பெருமகிழ்சிறந்து திரு ஒடுஉம் பொலிக—பெரியமகிழ்ச்சி மீக்கூர்ந்து செல்வத்தோடும் பொலியக்கடவாய்.

சிதலையும் சிலம்பியும் சிலவிடம்மேய்ந்த புன்குரம்பை—செல்சிலவிடத்திலரித்த சிறியகுடிசையெனவும், சிலம்பிநூலால்வேய்ந்த சிறுகுடிசையெனவும் பொருள்படமேய்ந்த என்றார். இலம்பாடு இன்மையுண்டாதல் என்னும் பொருட்டாதலால்வறுமைமேல்நின்றது. நான்றன என்னும்வினைமுற்றுப்பெயரெச்சத்தில் வந்தது. மற்று அமம அசைநிலையிடைச்சொற்கள். உடையதன்றொழிலையுடைமைமேலேற்றிச் சாம்பல்கண்டறியாவடுப்பு என்றார். புன்றலை உரிச்சொற்றொடராதலால் வருமொழிமுதல் தகரந்திரிந்தவிடத்து அதற்கினமாய் லகரம் னகரமெய்யாகத்திரிந்தது "இடையுரிவடசொலின்" என்றசூத்திரத்தால். நடந்தோன்வினைமுற்றுப்பெயரெச்சமாய் நின்றது. பாணகலம்பகத்திலொருறுப்பு. கன்னி பெண்கள் கன்னித்தன்மையை மதிலின்மேலேற்றிக் கன்னிமதிலென்றது குணவணி. வறுமைகோட்பட்டு மெலிந்துநல்லூழால்காசி நகரத்தையடைந்துஇறைவனைப்பாடி யிந்திரசெல்வம்பெற்றஒருபாணன்மற்றொருபாணனைப்பார்த்து நீயுமந்நகரிற சென்றிறைவரைப்பாடுவையாயிற்பெருஞ்செல்வம் பெறுவாயென்றுகூறினனென்பதுஇதனதுகருத்து.

வண்டுவிடுதூது, அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிறைவிரிக்கும்மதுகரங்காடேம்பிழிபூம்பொழிற்காசித்திருநாடாளும்
மறைவிரிக்குஞ்சிலம்படியார்திரள்புயத்துப்புரளுநறுமலர்ப்பூங்கொன்றை
நறைவிரிக்குமிதழ்க்கரத்தாலூட்டுமதுவிருந்துண்டுநயந்துமற்றென்
குறைவிரித்தோரிருவரிசைகூட்டுண்ணுந்திருச்செவிக்கேகூறுவீரே.

இ - ள். சிறைவிரிக்கும்மதுகரங்காள் — சிறகினை விரித்துப் பறக்கும் வண்டுகளே, தேம்பிழிபூம்பொழில் காசி திருநாடு ஆளும் மறைவிரிக்கும் சிலம்புஅடியார் திரள்புயத்து — தேனைச்சிந்துமலர்களையுடைய சோலைசூழ்ந்த காசிநாடாளும் வேதச்சிலம்பினையணிந்த திருவடியையுடைய விறையவரது திரண்டபுயங்களில், புரளும் நறுமலர் பூங்கொன்றை நறைவிரிக்கும் இதழ்கரத்து ஆல் ஊட்டுமதுவிருந்து உண்டுநயந்து — புரளாநின்ற நறுமணங்கமழும்பொலிவமைந்த கொன்றையினது தேனைச்சிந்து மிதழாகிய கையினாலூட்டாநின்ற தேனாகிய விருந்தினை நுகர்ந்து விரும்பி, மற்று என்குறைவிரி

த்து ஒர்இருவர் இசைகூட்டுன்னும் திருச்செவிக்கு கூறுவீர்—அதுவொழி ந்தெனது குறைகளை விரித்து ஒப்பில்லாத தும்புருநாரதர்பாடும் சாமகானத் தைக்கொள்ளைகொள்ளும் திருச்செவியிற் கூறுவீர்

மதுவிருந்துண்டமயக்கால் மறந்தலை யொழிந்த என்னும் பொருள்மேல் நிற்றலால் மற்று வினைமாற்றுப்பொருளில்வந்தது. கு உருபுமயக்கம், (௫௮)

[கட்டளைக்கலித்துறை]

கூற்றடிக்கஞ்சிக்குலையுநெஞ்சேயஞ்சல்கோச்செழியன்
மாற்றடிக்கஞ்சுமிடப்பாகனைமள்ளர்சொன்றகருஞ்
சேற்றடிக்கஞ்சமலர்வயற்காசிச்சிவக்கொழுந்தைப்
போற்றடிக்கஞ்சலிசெய்பற்றுவேறுபுகலில்லையே.

இ - ள். கூற்று அடிக்கு அஞ்சிகுலையும் நெஞ்சே அஞ்சல்—இயமனடித்தற்குப்பயந்து வருந்துமனமே யஞ்சுதலொழிக, கோசெழியன் மாற்று அடிக்கு அஞ்சும் இடப்பாகனை—பாண்டியன் பிரம்போச்சுதலுக்கு அஞ்சிய இடப்பாகத்தையுடைய இறைவனை, மள்ளர் கொன்றகருஞ்சேறு அடி— பள்ளர்களுழுத கரிய சேற்றின்கீழ், கஞ்சம் மலர்வயல் காசிசிவக் கொழுந்தை போற்று—தாமரைமலரும் வயல்சூழ்ந்த காசியிலெழுந்தருளியசிவலிங்கப்பெருமானைத்துதி, அடிக்கு அஞ்சலிசெய்— திருவடிக்கீழ்க்கைகூப்பு, பற்றுவேறுபுகல்இல்லை—உங்களுக்குப்பற்றுக்கோடாக வேறுபுகலிடமில்லை.

அஞ்சல் எதிர்மறைவியங்கோள் வினைமுற்று அஞ்சுபகுதி,உசரக்கேடு சந்தி, அல்எதிர்மறைப்பொருளில் வந்தவியங்கோள் விகுதி. முன்னிலையொருமையெதிர்மறையேவற்பொருளில் வரில்அஞ்சாதேயெனப்பொருள்கொள்க. இறைவி யோர்பால் ஆதலால்கோச்செழியன் மாற்றடிக்கஞ்சும்என்றார்.

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

தலைவன் சிறைப்புறமாகத்தலைவிகூறல்.

இலைமுகமுகுழைத்தபைம்பூணேந்திளமுலையோடாடும்
மலைமுகமுகுழைத்தகாசிவரதர்கண்டிலர்கொன்மாரன்
சிலைமுகக்கணைக்கெம்மாவிசெகுத்துணவிருந்ததிங்கட்
கலைமுகம்போழ்ந்தகாயங்களங்கமாய்விளங்குமாறே.

இ - ள். இலை முகம்குழைத்தபைம்பூண் ஏந்துஇளமுலையோடு ஆடும மலைமுகம் குழைந்தகாசிவரதர் — தகட்டுவடிவமாகக் குழையச்செய்த பசிய ஆபரணத்தையணிந்த இளமைதங்கிய தனத்தையுடைய உமாதேவியாரோடு நடனஞ்செய்தருளுமேருவை வில்லாகவளைத்த காசித்திருப்பதியி லெழுந்தருளிய இறைவர், மாரன்சிலைமுகம் கணைக்கு எம் ஆவி — மன்மதன் வில்லிலேறிட்ட அம்புக்கு எமதுயிரிலக்காக, செகுத்துண்ண இருந்ததிங்கள் கலைமுகம் போழ்ந்த காயங்கள் அங்கம்ஆய் விளங்கும் ஆறுகண்டிலர்கொல்—கொன்றுண்ணஇருந்தசந்திரன் கலைமுகத்தாற் பிளந்த காயங்கள் எமது தேகமுற்றுமாகி விளங்கும் வகையைக்காணாரோ (கண்டிலர்போலும்)

இலக்காகசொல்லெச்சம். எம்மாவி ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த

ஆறும் வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். செருத்த இறந்தகாலவினையெ ச்சம், போழ்ந்த இறந்தகாலப்பெயரெச்சம் செரு, போழ்பகுதிகள். (௯௰)

[கட்டளைக்கலித்துறை.]

பிரியாமைகூறல்

விளங்கனியொன்றெறிவெள்விடையோனெ விழிக்கணுழைந்
துளங்கனியப்புகுந்தாய்பிரிகாலத்துற்றதென்னும்
வளங்கனிபண்ணைவயல்சூழவிமுத்தவாணநறு
களங்கனியென்றுமைகைக்கிளிபார்க்குங்கறைக்கண்டனே

இ - ள். வளம் கனி பண்ணை வயல் சூழ் அவிமுத்தவாண — வளமிகுந்த வயல்சூழ்ந்த காசியில் வாழ்வோனே, நறுங் களங் கனி என்று உமைகைக்கிளி பார்க்கும் கறைக்கண்டனே — நறுமணமுள்ள களாக்கனி யென்று இறைவியார் திருக்கரத்திலிருக்கும் கிளி பார்க்கும்படியான கறைக்கண்டத்தையுடையவனே, விளங்கனி ஒன்று எறி வெள்விடையோடும் — விளாங்கனியொன்றைக்கன்றினால் எறிந்த திருமாலாகிய வெள்ளிய இடபவூர்தியோடும், விழிக்கண் நுழைந்து உளங்கனியப் புகுந்தாய் — கண்கள் வழியாக நுழைந்து மனங்கனியப் புகுந்திருப்பவனே, பிரிகாலத்து உற்றது என் ஆம் — சாமாக்கினியாமெனநிலைபெற்றுடைய (பிரிந்தால்) யாதாம்முடிவும் (அறியேன் என்றபடி.)

நீ பிரியாதிருக்கும்போதே விளங்காமலிருக்கின்றனென்றலைவி பிரிந்தால் எங்ஙனமாறுவாளென்பாள் என்றும் என்றனள் உளங்கனியப் புகுந்தாய் என்றது பிரியாமைக்குறிப்புணர்த்தியது. கண்ணன் கோபாலரோடு வத்ஸ அசுரன்பசுங்கன்றாய் வர அதனை யெறிந்து அங்கு நின்றவிளாவின் கனியைக்கண்ணழுத்தியவதாரத்தில் திருமால் வீழ்த்தானென்பதும், திரிபுரதகனஞ்செய்யுங்காலத்தில் திருமால் விடையுருவங்கொண்டு தாங்கினரென்பதும் புராணவரலாறு. விளா களா, என்பவற்றின் ஆகாரங் குறுக்கல் விதியுயிரீறாய்நின்ற மரபுபெயர் முன்வருமொழி வல்லெழுத்திற்கு இனவெழுத்து மிகுதல் "மரப்பெயர் முன்னர்" என்ற சூத்திரவிதியால். களங்கனியென்று கிளிபார்க்குமென்றது மயக்கவணி (௯௧)

சந்தத்தாழிசை

கண்டமட்டிருண்டு பாதிபசந்துபாதிசெவந்துளார்
காசிநாதர்காத்துவைத்தகபாலமொன்றலதில்லையால்
உண்டகோடியின்மேலுமையாபாதம்பெறக்கடவாரவார்
ஒருவொருத்தராதரிப்பவொருகபாலம் வேண்டுதலெலாம்
பண்டிருந்தவிரிஞ்சமாமாலுமாலயுஞ்செலமாயவிடிற
பாரமென்றலைமேலெடாதுசொலெனுமகட்டுசியிறைபசுங்
கொண்டலவனைநாகுயிலகாளாளபுந்துயிலார்பிரமனுமெனுங்
கொள்கைநணியல்லையுவாவவர்பரஞ்சமீரகுமாரனே.

இ - ள். கண்டம்மட்டுமை இருண்டு பாதிபசந்து பாதிசெவந்துஉள்ளா ர்காசிநாதர் — கண்டமட்டுங் கருநிறம்வாய்ந்து செம்பாதிபசந்து செம்பாதி

செவந்துள்ளவராகிய காசியிலெழுந்தருளியிறைவா, கரத்துவைத்தகபாலம் ஒன்றுஅல்லது இல்லை— திருக்கரத்திலேந்திய கபாலமொன்றேயன்றிவேறில்லை. ஐயர்பதம் பெறகடவார் கோடியின் மேலும்உண்டு — அவ்விறைவரது சாருப்பியம் பெறக்கடவோர் கோடியென்னு மிலக்கத்தின்மேலுமுண்டு. அவர்க்கு ஒவ்வொருத்தர் கரத்தில் ஒவ்வொர் கபாலம் வேண்டும்— அவர்களுக்கு ஒவ்வொருவர் கையிலு மொவ்வொரு கபாலமிருக்கவேண்டும், அதற்கு எல்லாம் பண்டுஇருந்த விரிஞ்சன்மார்தலைமாலையும் செலவாய்விடில்— அவ்வாறிருத்தற்கெல்லாம் முன்னிருந்த பிரமர்கள் தலை மாலையாம், அதுவுஞ்செலவானுல், பாரம் என்தலைமேல் வருங்கொல் என்னும் கவற்சியின்ஆல்— பாரம் என்தலைமேல் வருமோவென்னுங் கவலையினுல், பசுங்கொண்டல்வண்ணர்துயில்கொள்ளவும்—சூற்கொண்டமேகம்போன்ற கரிய நிறமுடைய திருமால்திருப்பாற்கடலில்துயில்கூரவும், பிதாமகனுர்துயிலார்என்னும்கொள்கை—(நமது தலைக்கு எங்கே தீங்குவருமோவென்று) பிரமா துயில் கூராதிருக்கின்றனரென்னுங் கொள்கையை, சமீரணன்குமாரனே (பிரமபட்டத்தை விரும்பிய) வாயுபுத்திரனுகிய அநுமானே, கண்டும் அவர்பதம் விழைந்தஆறு—தெரிந்திருந்து மப்பிரமனுர் பட்டத்தை விரும்பிய வகையென்ன (கூறுய் என்றபடி.)

விஷபானத்தால் கண்டங்கறுத்திருத்தலால் கண்ட மட்டு மிருண்டெனவும், இறைவியார் பச்சைநிறமும் தாஞ்செந்நிறமும் ஆதலால்பாதிபசந்து பாதி செவந்துளார் எனவுங் கூறினுர். சமீரணன் சமீரன் இடைக்குறை. சமீரகுமாரன் "சிலவிகாரமாமுயர்திணை" என்றதனுல் நிலைமொழி யீறுகெட்டது. சமீரகுமாரன் என்பதற்குப் போர்த்தொழிலில் வல்ல குமாரனேயெனப்பொருள் கொள்ளுதலும் ஒன்று. ஒவ்வொருத்தர், ஒவ்வோர்நிலைமொழியீறுகெடுதல் "ஒன்பதொழித்த வெண்ணொன்பது மிரட்டின்" என்பதனுல். பிதாமகனுர் இயற்பெயர் முன்னர் ஆர் என்னுமிடைச்சொல் உயர்வு குறித்தலின் மேல் நின்றது. விரிஞ்சன்மார் மார்பலர்பால்விகுதி. இது ஒருமையிற் பன்மைவந்தபால் வழுவமைதி பாரமென்றலைமேல்வருமகொல் என்பது என்றலையெங்கே கொய்வாரோவென்னும் பொருள்தோன்ற நிற்றலால் கவர்படு பொருளிலும், திருமாலுக்குஅக்க வலையின்மையின் துயில்கொள்ளவும்என்றுர்

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.]

தலைவன் சிறைப்புறமாகப் பாங்கிகூறல்.

கும்பமிரண்டுசுமந்தொசியுங்கொடி நுண்மருங்குலிறுமிறுமென்
றம்பொற்பசுங்கொம்பன்னுளையாகத்தணைத்தவகிலேசர்
செம்பொனிதழித்தெரியலையேசிந்தித்திருப்பத்திரண்முலையும்
பைம்பொனுருவும்பீர்பூத்தபவளச்செவ்வாய்ப்பசுங்கிளிக்கே.

இ - ள். கும்பம் இரண்டு சுமந்து ஒசியும் கொடி நுண்மருங்குல் இறும் இறும்என்று—இரண்டுதனங்களையுஞ் சுமந்து துவளாநின்ற கொடிபோன்றநுண்ணிய இடைமுறியுமேயென்று, அம்பொன் பசுங்கொம்பு அன்னுளை ஆகத்து அணைத்த அகிலேசர்— அழகிய கற்பகப்பூங்கொம்பையொத்த விறைவியை

த்தமதிடப்பாகத்திலிருத்திய விசுவநாதராது, செம்பொன் இதழி தெரியலை எசிந்தித்து இருப்ப—செவந்தபொன்னிறம்வாய்ந்த கொன்றைமாலையினையே கருதி யிருக்க, பவளம் செவ்வாய் பசுங்கிளிக்கு இரள் முலையும் பைம்பொன்உருவும் பீர்பூத்த— பவளம்போலுஞ் செந்நிறம்வாய்ந்த வாயையுடைய பசிய கிளிபோன்ற குதலைச்சொல்லையுடைய வென்றலைவிக்குத் திரண்டதனங்களும்பசிய பொன்னையொத்த வடிவமுமபசலைபூத்தன.

உனது கொன்றைமாலையை விரும்பி, அதுபோலச்சாருப்பியம் பெற்றனளாதலால் அக்கொன்றைமாலையைத் தந்தருளாய் என்பதைக்குறித்துநிற்றலாற்குறிப்பணி உமாதேவியாரையிடப்பாகத்திற் கொண்டருளியது இடைமுறியுமென்றே கருதியென்பார் செம்பொனிதழியாகத் தலைநீக்கலகிலேசா என்றார் இறுதி நம்தேர்ரப்பொருளின்வந்த அதிசகுதமொடா (சரு)

கட்டளைக்கலித்துறை]
தலைவிநெஞ்சொடுபுலத்தல்

கிள்ளைக்கதிர்மொழிசாற் கேடுகிருக வித்தபெண்ணை
பிள்ளைக்கிடந்தந்தகாசிப்பிரா ன்பிறையொடுமுடி
கொள்ளைச்சிறைவண்டுகூட்டுறுங்கொன்றையுங் கூடவைத்தான்
வள்ளக்கலசமுலைக்கனங்குழையாருயிர் வாழ்வதற்கே

இ - ள் பிள்ளைக்கு அரி யமொழி ... சிஞ்சுகம் இதழுபெண்பிள்ளைக்கு இடம்தந்த காசிபிரான்— திருக்காதலி லலந்தியகளிக்குஅமுதுபோன்ற சொற்களைசசுறபிகரு முண்முருசுகுமாரனையொத்த நிறையுடைய உமாதேவியார்க்கு இடப்பாகந் தந்தருளிய காசியிலெழுந்தருளிய இறைவா, வள்ளம்கலசம் முலைகொங்கையாள் உயிர்வாழ்வதற்கு— கிண்ணத்தையுங் கலசத்தையுமொத்த தனத்தையுடைய கனங்குழையாருயிர் வாழ்தற்பொருட்டே, பிறைஓடுமுடிகொள்ளை சிறைவண்டு கூட்டினும் கொன்றைஉம் கூடவைத்தான்— இளஞ்சந்திரனோடுசடாமுடியில கூட்டங்கூட்ட மாய்ச்சிறகினையுடைய வண்டுகள்தேனைக்கொள்ளைகொள்ளுங் கொன்றைமாலையினையுங் கூடவைத்தருளினார்.

சடாமுடியில்கங்கையோடு பிறையையுங் கொன்றை மாலையையும் வைத்தருளியது அப்பெணசந்திரனால் வருந்தமுறுவாளென்பது கருதியேகொன்றைமாலையைத்தரித்தது, நம்மேல்விருப்பமிலராயிருக்க நீவிரும்பியதற்கிரங்கியாயினும் அக்கொன்றைமாலை தந்திலாஅதனால் நீசெய்தது மடமையெனநெஞ்சொடு வருந்துதலால் நெஞ்சொடுபுலத்தலாயிற்று (சசு)

கலிவிருத்தம்
பருவங்கண்டுபொங்கியிரங்கல்

வாட் டங்கணுமையை புணர்ந்துழுகியோ
சேட்டிளங்கொடிகைசெய்தவமோகிலார்
காட்டிளங்கொன்றைசூடிப்பொனம்பலத்
தாடுவோந்தவவிழுந்தவாணர்

இ - ள். தோடு இளங்கொன்றை சூடிபொன்அம்பலத்து ஆட்டு உவந்த அவிமுத்தவாணர் — இதழலர்ந்த கொன்றைமலர்மாலையைச் சூடிப்பொன்னம்பலத்தில் நடனத்தை விரும்பிய காசியில்வாழு மிறைவர், வாள்தடகண்மழைபுனல்மூழ்க — வாள்போன்ற பரந்தகண்கள்சிந்தும் நீரில்மூழ்கி, சேடுஇளங்கொங்கை செய்தவம் ஓர்கிலார் — பருத்தமுதிராத எனதுதலைவியின் தனங்கள்செய்யுந் தவத்தைச்சிறிதுமறியாதிருக்கின்றனர் (இதுஎங்கள்குறையே)

காரகாலத்துவருவேனென்று பிரிந்ததலைவர் வாராதிருப்பத்தலைவி வருந்துதலைநோக்கிப் பாங்கியிரங்கல் (௩௫)

(அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

நரைமுதிர்ந்தனகண்கள்பஞ்சடைந்தனநமன்றமர்வழிக்கொண்டார்
திரைமுதிர்ந்துடறிரங்கினதிரங்கிலைசெயலிதுமடநெஞ்சே
உரைமுதிர்ந்தவர்குழாத்தொடுமடைதியாலொழுகொளிமுடிக்கங்கைக்
கரைமுதிர்ந்திடாக்கலைமதிமுடித்தவர்காசிநன்னகர்தானே.

இ - ள். மடமைநெஞ்சே — அறியாமையையுடையமனமே, நரைமுதிர்ந்தன கண்கள்ஒபஞ்சடைந்தன — நரைகள்முதிர்ந்தன கண்களோபஞ்சடைந்தன, நமன்தமர் ஒவழிக்கொண்டார் — யமபடர்களோவுயிர் கவரவருகின்றார்கள், உடல் ஒதிரைமுதிர்ந்து திரங்கினது — உடம்போ திரையால் முதிர்ந்து திரைத்தது, இரங்கிலை — இதுகாறும் வீணேகழிந்தநேரமேயென்று வருந்திலை, செயல்இது — நீயினிச்செய்யுஞ்செய்கையிது, ஒளிஒழுகு முடிகங்கைகரை முதிர்ந்திடாத கலைமதிமுடித்தவர் காசிநல்நகர் உரைமுதிர்ந்தவர் குழாத்தொடும் அடைதி — ஒளிவீசுஞ் சடாமுடியிலணிந்த கங்கையின்கரையில் இளமைவாய்ந்தகலையையுடைய பிறையைமுடித்த இறைவரது நல்லகாசித்திருநகரில் வாழ்த்துதலில் மிக்கவடியவர்கூட்டத்தொடு அடைவாய் (அடையில்முத்தியடைவாய்என்றபடி)

திரங்கனது இறந்தகாலவினைமுற்று திரங்குபகுதி. "கொங்கைதிரங்கி" எனப்பெரியோர் திருவாக்கானுணர்க. (௩௬)

[வஞ்சித்துறை]

நகரமாய்மறைச்
சிகரமானதான்
மகரமாயினன்
நிகரில்காசியே.

இ - ள். மறைச்சிகரம் ஆனதான் நிகர்இல் காசி — வேதசிரசானதான் ஒப்பில்லாத காசித்திருநகரில், நகரம்ஆய் — திரோதசத்தியாய், மகரம்ஆயினன் — பாசமாயிருந்தருளினன்.

காசியிலெழுந்தருளிய விறைவனுக்கு விச்சுவநாதனெனத் திருநாமம்வந்தது இரண்டாஞ்சுருதிவாக்கியம். அதன்பொருள்மாயையிற்றோன்றியவுலகம் அசித்திதனாய் நின்றதன்னுருவிற்றோன்றி, அதுஒடுங்குதற்குக் காரணமாயுள்ளவன். ஆன்மாக்கள் பரிபக்குவமடைதற்குத் திரோதசத்தியால் மறைப்புண்டு ஆணவமலத்திற்கட்டுப்பட்டுப் பிரபஞ்சத்திலழுந்துதற்கு உலகம்தன்னு

ருவத்திறந்தோன் றதிற்றலால்நகரமாய் மகரமாயினானென்றார். இதனைக்குரு முகத்தாலுணர்க. இதனாலிறைவனுக்கு விச்சுவநாதனென வந்த திருநாமத்திற்குக் காரணங்கூறினார் (௯௭)

[கட்டளைக்கலித்துறை]

தலைவிபிரிவாற்றாமைகூறல்

இல்லொன்றென வெளிதயம்புக்காய்மதனெய்கணைகள்
வல்லொன்றுபூண்முலைமார்பகம்போழ்வனமற்றென்செய்கேன்
அல்லொன்றுகூந்தலணங்கரசோடுமொராடகப்பொன்
வில்லொன்றுகொண்டவிமுத்தத்தலைநின்றவிண்ணவனே

இ-ள். அல் ஒன்றுகூந்தல் அணங்கு அரசு ஒடும் — இருளையொத்த கூந்தலையுடைய தெய்வப்பெண்களுக்கரசியாகிய இறைவியோடும், ஓர் ஆடகப்பொன் வில் ஒன்று கொண்டு அவிமுத்தத்தலை நின்ற விண்ணவனே — ஒருபொன்வில்லையேந்திக் காசியில் நின்றருளிய தேவனே, இல் ஒன்று என்ன வெளி தயம்புக்காய் — ஒருவீடுமாளிகையாக [illegible] மனை நினைந்து [illegible] யேற்றனையாமென, மதன் எய்கணைகள் வல் ஒன்றுபூண் முலை மார்பு அகம் போழ்வன — மன்மதனெய்யும் பாணங்கள் சூதாடு கருவியையொத்த [illegible] ஆபரணத்தையணிந்த தனங்களையுடைய மார்பிடத்தைப் பிளக்கின்றன, மற்று என் செய்கேன் — நானென்செய்வேன் அதனையொழித்தருளாய்.

போழ்தல் வினையையொழிப்பாயென்று பொருள்கொள்க [illegible] றுவினைமாற்றுப்பொருளில்வந்தது (௯௮)

[மருட்பா]

கைக்கிளை

விண்ணமிர்துநஞ்சாய் விடமுமமிர்தாம
உண்ணமிர்தநஞ்சோடுதவலால் — தண்ணென்
கடலொடுபிறந்தனபோலுந்தடமலர்
கடிநகர்க்காசியுண்மேவும்
மடலவிழ்கோதைமதர்நெடுங்கண்ணே.

இ-ள். தடம்மலர் கடிநகர்க்காசி உள்மேவும் மடல்அவிழ்கோதை மதர் நெடுங்கண் — தடாகங்களில் தாமரைமலரும் காவல்கொண்ட நகராகிய காசியில்வசிக்கும் இப்பூவிதழலர்ந்த கூந்தலையுடைய தலைவியின் மதர்த்தநெடியகண்கள், உண் அமிர்தம்நஞ்சு ஒடு உதவலால் — உண்ணுமமிர்தத்தை நஞ்சினோடு உதவுதலால், விண் அமிர்து உம் நஞ்சு ஆம் விடம் உம் அமிர்து ஆம் — விண்ணுலகிலுள்ள தேவாமிர்தமும் நஞ்சாம் நஞ்சமுமமுதாம் (ஆதலால்) தண்ணென் கடலொடுபிறந்தன போலும் — குளிர்ந்த திருப்பாற்கடலோடும் பிறந்தனவொக்கும்.

இவளுள்ளக்கருத்தை வெளிப்படுத்து நோக்குஅமுதும், பொதுநோக்குநஞ்சும் ஆதலால் உண்ணமிர்தநஞ்சோடுதவலால் எனவும், திருப்பாற்கடல்இரண்டையுந்தந்ததுபோலத்தலைவிகண்களிவ்விரண்டையுந்தந்தமையா

ல் தண்ணென்கடலொடு பிறந்தனபோலும் எனவும், இவள் கண்ணேக் கொன்றே* ஒருகால் நஞ்சுமொருகாலமுதமுமாயிருத்தலால் அமிர்தும் நஞ்சாம் விடமுமமிர்தமாம் எனவுங் கூறினா "இருநோக்கிவளுண்கணுள்ள தொருநோக்கு — நோய் நோக்கொன்றந்நோய் மருந்து" எனவருந்திருக்குறளாலுணர்க. அதுபோல அமுதினைவிரும்பிய வசுரர்கள் மடிந்ததும் சிவபிரானுக்கு விடம் அமுதாயிருந்ததுங் காண்க. இவ்வாறன்றி விண்ணமிர்தமமிர்தமாம் விடமும் நஞ்சாம் எனத் தழாத்தொடராய அல்வழிமுடிபெனக் கொண்டு பொருள் கொள்ளுதலுமொன்று. அவ்வாறு கொள்ளுமிடத்துப் பொதுநோக்கு நஞ்சேயாகவும் காதலை வெளிப்படுத்துநோக்கு அமுதேயாகவுமிருந்தனவெனக்கொள்க. இது தலைவன் கூற்றுதலால் கைக்கிளையாயிற்று "கைக்கிளையுடைய தொருதலைக்காமம்" என்றதனால். இது மலைச்சாரலில் நிகழ்வதாதலால் திணைகுறிஞ்சி, கைகோள் களவு, கேட்போர் நெஞ்சு, கூற்று தலைவன்கூற்று, இடம் முன்னிலை, உட்கோள்பயன், மெய்ப்பாடுஉவகை அகரச்சட்டு எசசம் உட்கோள் அவள் கருத்தைத் தன்னுட்கொள்ளுதல். ()

வஞ்சிவிருத்தம்]

கண்ணொடு காவி கருத்துமாய
உண்ணிறைந்தவொரொண்பொருள
நண்ணுமாநகரானதால
அண்ணலாரவிமுத்தமே.

இ - ள். அண்ணல ஆர் அவிமுத்தம் — பெருமைநிறைந்த காசியானது, கண் ஆவி கருத்து உம் ஆய் உள நிறைந்தது ஒர ஒண்பொருள் நண்ணும் மாநகர் ஆனது — எனக்குக் கண்ணுமுயிரும் கருத்துமாகியுள்ளேநிறைந்துள்ள ஒள்ளிய ஒருபொருள எழுந்தருளியிருக்கும் பெரிய திருநகராயிருந்தது.

அகத்தில நிறைந்தபொருள ஆன்மாக்களுக்கு அருளுதற்குப் புறத்திறகாசியிற்றிருக்கோயில கொண்டனா எனபது கருத்து. ஒடுஎண்ணொடு. (எ)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

முத்தாடி யெந்தப்பருவத்தோரிளஞ்சேயையுங்கின்று முதலவியோடு
வைத்தாடுவீர்பொதுவினின்றுமுமக்கிந்தவாரமென்னே
கொத்தாருஞ்சடையொடுமானந்தவனத்தே குறுந்தாணெடும்பூதத்தோ
டொத்தாடுவீரடிகட்கெல்லோரும்பிள்ளைகளென்றுணர்ந்திடீரே

இ - ள. கொத்துஆர்சடை யொடுஉம் ஆநந்தவனத்தே குறுந்தாள் நெடும்பூதத்தோடுஒத்து ஆடுவீா — பூங்கொத்தமைந்தாடுஞ் சடையினேடும் ஆநந்தவனத்தில் குறுகிய காலையுடைய நெடிய பூதகணங்களோடு தாமுமொருவராய்நின்று ஆடாநின்றீர், அடிகட்கு எல்லோரும் பிள்ளைகள் என்று உணர்ந்திடீர்—தேவரீருக்கு நாங்களெல்லோரும் பிள்ளைகளாயிருக்கவுங்களைப் பிள்ளைகளென்று கருதாமல், ஓர் இளஞ்சேயை முத்துஆடி — ஒருஇளையபிள்ளையாராகிய முருகக்கடவுளை முத்தமிட்டு, உலகுஈன்ற முதல்வியோடுஉம் மடித்தலத்துவைத்து ஆடுவீர்— எல்லாவுயிர்களையு மீன்றருளியஇறைவியோடு மடித்தலத்திலிருத்திவிளையாடாநின்றீர், பொதுவில்நின்றுஆடும் உமக்குஇந்தவாரம்என

ன்—யாவர்க்கும்பொதுவாயுள்ள அம்பலத்தினின்றுமிந் தேவரீருக்கு இந்தப்ப க்ஷபாதம் எங்கிருந்து வந்தது.

பொதுவல்லிருப்போர்க்குஉறவினர், நட்பினர் அயலினரல்லாரையுமொருதன்மையராகநோக்கும் நடுநிலைமைவேண்டுவதால் வாரமென்னென்றார். உணர்ந்திடர் என்னும் முன்னிலைப்பன்மை யெதிர்மறைவினைமுற்று எச்சமாய்நின்றது (௭௧)

[சம்பிரதம், பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

உண்டிலகோடியுமுமிழ்ந்திடுவன்முந்நீரேழுமொருகைப்பிழிந்துகடலேழு
உடன்வாய்மடுத்திடுவன்மேருமலைதன்னைப்பிடுங்கிச்சுழற்றி
அண்டபகிரண்டமுமடித்துடைப்பன்புவனமனைத்துமேழுபிலமேழுமாய்
அடைவடைவடுக்கியவடுக்கைக்குலைப்பனிவையத்தனையும்வித்தையலவாம்
கொண்டல்மணிவண்ணனுமுண்டகக்கண்ணனுங்குஞ்சிதச்செஞ்சரணமுங்
குடிலகோடீரமுந்தேடியதலமுமண்டகோளமுந்துருவியோடப்
பண்டைமறையோலமிடவெளியினடமாடும்பரஞ்சுடர்பொலிந்தகாசிப்
பதியிலடையாமலிப்பல்லுயிர்த்தொகுதியும்பரமபதமடைவிப்பனே

இ - ள். அகிலகோடி உம் உண்டு உமிழ்ந்திடுவன்—அளவில்லாதபுவனங்களையுமுண்டுமிழ்வன், முந்நீர் ஏழும் ஒருகைபிழிந்து கடல் ஏழு உடன்வாய் மடுத்திடுவன்—ஏழுமேகங்களையுமொருசேரப்பற்றிப்பிழிந்து ஏழுகடலையும்விழைந்துபருகுவேன், மேருமலைதன்னைப்பிடுங்கிச்சுழற்றி அண்டபகிரண்டமும் அடித்து உடைப்பன்—வடதிசையிலுள்ள மேருமலையை வேரோடும் பிடுங்கிச்சுழற்றிப் பலவாயிரகோடி யண்டங்களையுமடித்துடைப்பேன், புவனம் அனைத்தும் ஏழுபிலம் ஏழுமாய் அடைவு அடைவு அடுக்கிய அடுக்கைக் குலைப்பன்—பூலோகமுதலிய மேலேழுலகும் அதலமுதலிய கீழேழுமாகுமாக அடைவடைவாகவடுக்கிய வடுக்குகளையழிப்பேன், இவை அத்தனையும் வித்தை அல்ல ஆம்—இவைமுழுமையும் வித்தையல்லவாம், கொண்டல்மணிவண்ணன் உம் முண்டகம் கண்ணன் உம்—மேகத்தையும் நீலமணியையுமொத்த நிறத்தையுடைய திருமாலுந் தாமரையிடத்திலிருக்கும் பிரமனும், குஞ்சிதம் செம்சரணம் உம் குடிலகோடீரம் உம் தேடி—வளைந்தசெய்ய திருவடியையும் சடாமுடியையுந்தேடி, அதலம் உம் அண்டகோளம் உம் துருவி ஓட—அதலமுதலியபாதலத்தையு மண்டகோளத்தையு மாராய்ந்துசெல்லவும், பண்டைமறை ஓலம் இட வெளியில்நடம் ஆடும் பரஞ்சுடர்பொலிந்த காசிபதியில்—தொன்றுதொட்டுள்ள வேதங்கள் காணாமலோலமிடவும் வெளியேதிருநடனஞ்செய்யும் சிவபிரானார் எழுந்தருளிய காசிநதிருப்பதியில், இப்பல் உயிர்த்தொகுதியும் அடையாமல் பரமபதம் அடைவிப்பன்—இந்தப்பலவுயிர்க்கூட்டங்களுஞ் சேராமலிங்கிருந்தபடியே முத்தியையடைவிப்பேன்.

காசியிலடைந்தோர்க்கு முத்தியென்பது வழக்காதலால் அடையாதிருக்கவே நான்முத்தியிற் புகுவிப்பனென்றதனாற்சம்பிரதம் ஆயிற்று. வெளி ஆகாயம், வெளியிடம் இக்கவர் பொருள்படச்சிதாகாயத்தை வெளியென்றார்.

துருவி இறந்தகால வினையெச்சம் துருவு பகுதி சம்பிரதம் கலம்பகத்திறோ ருறுப்பு. (எஉ)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.]

மேகவிடு தூது

விளைகுழைக்குமழைமுகில்காள் விண்டலர்தண்டுழாய்ப்படலைவிடலையென்ன
அளைகுழைக்கும்பொழிற்காசியணிநகருக்கேகுதிரேலறன்மென்கூந்தல்
வளைகுழைக்குமுலைகுழைப்பக்குழைதிரடோளழகுமுடிவணங்கிதென்னக
களைகுழைக்குமலைகுழைத்தகண்ணுதற்கென்பேதைதிறங்கழறுவீரே.

இ - ள். விளை குழைக்கும் மழைமுகில்காள்—வித்துகளங்குரிக்கச்செய்யுமேகங்களே, விண்டு அலர் தண்டுழாய் படலைவிடலை என்ன—நெகிழ்ந்தலர்ந்த தண்ணியதுழாய்மாலையணிந்த திருமால் செல்லுதலைப்போல, அளைகுழைக்கும் பொழில்காசி அணிநகருக்கு ஏகுதிரேல்—தூருகள்தளிர்க்குஞ்சோலை சூழ்ந்த அழகிய காசிநகருக்குச்செல்லுவீராகில், அறல் மென்கூந்தல் வளைகுழைக்கும்முலைகுழைப்பகுழை திரள்தோள் அழகு—கருமணல்போலு நெளிவு வாய்ந்தமெல்லியகூந்தலையுடையஇறைவியின்முலைகுழையச்செய்யும் தனங்கள் குழைக்கவிளங்கிய தோளினழகுக்கு, முடிவணங்கிது என்ன— தலைவளைந்தது போல, களைகுழைக்கும் மலைகுழைத்த கண்ணுதற்கு என்பேதை திறம் கழறுவீர்—சொல்லளவைகடந்த உயர்ச்சியையுடைய மேருமலையைவளைத்த சிவபிரானுக்கு என்தலைவியினது திறத்தைச சொல்லுவீர்.

மழைமுகில்காள் விடலையென்ன ஏகுதிர பண்புந் தொழிலும் பற்றிவந்த வுவமையணி. வணங்கிது சாரியைபெறாதுவந்த ஒன்றன்பாற்படர்க்கை யிறந்தகாலவினைமுற்று. வணங்கு பகுதி, கடைக்குறையாயகின் றஇன் இறந்தகால யிடைநிலை, து விகுதி. (எங)

[சட்டமொக்கலித்துறை]

தலைவன்சிறைப்புறமாகப் பாங்கிமறைத்து மொழிகிளவி.

கழைக்கரும்பைக்குழைத்தான் மதவேள் அக்கணத்திலம்பொற்
குழைக்கரும்புங்குழைந்திட்டதந்தோகுளிர்தூங்குதளி
மழைக்கரும்பும்பொழிற்காசிப்பிரான்மலையாள் முலைபோழ்
முழைக்கரும்புற்றரவாடநின்றாடியமுகக்கணனே.

இ - ள். பொழில்காசிபிரான்—சோலைசூழ்ந்தகாசியிலெழுந்தருளிய இறைவனே, மலையாள்முலை போழ்முழை—இறைவியின் தனம்பிளந்த குகையாகிய, கரும்புற்று அரவு ஆடநின்று ஆடியமுக்கணனே—பெரியபுற்றிற் பாம்பு நின்றாடநின்று நடனஞ்செய்தருளிய திரிநேத்திரங்களை யுடையவனே, மதவேள் கழைக்கரும்பைகுழைத்தான்—மன்மதன்கரும்பை வளைத்தனன், அந்தோஅக்கணத்தில் அம்பொன் குழைகரும்பும்குழைந்திட்டது — ஐயோ அப்பொழுதேயழகிய குழைகளையுடைய கரும்புமவளைந்தது, குளிர்தூங்குதளி மழைக்கு அரும்பும் — குளிர்ச்சிமிக்க மழைத்துளி சிந்து மாயினதற்குத் தளிர்க்கும்

கரும்பு வில்லை மன்மதன் வளைத்தானதனால் அழகிய பொன்னாற்செய்த

குண்டலத்தைப் பண்ணத கருட ... றியவிமொழி முள தலைக்கொள் செய தால வாட்டந்தீரவாள என்னும் பொருள் புலப்படத் திறதலால் ஒட்டணி. இத னைப் பிறிதுமொழிதலணியெனவும் ... யெனவுங் கூறுவர். அம்பொற் குழைக்கரும்ப அழகியபொன்னாற் செய்யக் குண்டலத்தையணிந்த கரும்பினிரதமபோல் ... யுடைய ... குழைக்கரும்பு கழையென் னுஞ் சிறப்புப்பெயர் கரும்பு என்னும் பொதுப்பெயரை விசேடித்துவந்த இரு பெயரொட்டுப் பண்புத்தொகை பிரா ... அ ... மையன் (௭௪)

[கட்டளைக்கலித்துறை]

பாங்கி செவிலி ... தாய்க்குக் கூறல்

... ஞ்சென ... ததைக்கண்ட ... லெயபதினர
உண்ணஞ்சனத் தழைக்குமஞ்சனம் ... பதாரப் ... ருப்பார
பண்ணஞ்சன ... டைய பரமபரனை
பெண்ணஞ்சனத்தை ... ருமபதிநாதர்க்குப் போ

இ - ள் உமபா ... அம்பாது அகிலகொண்ட காசிபரமா — தேவர்கள் ... ருமபு மழு ... கொண்ட ருளிய காசியிலெழுந்தருளிய பரம பரனைப் பெண் அஞ்சநஞ்சு அாவு ... துநின்று ஆடும அபிஞ ... — பரமனைப் ... நயந்த இறைவி யஞ்ச நஞ்சினையு டையசாபபத்தைக கசைய ... பூண்ட அந்த இறைவர், கண் அஞ் சனத்தைக் கொத்து ... யாம் ... — கண்களிலெழுந்த மை யைக் கொண்டு தாடாகினர் ... யபதின தலைவி, உண நஞ்சு அன னத்துக்கு உம அஞ்சவைத்தார் ... நஞ்சாக அனனத்துக்குமஞ்சி யொழியவைத்தனர் (அறிவாய என்றவாறு)

பிஞ்ஞகர் தலைக்கோலமுடையவர் தன் தலைவிக்குவந்த சோர்வினை நோக் கி வனதேவதைகளாலவந்த குற்றமென்று அதுபோக்க முயலுஞ் செவிலிக் குப் பாங்கி உண்மைகூறுவள இறைவர் தாமுண்ட நஞ்சாக நமது தலைவி அன் னமுமுண்ணாது ... யதைக் ... லால் அறத்தொடு நிற்றலாயிற்று. நஞ்சு நசசுவலிநதல் ... ணஞ்சனததைக்கொடுதோடுநீர் கடலசெய யதினர் என்பது ... (௭௫)

[கட்டளைக்கலிப்பா]

... கிளவி

கருகுகஙகுலகருமபகரோந்து ... — சலைமதிககொலைககூற நஙகவாநதுயிர
பருகுதற்குககாத்தாலவிரிகிலாப் — பாசம்வீசிவ ... திங்கென்செயகேன்
முருகு தாறுகுழற்பொலங்கொமபனீர் — புந்தாவாழ ... முகநதமுநெகருடைந்
தருகுபததாதஞ்சிக்கமுறு ... — ... டையநா ... றகுணாததிடுவீரகளே

இ - ள் முருகு நாறு குழல் பொலங்கொம்பு அன்னீர் — வாசமவீசுங கற பகப்பூங்கொம்பையொத்த பெண்களே, ... கலைமதி கொலைகூறும் — வெள் ளியகலைகளையுடைய சந்திரனென்னும் யமன, கருகுகங்குல் கருமபகடு ஊர்ந் து உயிர்கவர்ந்து பருகுதற்கு — கருகிய இருளென்னும் பெரியவெருமைககடா வை நடத்தி உயிரைக் கொள்ளைகொண்டுபோக, காத்து ஆல் விரிகிலா பாசய

இங்குவீசி வளைத்தது என்செய்கேன்—தனதுபிரணமாகியகையினால் விரிந்த நிலையென்னும் பாசத்தை யிங்குவீசிவளைத்தது நானென்னசெய்வேன், முத்தர் வாழ் அவிமுத்தம்உம் நெக்கு உடைந்து உருகுபத்தாதம்சித்தம்உம கோயிலாக உடையநாதற்கு உரைத்திடுவீர்கள்—சிவன் முத்தர்கள்வாழுங் காசியையும் நெக்குவிட்டுடைந்துருகாநின்ற அடியவரிதயத்தையுங் கோயிலாக வுடைய இறைவன் இயமனையுதைத்தவராதலா லவர்க்குக்கூறுங்கள்.

இது தொகையுருவகவணி. இங்கு முன்னிலைக்குரிய சுட்டுப்பெயர் தன்மையிடத்துவந்தது வழுவமைதி. (எசா)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

உரைத்தநான்மறைச்சிரத்துமைந்தவித்தவருளத்தும்வண்டொருகோடி
நிரைத்தபூங்குழனிரைவலையவளொடுநின்றவருறைகோயில் [க்
குரைத்ததெண்டிரைக்கங்கைமங்கையர்துணைகொங்கைமான்மதச்சேற்றை
கரைத்திருங்கடல்கருங்கடலாச்செயுங்காசிமாநகர்தானே

இ - ள் உரைத்தநான்மறை சிரத்து உம் ஐந்து அவித்தவர் உளத்து உம்—தாங்கூறிய நான்கு வேதங்களின் சிரசுகளிலும் பஞ்சேந்திரியங்களின் செயலையொழித்த முனிவர்களிதயத்திலும், ஒருகோடி வண்டுநிரைத்த பூங்குழல் நிரைவலையவள் ஒடுநின்றவர் உறைகோயில்—ஒருகோடி வண்டுகள் தேனுண்டு பத்தியாயுள்ள மலரையணிந்த கூந்தலையுடைய இறைவியோடுநின்ற இறைவரெழுந்தருளியிருக்குந் திருக்கோயிலானது, குரைத்த தெண்டிரை கங்கை—ஒலிக்காநின்ற தெள்ளிய அலையை யுடைய கங்கையானது, மங்கையர்துணைகொங்கை மான்மதம் சேற்றை கரைத்து—தன்னிடத்து மூழ்கிய பெண்களினிரண்டுகொங்கைகளிலுந் தீர்ந்த கஸ்தூரியின் குழம்பைக்கரைத்தோடி, இருங்கடல் கருங்கடல் ஆக்செய்யும் காசிமாநகர்—பெரியகடலைக்கரியகடலாகச்செய்யுங் காசியென்னும் பெரியநகரமாம்

நிகழ்காலத்தை யிறந்தகாலமாகக் குரைத்தவென்றது தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி (எஎ)

[கட்டளைக்கலிப்பா]

காமமிக்க கழிபடர்கிளவி.

மானமொன்றுநிறையொன்றுநாணொன்று—மதியமொன்றுகுயிலொன்று
திங்குழற், கானமொன்றுகவர்ந்துறுமாமதன்—கணைக்கிலக்கென்னுயிரொன்
றுமேகொலாம், வானமொன்றுவடிவண்டகோளமே—மவுலிபாதலமேழ்தா
ண்மலையெட்டும், நானமொன்றுபுயமுச்சுடருமே—நயனமாப்பொலியுமகி
லேசனே.

இ - ள். வானம்ஒன்று வடிவு — ஆகாயமே யொருதிருமேனியாகவும், அண்டகோளம் ஏமவுலி—அண்டகோளமே திருமுடியாகவும், பாதலம் ஏழ் ஏதாள்—அதலமுதலிய பாதாளங்களேழுமே திருவடியாகவும், எட்டுமலைஉம் ஏகானம் ஒன்றுபுயம்—அட்டகுலபருவதங்களு மிருகமதம்பொருந்திய புயங்களாகவும், முச்சுடர்உம் ஏநயனம ஆகபொலியும் அகிலேசனே—சோமசூரியாக்கினியென்னு முச்சுடர்களுந்திருக்கண்களாகவுங்கொண்டு விளங்கும்விச்

சுவைகாதரோ, மதியம்ஒன்றுமானம்ஒன்று — ஒருசந்திரனால் மானமொன்றையும், குயில்ஒன்றுநிறைஒன்று—குயிலோசையால் மனநிலையொன்றையும், நீங்குழலகானம்ஒன்றுநாணஒன்று — இனியவேய்ங்குழலின்கானத்தாலுயிரொன்றையும், கவர்ந்துஉண்ணும மாமதன்கணைக்கு—கொள்ளைகொண்டுண்ணும் பெருமைவாய்ந்த மன்மதனதுபாணத்துக்கு எனஉயிர் ஒன்றும்வ இலக்கு கொல்ஆம்—எனதுயிரொன்றே குறியா (உரைதருளாய்என்றபடி)

உம்மைவிரும்பிய பெண்கள் நிருத்தயாமுறைருந்திதானுமென்பாளிவ்வாறாகவும், தேவரீரொருகுமாயுளவீர்அரியாதெதொன்றில்லையென்பாள்வானமொன்றுவடிவு எடுவெங்கூறினள். இதுபெயரும் பெயருமாகவந்தமுறைநிரனிறைப்பொருள்கோள் வாய்ம்எழுஇவாறனிறுநியில்பிரிநிலை யோகாரங்கள் தொகுத்தல் "வேதண்டமெபுயங்களுமிணே,திருமணி— மூதண்டகூடமே மோலியாய—கோதண்டமுறைமாமேருவுமாபயோர்நின்றுடப்—பற்றுமோசிறறமபமாலப" என நெங்காலாசிரியர் திருவாக்காலுமுணர்க (எஅ)

நிரைமனதசைக கறமின்றி நிகழ்தல

பரிசைநலம்

அகிலாண்டமாயகண்டமனைகிலேசா
முகிலாண்டசோலைவியு...
சின்னவிடைபாகாதிருநயன...
அன்னமிடைபபாகாவருவா

இ - ள் அகிலாண்டமாகிஅகண்டமானஅகிலேசா — எல்லாவண்டங்களுந் தானுகிஅவற்றிற்கு அப்பாலாயுநின்ற விசுவேசனே, முகிலாண்டசோலைஅவிமுத்தா—மேகந்தவழுஞ்சோலைசூழ்ந்தகாசிநிருநகரையுடையோய்,நகில்ஆண்டசின்னஇடைபாகா—தனங்களாலாளப்பட்டசிறியஇடையையுடையவுமாதேவியாரையிடப்பாகத்திலுடையவனே, திருநயனம்செம்கமலம அன்னவிடைபாகா— அழகியகண்கள் செந்தாமரையையொத்த திருமாலாகிய இடபவூர்தியை நடத்துகின்றவனே, அருள் கருணைசெய்யாய

பாகன்நடத்துவோன். விசுவருபியம் விசுவாதிகனுமாயுள்ளவனென்பார் அகிலாண்டமாயகண்டமான என்றார் (எகூ)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

தலைவன்தலைவிஅரியாமைகூறல்.

அருகுமதன்குழைதாக்கழைதெறித்தமுத்தறுண்டேர்வண்டரற்றுமோசை
பெருகுசிறுநாணொலியெனறறிந்துபேதுறும்பேதைக்கென்னும்
உருகுபசும்பொன்னசும்புதசும்புவிசும்பிரவியெனவுடைந்துசஞ்சம்
முருகுயிர்க்கும்பொலங்குடுமிவிமானத்திற்பொலிந்தவவிமுத்தனுரோ.

இ - ள். உருகுபசும்பொன் அசும்புதசும்பு— உருகாநின்றபசிய பொன்னின் பொலிவினையுடையகலசத்தை, விசும்புஇரவிஎன்ன கஞ்சம்உடைந்து முருகுஉயிர்க்கும் பொலங்குடுமி விமானத்தில்பொலிந்த அவிமுத்தனுரோ— ஆகாயத்திற்றோன்றிய சூரியனென்று தாமரைகள்மலர்ந்து தேனைக்கக்கும் பொன்னாலமைந்த சிகரத்தையுடைய விமானத்திலெழுந்தருளிய விசுவேச

ரே, அருகுமதன் குழைத்தகழை தெறித்தமுத்து எறுண்டெழுவண்டு அரற்றும்ஓசை— பக்கத்தில்நின்று மன்மதன்வளைத்த கரும்பினின்றுந்தெறித்த முத்துகளால் மோதப்பட்டுமேலெழுந்த வண்டுகளொலிக்கும் ஓசையை, பொருகு சிறுநாண் ஒலிஎன்று அறிவுஅழிந்து பேதுறும் இப்பேதைக்கு என்ஆம் — அவன்செய்த பெருகியசிறிய குணத்தொனியென்று அறிவுகெட்டுமயங்கு மிப்பேதைப்பருவமுடைய இப்பெண்ணிற்கு நீகூறுவதுயாதாய் முடியும் (பயன்படாதென்றபடி)

குழைத்தஇறந்தகாலப்பெயரெச்சம் குழைபகுதி. தசும்பினையிரவி யென்றுகருதியது மயக்கவணி. (௨௦)

[கட்டளைக்கலித்துறை]

முத்திக்குவேட்டவர்மோட்டு டற்பாரமுடைத்தலையோ
டத்திக்குஞ்சாம்பற்குமோம்பினராலிவையன்றியப்பால்
சித்திப்பதுமற்றிலைபோலுங்காசிச்சிவபெருமான்
பத்திக்குக்கேவலமேபலமாசப்பலிப்பதுவே.

இ - ள். முத்திக்கு வேட்டவர்மோடு உடல்பாரம்— மோட்சத்தைவிரும்பிப் பத்திசெய்வோர்கள் பெரியசரீரச்சுமையை, முடைதலைஓடு அத்திக்கு உம்சாம்பற்குஉம் ஓம்பினர் — முடைநாற்றத்தையுடைய தலையோட்டிற்கும் எலும்பினுக்குஞ் சாம்பலுக்குமே பாதுகாத்தனர், இவைஅன்றி அப்பால்சித்திப்பது வேறுஇல்லைபோலும்—இவையல்லாமலப்பாற்கைகூடுவது வேறொன்றுமில்லைபோலும் (ஆதலால்) காசிசிவபெருமான் பத்திக்கு கேவலம் ஏபலம் ஆகபலித்தது— காசியிலெழுந்தருளிய சிவபெருமானிடத்துவைத்த நேயத்துக்கு இந்தக்கேவலகாரியமே யவர்களுக்குப் பயனாகக்கைகூடியது.

மோட்சத்தைவிரும்பினவர்கள் சாரூப்பிய பதமுத்தியைப்பெறுதலால் முடைத்தலையோடத்திக்குஞ் சாம்பற்குமோம்பினரென்றார், கேவலம்சிவசாரூப்பியமுத்தி. சிறுமை, இதுபழிப்பதுபோலப் புகழ்த்திறம் புனைந்துகூறுதலால் இலேசவணி. இதனைவியாஜஸ்துதியலங்காரமெனவுங்கூறுவர்: பிரிநிலையேகாரங்கள் தொகுத்தல். (௨௧)

[கலிநிலைத்துறை]

தலைவியினது ஆற்றாமைகூறிவரைவுகடாதல்.

பல்வேறுருவாய்நின்றருள்காசிப்பதியுள்ளீர்
வில்வேறில்லைபூவலதம்பும்வேறில்லை
அல்வேறல்லாப்பல்குழலாளையலைக்கின்றான்
சொல்வேறென்னேபாருமனங்கன்றொழிற்றேனே.

இ - ள். பல்வேறு உருஆய்நின்று அருள்காசி பதிஉள்ளீர்— பலவகைப்பட்ட வெவ்வேறுவடிவாய்நின்றருளிய காசியென்னுந் திருப்பதியிலுள்ளீர், வில் ஓ வேறுஇல்லை—வில்லோகரும்பன்றிவேறில்லை, அம்புஉம்ஓ பூஅல்லது வேறுஇல்லை—அம்புமோமலரன்றிவேறில்லை, அல்வேறு அல்லாதபல்குழலாளை அலைக்கின்றான்—இருளேயன்றி வேறல்லாத பலவகை முடிப்புள்ளகூந்தலையுடைய என்தலைவியை வருத்துகின்றான், சொல்வேறுஎன்—யான் சொ

லவதுமேமென்னை இராந்தது, அனாத [illegible] சொற்பொருள் [illegible]
போபாதருளும

பிரிவிலேகாரங்கள் தொகுத்தல் [illegible] முடி [illegible] சுரு
ள, குழல, பனிசைசை முடி உச்சியிலமயினை [illegible] கொணை [illegible]
முடித்தல, சுருளபினனைசெருகல [illegible] முடித்தல, [illegible] சைபினை
னிவிடுதல. அனயகன [illegible] சரீர [illegible]
பபொருளகொளக பலகு [illegible] பெணகளபலவை [illegible]
மெனபபொருளகொளள [illegible] (௩௨)

[illegible]

[illegible] முடி
யாமென்ன [illegible]
[illegible]
[illegible]

இ-ள [illegible]
வாதிகளமுனனேமறைநதசோதி [illegible] செனறு
டும காசிபிரான— காபோகநகை [illegible] முனனேனாமென [illegible]
அடைநதருளும காசியிலெழுநதருளி [illegible]
ஊன்என்றுவிட்டெழிநதாகளிப [illegible]
நததெனறு அதனைவெறுநதுக [illegible] உட [illegible]
பதேன் எனறு அடைநதவாகரு [illegible] செவிட
டாதபேரினபத தேனெனறனடைநத [illegible] கிடை பது
கொடி பவிடமே (வேறு [illegible])

சிவபிரானே சரீரமென [illegible] அத
னைகைவிட் [illegible] யடைந்த [illegible]
விட்டு அசசரீரதகைக கெவிட [illegible] அதனை விருமபு
வோாககுப பினபுசிதநிப [illegible] பொருள
கொளளுதலுமொன்று [illegible] சிவபோத [illegible]
லால தனனை யிபுநதவா [illegible]
உவடடாத [illegible] பிரானைபடைநத
[illegible] சிவசாருபியங கிடைதத [illegible] கிடைபபத [illegible]
[illegible] பேரினபததேனை யடை [illegible] அது [illegible]
[illegible] (௩௩)

[illegible]
[illegible] குறையபபித [illegible]

[illegible] கொடுததேயமுதுண்ட [illegible]
ப [illegible] பஞ்சணையேவிவள— [illegible] முதுணடா [illegible]
நாயிட [illegible] ஒருவனமுக [illegible] துரகததை யிட
டாவிட [illegible] கிடைமாகநசக்க ததோ

இ - ள். ஒவ்வொருநாள் இடப்பக்கத்தைக் [illegible] நாளினும் நடிக்கும் தந்திரத்தைவிட்டு—பிரமனது நாவினை யிடமாகக்கொண்டு அவனது முகத்திலும் நான்குகைகளிலும் நன்றாய்ச்செய்யும் வேதமாகிய குதிரையைவிட்டு, ஆ இடம் கொண்டு அருள்காசிவீதிக்கு ஆடல்செய்கின்ற ஆனந்தக் கூத்தரே—இடப்பூங்கொடியைக்கொண்டருள் நிறைந்தகாசியின் திருவீதியி லாடல்செய்தருளு மானந்தத்திருக்கூத்துடையவிறைவரே, [illegible] கொடுத்த அமுது உண்ட அப்பேர்க்கு ஒழிந்து திரிகின்றனீர்—கொடிய விஷத்தை உமக்குக்கொடுத்து அமுதினைத்தாமுண்ட [illegible] சனாரிக்கு நேர்வரீ, பாவிமே [illegible] மேல், இவ்வளவா [illegible] அமுது [illegible]—இந்நிலையினது பவளம் போன்றவாயிலுள்ள [illegible] (நஞ்சுண்டமைக்கு) சுவைவருமோ [illegible]

[illegible] முகங்கா நானேகினு நடிக்குந்திர [illegible] கச்சென்பர் [illegible] வரநாளையருமை [illegible] விடங்கொ [illegible] அமுது [illegible] தேவருக் களித்த [illegible] அமுதுகரவி [illegible] பன்னதலைக்கு நீ புலப்ப [illegible] பழுதுண்டோ வென்பது [illegible] பஞ்சலை [illegible] சமைச்சமத்தை [illegible] ஆணையென்பபிரித்து நந்துசயன மென்பபொருள் கொள். இ வடபஞ்சு செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி இவையைந்தாலமைந்த மெத்தையென்க் கொள்ளலு மொன்று (௫௯)

[பேரின்ப வண்ண]

ஆநந்தவல்லிவிடங்காநந்தகானத்தே
ஆநந்தக்கூத்தாடருட்கடலே ஆநந்தம்
கொள்ளத்தினைத்தானுங்கூட்டாதேநீ [illegible]
வெள்ளத்திலோசப்பீ

இ - ள். ஆநந்தவல்லிவிடங்க (அடியவர்களுக்குப்) பேரின்பத்தைக்கொடுக்கும் பூங்கொடிபோன்ற உமாதேவியாரோடு ஆநந்தகானத்து — காசியாகிய ஆநந்தகானத்தில் ஆநந்தக்கூத்தாடு அருள்கடலே - திருநடனஞ்செய்தருளுங்கருணைக்கடலே, ஆநந்தங்கொள்ளத்தினைத்தனையும் (உனக்குப்) பேரின்பமீதூர இடையறாது முழுகுங்கள் கூட்டாதே — உங்கு [illegible]கூட்டாதாயில், இப்பிறவிவெள்ளத்து இளைத்து ஆழ்வீ ஓசைப்பிறவிக்கடலில் மொத்துண்டு இளைத்து முழுகாநிற்பீர்

கானம் என்பது சம்தொகுதினை யுருபேற்றது ஆநந்தகானகம் இவ்வாறுமை வடசொல்லாதலால் வருமொழிமுதல் வல்லெழுத்திபல்பாயிற்று "இடையுரிவடசொலின்" என்றசூத்திரத்தால், ஆரும் வழக்கில்வந்த முன்னிலைப்பன்மை யேவல்வினைமுற்று செய்புளில் ஆடிமின் என்வரும் (௬௰)

கலி [illegible]

வெ [illegible]

வீரமெனப்படுவின் [illegible]
கோரமெனப்படு [illegible]
[illegible]மெனப்பி [illegible]
வாரமென் [illegible]

இ - ள் [illegible] ரமெ [illegible] மையம் [illegible] பிலவாழு மெனகிறை [illegible] படுவது [illegible] ணம — வீரமென [illegible] சொல்லப்படுவது [illegible] ணமாயுள் ளது, இவாசகுர [illegible] த்திரத்தறும [illegible] கோரம்எனப்படுவது [illegible] என்பதை [illegible] பழ)

தலைவ [illegible] வினைய [illegible] மபுரிபுங்காறும [illegible] வீரங்க [illegible] குணமெனறுள [illegible]

[illegible]

[illegible]

முத்துநிறைத [illegible]
பத்துநிறைத [illegible] ருநிக்கிலேபோலு [illegible]
ஒத்துநிறை [illegible] மயுங
கொத்துநிறைக்கதொழி [illegible]

இ - ள் [illegible] முத்துநிறைசசத [illegible] துவரிசையாகவுள்ள [illegible] ருபட்ட பல [illegible] சொத்துநிறைந்த [illegible] — அருப [illegible] வரிசை யாகவுடைய [illegible] சாதியிலெழுந்தருளிய [illegible] முத்துநி றைந்த குறுநகையீர் ஒருவர் [illegible] சிறியபறகளையுடைய [illegible] கழைகைப்பசுதும் [illegible] தான் — [illegible] ன்தனது [illegible] இனி தொடுக்கில் பாவைக்கு ஒத்திக்கில [illegible] இனித்தொடுப்பாருள லபாவைபோனா [illegible] எனதலைவிக்கு [illegible] மென்று செனறு [illegible]

[illegible] பாவைபொருளு [illegible] குறுநகையீர் ஒரு வா கூடிப்பிரிந்த [illegible] கைகிலைத்தொ டா [illegible] முள்ளிக்கலை [illegible]

ளைத்தழுவி நிற்றலால் "ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே" என்றவுபலக்கணம். (அஎ)

[கட்டளைக்கலித்துறை]

கூற்றடிக்கஞ்சி முறையோவெனக்குலநான்மறையும்
போற்றடிக்கஞ்சம்புகலடைந்தேமுனைப்போலவைத்தால்
சேற்றடிக்கஞ்சவயற்காசிநாதசெருப்படிக்கும்
மாற்றடிக்குந்தொண்டரவில்லடிக்கும்புகன்மற்றிலையே.

இ - ள். சேறு அடிகஞ்சம் வயல் காசிநாத—சேற்றினடியில் தாமரைகள்மலரும் வயல் சூழ்ந்த காசியிலெழுந்தருளிய விறைவரே, கூற்று அடிக்கு அஞ்சி முறையோ என்ன—இயமனடிக்கு மடிக்கஞ்சி முறையோவென்று, குலநான்மறையும் போற்று அடி கஞ்சம் புகல் அடைந்தேம்—ஒருகூட்டமாகியநான்குவேதங்களுந் துதிக்கு முமது திருவடித்தாமரையைச் சரணடைந்தோம், உன்னைபோல வைத்தால்—உம்மைபோல எம்மையும் தேவரீர்வைத்தால், தொண்டர் செருப்புஅடிக்கும் மாறுஅடிக்கும் வில்அடிக்கும் புகல்மற்றில்லை—கண்ணப்பநாயனார் தொடுத்த செருப்படிக்கும் பாண்டியனடித்த பிரம்படிக்கும் அருச்சுநனடித்தவிற் கழுந்தினடிக்கும்சரணாக வேண்டுமேயன்றி வேறில்லை.

உம்மைப்போல வைத்தால் என்றது சிவசாருப்பியத்தை. செருப்படியென்றது செருப்பதொடுத்த கால். அடிநோக்கிக் கவர்பொருள்படச் செருப்படியென்றார். இயமனொருவனடிக்கும் அடிக்கஞ்சித் தேவரீரைச் சரணடைந்தேம் சரணடைந்தமைக்குக் கண்ணப்பநாயனார்முதலிய மூவர்களடிவருமேயல்லாமல் வேறுபயனில்லையென்பதுகருத்து. இதுவும்பழிப்பதுபோலப் புகழ்ந்ததிறம் புனைந்துகூறுதலால் வேசவணி கண்ணப்பநாயனார் முறுகிய அன்பினையுணர்தற்குச் சிவபெருமானார் ஒருதிருக்கண்ணில் நீர்வரக்காட்டினார். அதுமருந்துவகையாலொழியாமல் தமதுகண்ணிடந்து வைக்கமாறியது, மற்றொருதிருக்கண்ணிலும் நீர்வரக்காட்டியருள முன்னையது கண்டவாறாதலால் மற்றொருகண்ணையுமிடந்துவைக்கத் தமதுசெருப்படியை யத்திருக்கண்ணிலூன்றிக் கண்ணிடந்தப்பினாரதலால் செருப்படிக்குமெனவும் வந்திக்களந்துவிட்ட கரையைக் கூலியாளாகவந்ததாம் அடைக்காமலிருத்தலைப்பாண்டியனறிந்து பிரம்பாலடித்தமையால்மாற்றடிக்குமென்றுங்கூறினார்.

[கட்டளைக்கலிப்பா]

இல்லையென்பதிலையையார்மருங்கிலே—யவ்வறங்களுமுண்டோர்மருங்கிலே
கொல்லுகின்றதெழுதருங்கூற்றமே—கூறுமாற்றமெழுதருங்கூற்றமே [மே
வில்லுமேருநிகோணும்பொன்னுகமே—விடுகணைக்குண்டு நாணும்பொன்னுகை
மல்லன்மார்பின்மணி முத்தமென்பதே—வாசமையர்க்கவிழுத்தமென்பதே

இ - ள். ஐயர்க்கு—இறைவர்க்கு, இல்லைஇல்லைஎன்பது ஓர்மருங்குஇல்லே—இல்லைஇல்லையென்பதை யாரயுமிடையையுடைய இறைவியாராலே, அறங்கள்உம் ஓர்மருங்கில்உண்டு—முப்பத்திரண்டு தருமங்களு மொருபாகத்திலேயுண்டு, கொல்லுகின்றது எழுதரும்கூற்றமே—கொல்லுதற்றொழில்மா

ரக்கண்டேயருயிர்கவர எழுந்தஇயமனையே, கூறும்மாறாமல் கூழ்சருமகூற்றம் ஏ—அவர்கூறியருளுந் திருவார்த்தையெழுதற்கரியவேதமாம், வில்லும்பொன் னாகமும் ஏ—வில்லும்மேருமலையே, ஏற்றிடும்நாணும் பொன்னாகமும் ஏ—ஏற்றும் நாணும் அழகியஆதிசேடனே, விடுசெணைகருநாளும் பொன் ஆகம் உண்டு—வாய்ந்த திருமாலாகிய அம்புக்கு நாணைக்கூறுமிலக்குமிவசிக்கு மார்பமுண்டு, மல்லமாபுஇல மணிமுத்தம் என்பது ஏ -வளமையையுடைய மாபிலணியுமுத்துடமெலும்டே, வாசம் அவிமுத்தம் என்பது ஏ—வாசஞ்செய்யுமிடம்காசியென்பதே.

இடையிலலையென்று பெண்களுக்குக்கூறுவழக்காதலால்இல்லையென்பதிலே யோமருங்கிலே யென்றார் மருங்குஎன்னுமொழிதொகைநிலைக் களத்துப்பிறந்த அன்மொழித்தொகைநிலைத்தொடர் இல்லைஎன்பொருளில்வந்தஇடைச்சொல்லுருபு, செய்யுளாதலால் என்பது மாறிவந்தது. இறைவிருப்பத்திரமாகிதாமமும் ஆன்மகோடிகள்பொருட்டிவளாதலால் எவ்வாறங்களுமுண்டோர் மருங்கிலேயென்றார். (௮௯)

கலிவிருத்தம்.

எனைப்பணிக்கும்பணியென்றிராதப்பா
தென்பணிக்கும்பணிநக்குமேர்சென்று
என்பணிக்கும்பணியாயிருக்குமோ
என்பணிக்குமின்பாயகிலேசர்க்கே

இ - ள். பணிக்குஉம் இன்புறும அகிலேசாக்கு—சப்பாபரணத்திற்கு மகிழ்கூரும்விசுவநாதருக்கு, என்ட அணிக்குஉம் பணி ஆயிருந்ததுபொன்—(அச்சர்ப்பாபரணம்) எலும்பாகிய ஆபரணத்திற்கு மோராபரணமாயிருந்ததை பாராயாது, என்பணிக்கு உம்பணிஎன்ப தரந்போது— அடியேன்பணிவிடைக்கும் அருளாயென்று நான்குறையிராதகாலத்தில, எனை—யாது, பணிமேக்கு திக்குபணிக்கும் என்றார—(யாவரும்) வணங்கும்உயர்ந்த இடமாகிய சாரூப்பியத்தையருள்வோ மென்றருளினார.

பணிதல்அருள்செய்தல் பணியென்பதில்முன்னது பணிக்கப்படுவது என்னும்பொருள்மேலநிற்றலால் செயப்படுபொருளுணர்த்தும் இகரவிகுதியொடுபுணர்ந்து குன்றியதொழிற்பெயர் பின்னது ஆய்விகுதி புணர்ந்துகுன்றிய முன்னிலையேவ லொருமைவினைமுற்று திக்குஇடம் மேக்குஉயர்ச்சி சாரூப்பியத்தை யருளுவாராயில் எலும்பாபரணமுஞ் சர்ப்பாபரணமும் வாய்க்குமேயென்பார் என்பணிக்கும பணியாயிருக்கதோவென்னென்றார். ஓவொன்றிமறைத் தன்மையொருமை வினைமுற்றெச்சம். (௯௦)

[நேரிசைவெண்பா]

கேயூரமுரகமிளர்தோளகிலேசா
மாயூரமூருமொருமைந்தற்குத்—தீயூரும்
அவ்வேலையீந்தாயடித்தொழும்புசெய்தொழுகும்
இவ்வேலையீந்தாலெமக்கு.

இ - ள் கேயூரம்உரக—வாகுவலயமாகச் சர்ப்பத்தைத், மிளிர்தோள்

அகிலேசர்—விளங்குந்தோளையுடைய பசுவநாதர், மாயூரம ஊரும் ஒருமைக் தற்கு—மயிலூரிலிருக்கின்ற பெருமை தங்கிய இளையபிள்ளையார்க்கு, ஊரும் அவேலோந்தர — யிப்பரங்க அந்தரங்கப் பணிவிடையைத் தந்தருளினர், அடிதொழும்புசெய்து ஒழுகும்இவேலை எமக்கருளந்தார்—தமது திருவடிக்குத் தொண்டுசெய்து நடக்குமிந்தவேலையை யெமக்குந்தந்தருளினர்

அடித்தொழும்பு என்றதற்குச் சிறுதொண்டு எனப்பொருள்கொள்ளுதலுமொன்று ஊரவென்றகுறிப்பால பாம்புளைனப்பொருள்கொண்டாம். (௬௧)

[அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்]

தலைவன் சிறைப்புறமாகப்பாங்கி கூறல்.

குருகைவிடுத்தாளெனக்குப்பேசகூறாய்சுகத்தைவிடுத்தாளென்
றருகுவளர்ஞ்சுகமேசென்றறையாய்நிறைநீர்தெரிந்துபால்
பருகுமனமேயனம்விடுத்தபடி சென்றுரையாயடிவருளத
திருகுபசும்பொன்மதிற்காசியுடையார்வரித்தோலுடையார்க்கே.

இ - ள். படிவாழுலகு — நலவினிசையத்தையும், உருகுபசும்பொன் மதிற்காசிஉடையார் வரித்தோலுடையார்க்கு—உருகாநின்ற பசியபொன்னாலமைந்த மதில்சூழ்ந்த காசிப்பதியையுடையாரும் வரியமைந்த புலித்தோலையாடையாகவுடையவருமாகியவிசுவநாதருக்கு, குருகைவிடுத்தாளென கூறாய்—நாரையேவளையலைவிடுத்தாளென்று சொல்லாய், அருகுவளரும்சுகமேசென்று சுகத்தைவிடுத்தாளென்று அறையாய — பக்கத்திற் பஞ்சரத்தில் வளரும்கிளியே நீபோய்என் தலைவிசுகத்தை விடுத்தனளென்றுகூறாய், நிறைநீர்தெரிந்துபால் பருகும் அன்னமேஅனம்விடுத்தபடி சென்றுஉரையாய—கலந்துநிறைந்த நீரைப்பிரித்துப் பாலைப்பருகும் அன்னமே உண்டியைவிடுத்த வகையைச் சென்றுகூறாய் (௬௨)

[இதுமது

உடுத்தகலையுமேகலையுமொழுகும்பணியும்விரும்பணியும்
தொடுத்தவளையுங்கைவளையுந்துறந்தாளாவிதுறந்தாலும்
அடுத்ததுமதுபரந்தாமமதனாலிதழ்பபரந்தாமம்
விடுத்துவிடுவாளலளெனப்போயவிளம்பீர்காசிவேதியர்க்கே.

இ - ள் உடுத்தகலை உம் மேகலை உம் ஒழுகுமபணி உம விரும்பு அணி உம்—உடுத்த ஆடையையும் மேகலாபரணத்தையும் நடக்குந்தொழிலையும் விரும்பும் ஆபரணத்தையும், தொடுத்தவளை உம் கைவளையும் துறந்தாள்—தொடுத்தகங்கணத்தையும் கைவளையலையுமவிட்டவென்றலைவி, ஆவி துறந்தாலும் உமதுபரந்தாமம் அடுத்தது—பிராணனைக் கைவிட்டாலும் உமதுசாரூப்பியம் வரும், அதனால் இதழ்பரந்தாமம் விடுத்துவிடுவாள் அல்லள் எனப்போய் காசிவேதியர்க்கு விளம்பீர—அதனால் மேலாகிய சொன்மாலையை விட்டுவிடுவாளல்லளென்று நீங்கள்சென்று காசிப்பதியிலெழுந்தருளிய அந்தணர்க்குச்சொல்லுவீர

துறந்தாலும் எனபதன் உம்மை ஐயப்பொருட்டு துணிவுபற்றி யெதிர்காலத்தாற்கூறாது அடுத்ததென இறந்தகாலத்தாற்கூறியது காலவழுவமைதி

விளம்பி என்றது நான்முதலியவைகளைச் சொல்லி அயன் முதலிய தேவர்களுக்கு அந்தணராதலால் வேதியர் என்றார். (௬௩)

[நேரிசைவெண்பா]

வேதத்துரகா விரகா விசேசா
பாதத்துரகப் பரிபுரத்தா—நாதரிவர்
சேவடிக்கண்டார் நிரம்பிழைத்துத் தென்புலத்தார்
காவடி கண்டாரோ குலைந்து

இ-ள் வேதம் துரகா—வேதங்களைக் குதிரையாகவுடையவரும், விரகா—பேரறிவுடையவரும், விசேசா—விசேடரும், பாதத்து உரகம் பரிபுரத்தா—திருவடியில் பாம்பாகிய சிலம்பினையுடையவரும், நாதர் இவர்—இறைவருமாகிய இவரது, சேவடிக்கு அண்டார் ஏ—செவ்விய திருவடி நிழலைச் சரணமாகவடையாதவரோ, நிரம்பிழைத்துக் குலைந்து தென்புலத்தார் கோ அடி கண்டார் ஏ—தமது வலிமை தப்பி நடுங்கித் தென்புலத்தார்க்கு அரசனாகிய இயமனடிக்கும் அடியைக் கண்டவரேயாவர்.

சாவக்கியவெண்பா விரகா என்றார். (௬௪)

[கட்டளைக்கலித்துறை.]

தலைவனகிரைப்புறமாய்ப் பாங்கியையாள போன்றுகூறல

குலைவளைக்கும் பழுக்காய் முழுத்தாறு கொழுங்கமுகின்
தலைவளைக்கும் பொழிற்காசிப்பிரான் தடங்கோட்டுப் பைம்பொன்
மலைவளைக்கும் புயத்தாண்மையென்னு தெவ்வளைந்து கழைச்
சிலைவளைத்துத் தன்படைவீடமர்க்களஞ் செய்திடினே.

இ-ள் தெவ்வளைந்து கழைச்சிலைவளைத்துத் தன்படைவீடு அமர்க்களம் செய்திடின்—பகைவனாகிய மன்மதன் சூழ்ந்து கரும்பு வில்லை வளைத்து இறைவன்படைவீடாகிய காசியைப் போர்க்களமாகச் செய்தால், குலைவளைக்கும் பழுக்காய் முழுத்தாறுகொழுங்கமுகின் தலைவளைக்கும் பொழில் காசிப்பிரான்—குலைதள்ளிய பழுக்காய் நிறைந்த முழுத்தாறுகள் கொழுவிய கமுகினது தலை வளையச்செய்யும் காசியி லெழுந்தருளிய இறைவரது, தடங்கோடு பைம்பொன் மலைவளைக்கும் புயத்து ஆண்மை என் ஆம்—பெரிய சிகரத்தையுடைய பசிய பொன்மலையை வில்லாகவளைக்கும் புயத்தினது ஆண்மை யென்ன பயன்படும்.

தெவ் பணைபாகுபெயராய்ப் பகைவர்மேல் நின்றது. (௬௫)

[சந்தத்தாழிசை]

வரைவு கடாதல்

ஆடமருங்கினின மருங்கிலாதவள் குடியிருக்கவு முடியிலவே
நிவளொருத்தியை யிருத்தி வைத்துமதி மோகமோசினிரூபமாய்
ஈடமிடுங்கிவள் மேலும்வைத்துளநயந் தொரபிள்ளை பயந்தநீர்
நங்குலத் திருவை மருவினின்றுபிறாநாவலைக்கவிட மாகுமோ
குடமுடைந்து தெனவானினங்கணமடி மடைதிறந்து பொழிபாலொடுங்
கொழுமடற் பொதியவிழ்ந்துகைதைசொரி சோறுமிட்டணிதிரைகைகையால்

கடல்வயிற்றினைநிரப்புகின்றசுரகங்கைகுண்டகழியாநெடுங்
ககனநீள்குடுமிமதில்களேழுடையகாசிமேவுமங்கேலசரோ.

இ-ள். ஆன் இனங்கள் குடம் உடைந்தது என்னமடி மடைதிறந்து பொழி பாலொடு உம்—பசுவின்கூட்டங்கள் குடமுடைந்ததுபோலமடியாகிய மடையைத்திறந்துசொரியும்பாலோடும், கைதைசொழுமடல் பொதி அவிழ்ந்துசொரிசோறும் அணிதிணைகையால்இட்டு—தாழையினது கொழுவியமடலாகியபொதிவாய்விரிந்துகொட்டுஞ் சோற்றையும் தனது அழகிய அலையாகியகையால்படைத்து, கடல்வயிற்றினை நிரப்புகின்ற சுரகங்கைகுண்டு அகழியாக—சமுத்திரத்தின்வயிற்றினை நிரப்பாநின்ற தெய்வகங்கையேயாழ்ந்த வகழியாக, நெடுங்ககனநீள்குடுமிமதில்கள் ஏழுடையகாசிமேவும்அங்கேலசரோ—நெடிய விண்ணுலகுமட்டுநீண்ட சிகரத்தைவாய்ந்த ஏழுமதில்களையுடைய காசியிலெழுந்தருளியவிசுவேசரோ, மருங்குஇல்லாதவள் இடமருங்குஇன்இல் குடி இருக்க உம்—இடையில்லாத இறைவியார் இடப்பாகத்திற்பிரியாதுகுடியிருக்கவும், முடிஇல் இவள்வேறுஒருத்தியை இருத்திவைத்ததுஉம்—சடாமுடியில் இவ்விறைவியாரையன்றிக கங்காதேவியாகிய வேறொருபெண்ணைநிலையாகவைத்தும், அதிமோகம் மோகினிரூபம் ஆய் இங்குநடம் இடும் இவள்மேலும உளம் வைத்துநயந்து ஓர்பிள்ளை பயந்தநீர் — அதிக மோகத்தோடு மோகினிரூபம் ஆய்நடிக்கு மித்திருமாலாகிய பெண்மேலும் மனம்வைத்துவிரும்பியையனென்னுமொருபிள்ளையைப்பெற்றநீர், நயகுலம் திருவைமருவின் இன்று பிறர் நாவளைக்க இடம் ஆகுமோ—நமது குலத்திற்றோன்றிய இலக்குமியையொத்த என்தலைவியை வரைந்தாலிப்போது அயலார்பழிதூற்ற இடமாகுமா ஆகாது என்றபடி)

சிவபிரானுணைறுனையால மோகினிவடிவங்கொண்டுபின்சென்ற திருமால்தேவதாருவனமுனிவா மனைவியைக கெடுத்து வந்ததிருமால் அப்பெருமானை பிட்சாடண திருவுருவைக்கண்டு ஐயனாரைப்பெற்றமையால் நயந்தொர்பிள்ளை பயந்தநீர் என்றார். அடங்காக் காமமுடையாயென்பாள் இவவாறுகூறினாள்.()

மடக்கு, பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இரங்கல்

சரியோடொழுகுங்கரவளையே—சரக்கோடொழுகுங்கரவளையே
தையற்கனயேதீவிடமே—தவழுங்கனமேதீவிடமே
சொரிவதடங்காக்கண்ணீரோ—துளிக்குர்தடங்காக்கண்ணீரோ
தூயரோவதிதனந்தினமே—சூரற்கழுத்தினந்தினமே
கருகிப்புலர்ந்தநாவாயே—கரைவந்திழியுநாவாயே,
கண்களுறங்காகழுநீரோ—கடலேகழியேகழுநீரோ
அரிவையிவளுக்குருகீரோ—அனத்தோடுறங்குங்குருகீரோ
அளியாரிதழிவநத்தாரோ—அருளாநந்தவநத்தாரோ.

இ-ள். சரக்கு ஓடு ஒழுகுமகரவளையே—சரக்கொடு கடலிற்செல்லும படவே, கரம்வளைசரி ஓடு ஒழுகும் — கைவளையானது காற்சரியோடுகெழலா

நிற்கும், தவழும்கனம் ஏ திவு இடம் ஏ—தவழாநின்றமேகமே திவுகளே, நையற்கு அன்னம் நீவிடம் ஏ—என்தலைவிக்கு உண்டிகொடியாநஞ்சே, தடகாதுளிக்கும் கள் நீர் ஏ—பெரிய இளஞ்சோலை துளிக்கும்மதுவே, கண்சொரிவது அடங்காதநீரோ—கண்கள்சொரிவதுஅடங்காதநீர்ப்பெருக்கையே, சூரல்கழுத்தின்நந்துஇனம்ஏ—பிரம்புபோலத்திரண்டகழுத்தினையுடையசங்குகளே, நம்தினம் துயர்வதிதலே—நமதுநாளெல்லாந் துன்பத்தோடிருத்தலே, கரைவந்து இழியும் நாவாய் ஏ—துறையில்வந்திறங்குமரக்கலங்களே, நாவாய்கருகிபுலர்ந்த—நாவும் வாயும் கருகிப்புலர்ந்தன, கடலேகழியேகழுநீர்ஏ—கடலேகழியேசெங்கழுநீரே, கண்கள்உறங்காகழுநீர்—கண்கள் தனத்தைக் கழுவுநீரோடு நித்திரைசெய்யா, அனத்துஓடுஉறங்கும் குருகீரோ—அன்னத்தோடு துயில் கூரும்நாரைகளே, அரிவை இவளுக்கு உருகீர்—என்தலைவியாகிய இவளுக்குமனமுருகுவீர், அருள் ஆநந்தவநத்தார்—கருணையையுடைய காசிப்பதியிலுள்ள இறைவர், இதழிவநம் தார்அளித்தார — கொன்றைமலரானமைந்த அழகிய மாலையைத்தந்தருளார்.

பொருண்மேற் பிரிந்த தலைமகன் வருதலைநோக்கி நெய்தனிலத்திலிருந்து இரங்குதலால் நெய்தனிலத்துள்ள பொருள்களைக் கூறினாள் சரியாவது பொன்னாற்பின்னிய வடம் காற்பெருவிரலின் மோதிரத்தோடும் சிலம்போடு மிடையிற்பூட்டுளது. சரியெனினும் பரியகமெனினுமொக்கும். கரவிளையாடவிலொருவகை.

[எழுசீர்க் கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம.]

வனத்தினுமொர்பொற்பொதுமுகப்பினுநினைப்பவர்மனத்தினுநடித்தருள் செய்வார், சினக்கயல்விழிக்கடை கருக்கொள்கருணைக்கொடி திளைத்தமருமத் தர்தமதிடமாம், நனைக்கமல நெக்குடைதரக்குடைதுறைச்சுர நதிக்கரையின் முட்டைகொலெனுக், கனத்தபருமுத்தினை யணைத்தனமினத்தொடுகளிக்குமவிமுத்தநகர்கருதீரோ.

இ-ள். வனத்தின் உம் ஓர்பொன்பொதுமுகப்பின் உம் நினைப்பவர்மனத்தின்உம்நடித்து அருள்செய்வார்—ஆநந்தவனமாகிய காசியிலும் ஒப்பில்லாத பொன்னம்பலத்திலும்தம்மைநினைக்கும்அடியவரிதயத்திலுமாநந்தநடனஞ்செய்பவரும், சினம்கயல்விழிகடை கருணை கருகொள்கொடி திளைத்தமருமத்தர் தமதுஇடம்ஆம்—கோபத்தையுடையகயல்போன்றகடைக்கண்களில்கிருபையைச்சூற்கொண்ட பூங்கொடிபோன்ற விசாலாட்சியார்இன்பநுகருந்திருமார்பையுடையவருமாகிய இறைவரது இடமாகிய, கமல நனை நெக்குஉடைதரகுடைதுறைசுரநதிகரையில்—தாமரையரும்புகள்நெகிழ வண்டுகள் மூக்காற்கிளறும்துறையையுடையகங்கைநதியின் கரையில், முட்டைகொல் என்னுகனத்தபருமுத்தினைஅணைத்து அன்னம் இனத்தொடுகளிக்கும் அவிமுத்தநகர் கருதீர்—முட்டையென்றுகனத்த பருத்தமுத்தத்தையணைத்து அன்னமானது தமது இனத்தோடுகளிக்குங்காசித் திருநகரையென்றுஞ் சிந்திப்பீர் (கருதியதுவாய்க்கு மென்றபடி.)

இதுவும் மயகவணி (கூஅ)

இதுவுமது.

[தலைவன் சிறைப்புறமாகப்பாங்கிகூறல்.]

கருமுகில்வெளுப்பவறவிருளுமளகத்தினிவள்கதிர்முலைமுகட்டணையவணைமீதே, வருகிலரெனிற்செவியிலொருமொழிசொலச்சமையம் வருகெனவழைக்கிலுடன்வருவார்காண், சுரநதிசுருட்டும் விரிதிரைகளொரு முத்திமகடுணைமுலைதிளைக்கு மவர்மணநாளின், முரசொடுமுழக்கு குடமுழவெனவிரைக்கவளைமுரலுமவிமுத்தநகருடையாரே.

இ - ள் கருமுகில்வெளுப்ப அறஇருளும அளகத்தின் இவள் கதிர்முலைமுகடு அணைய— சூற்கொண்ட மேகம் நாணி வெண்ணிறமடைய மிகவுமிருண்ட கூந்தலையுடைய இத்தலைவியின் விளக்கம் வாய்ந்த முலைச்சிகரத்தைச் சேர, அணைமீது எவருகிலா என்னில் செவிஇல் ஒருமொழிசொல்அசமையம்வருகஎன்ன அழைக்கில—சயனத்தின்மேலே வாராராயில்ஒருமொழியைக்கூறுமச்சமையத்தில் வரக்கடவீரென்று அழைத்தால், சுரநதிசுருட்டும் விரிதிரைகள்— கங்காநதியின் மடங்கிவரும் பரந்த அலைகள், ஒருமுத்திமகள் துணைமுலை திளைக்குமவா மணநாளில் — ஒருமுத்தியாகிய பெண்ணினது இரணடுதனங்களினின்பத்தை நுகரும் அடியவா கல்யாணநாளில், முரசுஒடு முழககு குடம முழவுஎன்ன இரைக்க — முரசத்தோடு ஒலிக்கின்ற குடமுழாவைப்போலஒலிக்க, வளைமுரலும் அவிமுத்தநகர் உடையார்உடன்வருவார்—சங்குகள் ஒலிக்கும் காசித்திருநகரையுடைய விறைவர்உடனே வருவார் (போய்த்தோழி கூறாய் என்றபடி)

அடியவர்சாரூப்பிய முத்திப்பெண்ணைப் புணரும் கல்யாண நாளிலொலிக்கும்வாச்சியம போல் அலைகளொலிக்குமெனக்கொள்க. (௯௯)

[நேரிசையாசிரியப்பா]

உடைதிரைக்கங்கைநெடுநதித்துறையின் — வடமபுரியென்னவாங்கிடம்புரிதிங்கள், வெள்ளிவீழன்னவிரிநிலாப்பரப்பும்—பொன்வீழன்னபுரிசடைக்கடவுள், முடவுப்படுததகடவுட்பைம்பூண்—கறங்கெனச்சுழலுங்கால்விசைக்காறுரு,தமிழ்தருகுருதிதிரடெறித்தாங்குத் -திசைதொறுந்தெறித்த திரண்மணிக்குலங்கள், வானேறுகடுபபவெரி நிறுருககலும் — கையெடுத்தெண்டிசைக்களிறும்வீறிடத்—தெய்வ நாடகஞ்செய்வதிககூத்தன் —வரைபகப்பாயுமவாநரககுழாத்தொரு—கருமுகமந்தி காலவிசைத்தெழுந்து—பழுக்காய்க்கமுகின் விழுக்குலையறித்துப், படாசருதோற்றஞ் சுடரோன்செம்மல்— தசமுகத்தொருவன்றிரண்முடிபிடுங்கி, விசையிறபாய்நதெனவிம்மிதம்விளைக்கும்—தடமலாப்படப்பைத்தண்டமிழ்க்காசிக, கடிநகா புரக்குங்கண்ணுதற்செல்வன் — வேம்புங்கடுவுந்தேம்பிழியாகச், செஞ்செவிகைப்ப யான்றெரித்தசின்மொழி—அஞ்செவிமடுத்தாங்கருளினனதனுல், வேத்தவையியப்பவிளைத்தேன்பில்கும்—தேத்தமிழ்தெளிக்குஞ்செந்நாப்புலவீர், மண்மகள்கவிகைத்தண்ணிழறுஞ்சப்—புரவுபூண்டிந் திரதிருவொடும்பொலிந்து, முடிவினுமுடியாமுமுநலங்கொடுக்கும்—செந்நெறிவினவுதிராயினின்னிசைப், பாத்தொடுத்தடுத்தபரஞ்சுடரை—நாத்தழும்பிருக்கவேத்துமினீரே.

இ-ள். உடைதிரைகங்கை நெடுந்துறையின் வலம்புரிஎன்ன—உடைந்த அலைகளையுடைய கங்கையாகிய நெடியநதியின் துறையிலுள்ள வலம்புரிச்சங்கைப்போல, ஆங்குஇடம்புரி திங்கள் வெள்ளிவீழ அன்னவரிநிலா பரப்பும்பொன்வீழ அன்னபுரிசடை கடவுள்—அக்கங்கையைத் தனக்கிடமாகவிருக்கும் சந்திரன்வெண்பொன்விழுதைப்போல வரிநிலவைப்பரப்புஞ்செம்பொன் விழுதையொத்த முறுக்கமைந்த சடாமுடியையுடைய தேவர்தலைவனும், முடிவுபடாத கடவுள் படப்பூண்—படங்கிய [illegible]த்தையுடைய நாகணிந்த தெய்வத்தன்மைவாய்ந்த பஞ்சசர்ப்பாபரணம், சுறங்குஎன்ன சுழலுங்கால்விசைக்கு ஆற்றாது—காற்றடிப்பாலர சுழலுங்காற்றின் வேகத்திற்காற்றாமல், உமிழ்தருகுருதி திரள்தெறித்தால் அங்கு—உமிழும் இரத்தத்திரட்சியைச்சிந்துகின்றாற்போல, திசைதொறும் தெறித்த திரள்மணி முகடுகள்—திசைகள் தோறுந்தெறித்த இரண்டு இரத்தினக்கட்டங்களை, வானேறுதப்ப வெரிநில் தாக்கலும்—இடியேற்றையொப்பத்தம்முதுகின்மேலாமாக, எண்திசைகளிறுஉம்கையெடுத்துவீறிட—எட்டுத்திக்கிலுமுள்ள யானைகளுங்கையைமேலேதூக்கியலற, தெய்வநாடகம்செய்வனைக மைக்கதன்—தெய்வத்தன்மையையுடையபவுரிக்கூத்தைச்செய்யுமவேதசம்பந்தனைத்திருக்கூத்துடையவரும், வரைபகபாயும்வாநரக்குழாத்து—மலைபிளவுபடப் பாயுங்குரங்கின் கூட்டத்தில், ஒருகருமுகமந்தி காலவிசைத்து எழுந்து அமுக்காய சமூகன்விழுக்குலைபறித்துபடாதருதோற்றம்—ஒருகரியமுகத்தையுடைய பெண்குரங்கு காலவிசைகொண்டெழுந்து பழுக்காய்நிறைந்தாமுகனது பெரியகுலையைக்கொத்தோடு பறித்துச்செல்லுங்காட்சி, சுடர்வாள்செம்மல் தசமுகத்துஒருவன் திரள்முடிபிடுங்கி விசையில்பாய்ந்தால் என்னவிம்மிதம் விளைக்கும் தடமலர் படப்பை தண்டலை காசிகடிநகர்புரக்கும் கண்ணுதல்செல்வன்— சூரியன்புத்திரனாகிய சுக்கிரீவன் பத்துத்தலைகளையுடைய இராவணனது திரண்டகிரீடங்களைப்பறித்துவிசையோடு பாய்ந்தாற்போல வதிசயத்தைவிளைக்கும் தடாகங்களையு மலர்களையுமுடைய மருதநிலம் புறத்திலுள்ள சோலைசூழ்ந்த காசியென்னுங்காவல் பூண்டநகரினைப்பாதுகாக்கு நெற்றிக்கண்ணையுடைய செல்வருமாகியஇறைவர், வேம்புஉம்கடுஉம் தேம்பிழி ஆக— வேம்பும் கடுக்குமினியதேனாக, செம்செவிகைப்பயான் தெரித்தசிலமொழி அஞ்செவிமடுத்து ஆங்குஅளித்தனன் — மாணிக்கக்குண்டலத்தையணிந்த திருச்செவிகளைப் பெறச்சிறியேன் பாடியபருப்பொருளமைந்தசொல்லாலமைந்த பாடலைத்திருச்செவியுள்நிறைத்து அப்பொழுதே கருதியதைக் கொடுத்தருளினர், அவையில்வந்து அவைவியப்ப விளைதேனபிலக்கும் தேன்தமிழ்தெரிக்கும் செந்நாப்புலவீர் — அரசசபையிலுள்ளோர் திகைப்பிக்க மன்னரிசைக நவரசஞ்சொரிந்துயர்ந்தனிய செய்யுள்களைப்பாடுஞ்செவ்வேபேறிய நாவையுடையவர்களே, மண்மகள்கவிகை தண்நிழல் துஞ்ச புரவுபூண்டு—(இம்மையில்) பூதேவிதவளக் குடையின் தண்ணிய நிழலில் துயில்கூர நிலவுலகையோம்பி, இந்திர திருவொடுஉம் பொலிந்து—இந்திரசெல்வத்தோடுமவிளங்கி, முடிவின்உம் முடியாதமுழுநலம்கொடுக்கும் செம்மைநெறிவினவுதிர் ஆயின்—(மறுமையில்)ஊழியிலுமழியாத பேரின்பத்தைத் தந்

தருளும் நன்னெறியைவ்வையுயராளுல், இன்இசைபாதொடுத்து—இனியஇசையமைந்த செய்யுளைத்தொடுத்து, அடுத்தபரஞ்சுடரை நாதழும்புஇருக்களத்துமின்—(அடியவர்க்குஅருள) அடுத்தருளும்அவ்விறைவரை நீங்கள்நாவில்தழும்பேறவாழ்த்துங்கள் (கூறியவண்ணங்கைகூடும்என்றபடி)

சடையிலணிந்த கங்கையென்பதுதோன்ற ஆங்கிடம்புரிதிங்கள்எனவும், கறங்கெனச் சுழலும்பவுரிக்கூத்தென்பது தோன்றக்கறங்கெனச் சுழல்கால் எனவும்,ஸ்ரீபஞ்சாக்கரத்திரு நடனமென்பதுதோன்ற வைதிகக்கூத்தன்எனவும்,வேம்பினும்விடத்தினுமிக்கசைப்புடைய தென்பதுதோன்றத் தேம்பிழியாகவெனவுங்கூறினார். வேந்தலை வேத்தலை வலித்தல்விகாரம். கல்[illegible]கம் அந்தாதிமுதலியன நூல்முகத்துள்ள முதலசை அந்நூல்களினிறுதியில் வரத்தொடுப்பதுமுறையாதலால்நீர்கொண்ட எனமுதலிலெடுத்து இறுதியிலேத்துமினீரேயென்றார். (௧௦௦)

முற்றுப்பெற்றது.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௫	௧௧	பலிக்கலனே	அணிகலனே
௬	௨௪	றுரிவது	திரிவது
௯	௩௦	கம்மை	கம்பை
௮	௯	கூறுதலொ	கூறுதலுமொ
௧	௩௧	தருட்டை	சட்டை
௧௯	௯	முடிச்சுவடு	முலைச்சுவடு
௧௮	௧௧	ஒருன்றை	ஒருன்றே
௪௨	௨௮	நிழல்வாய்ந்த	நிழல்வாய்ந்தவாழை
௫௫	௩	உயிரொன்றை	நாணமொன்றை
௫௮	௭	ஒழித்து	ஒளித்து
௯௪	௨௪	வந்ததிருமால்	வந்து

குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்

பாண்டிநாட்டில் சிறந்தோங்கும் ஸ்ரீவைகுண்டமென்னுந் திருநகரில் வேளாளமரபில் அவதரித்துக் குமரகுருபரர் என்னத்தேக நாமம்பூண்டு ஐந்துவயதாகுமளவும் மூங்கையாயிருந்ததைத் தாய்தந்தையர்கண்டு மிக்க கவலைகூர்ந்து திருச்செந்தூர் முருகக்கடவுள் திருவடிக்கீழ்ச் சரண்புகுவித்தனர், அவர் திருவருளால் வாய்திருந்திச் சகலகலையும் ஓதாதுணர்ந்து திருச்செந்தூர்க்கலிவெண்பா, வெள்ளைக்கிழத்தி மாலை, மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ் பாடியருளித் திக்குவிசயங்கொள்ள வெழுந்தருளுங் காலையில், அங்கயற்கண்ணம்மையார் அப்போது அரசு செய்திருந்த திருமலைநாயுடு கனவிலெழுந்தருளி நமதன்பன் எம்மேற் பிள்ளைத்தமிழொன்று செய்து இம்மதுரைக்கு வருகின்றனன் அவனையுபசரித்து நம்மேற்பாடிய பிரபந்தத்தை நின்னவைக்களத்து அரங்கேற்றுவிப்பாயென்றருளி மறைந்தருளினர், அரசன் விழித்தெழுந்து பேரானந்தமடைந்து அவரை யெதிர்கொண்டுபசரித்து தனது அவைக்களத்தில் அரங்கேற்றஞ் செய்விக்குங்காலையில் "அப்பிள்ளைத்தமிழில்" "மதுரைத்துரைமகள் தாலோதாலேலோ" எனவருமிடத்தில் அவ்வரசன் மகிழ்கூர்ந்து யம்விம்மிப் புளகிக்க இருக்கச்சமுகத் தமது நகரத்திற் சிலநாள்வசிக்கக் குறையிரந்து ஓர்நாள் ராஜசாலையிற் போஜனம் பொருந்துணையத்தில் என்னமுத்திரை யிடலாமென்று தமது ராஜகாரியத்தில் சமயிந்தியாயிருந்த பிள்ளைப்பெருமாளையங்காரை நோக்கினவுடன் கருடமுத்திரை யிடலாமென்று கூறினர், அதுகேட்டு அவ்வரசர் குமரகுருபரசுவாமிகளை வினவக் கவிபொருள்படக் கருடவிலச்சனையிட்டால் வாடமிடும் விடையிலச்சனையிட்டால் "பாய்ந்தேறும்" என்றருளினர், அவ்வாறே முத்திரித்து பசரித்து வருங்கால் சுவாமிகள் மதுரைக்கலம்பகம் அருளிச்செய்து அங்குநின்றெழுந்தருளுங்காலையில் அங்கயற்கண்ணம்மையார் காட்சிதந்து புள்ளிருக்கும் வேளூர் "இளையபிள்ளையார்" மேல் ஒருபிரபந்தஞ்செய்க, எங்குநின்வாக்குத் தடைபடுமோ அங்குள்ளமூர்த்தியே நினக்குக்குருமூர்த்தமாமெனவருளி மறைந்தருளினர், அத்திருவருள்வசத்தராய ஆநந்தபாஷ்பம்பெருக அங்குநின்று புள்ளிருக்கும்வேளூருக்குச்சென்று இளையபிள்ளையாராகிய முருகக்கடவுளை வணங்கி முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடியருளி அங்கு நின்றுஞ் சிதம்பரத்திற்குச்சென்று நடராசபெருமானை வணங்கிச் "சிதம்பரச்செய்யுட்கோவை, மும்மணிக்கோவை" செய்தருளித் திருவாரூரையடைந்து தியாகேசரை வணங்கி "திருவாரூர்நான்மணிமாலை" திருவாரூருலா செய்தருளி யிடையிலுள்ள பலவிடங்களிலுமுள்ள கல்வியில்வல்லோர் பலரையும்வென்று தருமபுரத்திற்குச்சென்று அக்காலத்திலிருந்த மடாதிபதிகளாகிய ஸ்ரீமாசிலாமணித்தேசிகரை அடைந்து தமது கல்வியின் வன்மையைக்காட்ட, ஞானாசிரியரா

னிய அத்தேசிகமூர்த்தி பெரியபுராணம் வருமோவென்று வினவியருள, வருமென்று தடுத்தாட்கொண்ட புராணத்தை யெடுத்து உபந்யாசஞ்செய்து வரும்போது "ஐந்துபேரறிவுங் கண்களேகொள்ள" என்னுமுதனினைப்புடைய திருப்பாசுரத்தில் தடைபட்டது, அம்மையாரருளிய திருவருளைக்கருதி அக்குருமூர்த்தியைவணங்கி ஞானாசாரியர் நீரேயடியேனுக்கு உபதேசித்தருளவேண்டுமெனக்குறையிரந்து நிற்ப, அக்குருமூர்த்திதிருக்கடைக்கணோக்கத்தாலும் பரிசத்தாலு நின்மல மாக்கிச் சிவஞானோபதேசஞ் செய்தருளினர், உபதேசம்பெற் றாரா வன்பமீதூரத் திருவடியை வணங்கிப் "பண்டார மும்மணிக்கோவை" என்னும் ஞானரசமொழுகும் ஒருதிவ்ய பிரபந்தத்தைத் திருவடிக்கீழ்ச்சாத்திச் சிலநாளங்குவசித்தனர், அக்குருமூர்த்திகளவர்க்குச் சங்காபிஷேகஞ்செய்து காசிக்குச்சென்று அங்குள்ள தேவாலய விசாரணைசெய்திருக்கவெனக் கட்டளையிட் டருளினர் அக்கட் டளையைச் சிரமேற்கொண்டு பணிந்து அங்குநின் றும் காசிக்குச்சென்று வசித்தருளுங்காலையில், அக்காலத்துங் கரசியல்செய்த நவாபு ஒருவனை இச்சுவாமிகள் மான்மியத்தைக் கேட்டு நாமனுப்புவனவற்றைத் தம்முடைய சுவாமிக்கு நைவேத்யப்பாரா வென்று தமக்குத் தெரிவித்தவர்க்குச் சொல்லியனுப்ப, அவர்கள் வந்துசொன்னதற் கிசைந்ததை யவ்வரசன் கேள்வியுற்று மாமிசாதியுண்டிகளை "விசுவநாதர்" சந்நிதிக்கனுப்பக் குமரகுருபரசுவாமிகள் தெரிந்து தம்மனத்தில் புனிதமுடைய பொருளாகுகவெனக் கருதிய அன்றே, யவைகள் மாங்கனிமுதலிய முக்கனிகளாகவும் மல்லிகைமுதலிய மலர்களாகவும் சமைந்திருக்க, அவற்றைச் சிவபிரானுக்கு நைவேத்தியஞ் செய்து அரசனிடத்துக்கு அனுப்புவித்தனர், அரசன் வியப்படைந்து அவர்க்கு மடாலயமுதலிய வறைக கட்டுவித்துச் சிவதருமத்தை யோம்பப் பலவுதவிகளையுஞ் செய்வித்தனன், "காசிக்கலம்பகம்" செய்து திருக்குறளின் கருத்தைச் சுருக்கி "நீதிநெறிவிளக்கம்" என ஒருநீதிநூலையும் உலகினருய்யச் செய்தருளிச் சிலநாள் சிவயோகநிட்டையிலிருந்து சிவபெருமானார் திருவடி நிழலிற்கலந்தனர் இவர்காலம் நூற்றெழுபது வருடத்திற்கு முன். இவர் செய்தருளிய திருப்பிரபந்தங்கள் இங்குக்காட்டிய பன்னிரண்டுமே.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41